[illegible]

[illegible] 12 [illegible] 7

14 Jan 1927

[illegible], NISAB
N 27.12.7
187477

பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 12 | அக்ஷய௵ தைமீ கஉ | 1927௵ ஜனவரிமீ 14உ | பகுதி 7

## கடவுள் வணக்கம்.

பட்டப் பகற்பொழுதை யிருளென்ற மருளர்தம்
பக்ஷமோ வெனது பக்ஷம்
பார்த்தவிட மெங்கணுங் கோத்தநிலை குலையாது
பரமவெளி யாக வொருசொற்
றிட்டமுடன் மௌனியா யருள்செய் திருக்கவுஞ்
சேராம லாராகநான்
சிறுவீடு கட்டியதி னடுசோற்றை யுண்டுண்டு
தேக்குசிறி யார்கள்போல
நட்டனைய தாக்கற்ற கல்வியும் விவேகமும்
நன்னிலைய மாகவுன்னி
நானென்று நீயென் றிரண்டில்லை யென்னவே
நடுவே முளைத்த மனதைக்
கட்டவறி யாமலே வாடினே னெப்போது
கருணைக் குரித்தாவனோ
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணா கரக் கடவுளே. (1)

---

சீராருந் தெய்வத் திருவருளாம் பூமிமுதற்
பராதி யாண்ட பதியே பராபரமே. (2)

---

கண்ணாரக் கண்டோர் கருப்பொருள் காணமலருள்
விண்ணா டிருந்தவின்ப வெற்பே பராபரமே. (3)

---

சிந்தித்த வெல்லாமென் சிந்தையறிந் தேயுதவ
வந்த கருணை மழையே பராபரமே. (4)

---

ஆரா வமுதே யரசே யானந்த வெள்ளப்
பேராறே மோனப் பெருக்கே பராபரமே. (5)

## அரும்பொருள் விளக்கம்.

1. விபரீத வுணர்ச்சிக்கு இடங்கொடாதிருந்தும், அரிதிற் பெற்ற உபதேசத்தையும், கல்வி கேள்விகளையுங்கொண்டு மனதை யடக்கும் வழியறியாமல் அது சென்றபடியே சென்று மெலிவுற்ற யான் எப்போது இறைவனுடைய கருணைக்குப் பாத்திரமாவேன் என்று இப்பாடலில் ஆசிரியர் வருந்துகிறார்.

பட்டப்பகல் = கடும்பகல்.
மருளர் = மயக்கபுத்தியுடையவர்.

பார்த்தஇடம் எங்கணும் கோத்தநிலை குலையாது பரமவெளியாக—திருவருளானது ஒன்றாயிருந்தும் அகண்டாகார பரிபூரணமாய்ச் சர்வான்மாக்களுள்ளும் பிறிவறநின்று உயிர்க்குயிராய் விளங்கிநிற்றல்.

ஆர் ஆக = வேறு யாராகவோ.
அடுசோற்றை = சமைத்த (மணல்) சோற்றை.
நட்டனையதாக் கற்ற = நடுவுநிலைமையாகக் கற்றுக்கொண்ட
நல் நிலையம் = நல்ல நிலையிடம்.
உன்னி = நினைத்து.

2. திருவருளாம் பூமிமுதல் பாராதி = திருவருளென்னும் பூமிமுதல் நிலவுலகம் முதலாகிய பூமிகளை. திருவருளாம் பூமி என்றது முப்பத்தாறு தத்துவங்களுக்கும் ஆதாரபூதமான சத்தியினை.

3. இறைவனே! உன்னைக் கண்ணாரத் தரிசித்தவர்கள் மீண்டும் பிறவாதபடி யாதரித்தருள்வாயாக.

கரு பொருள் = பிறப்பென்னும் உண்மை.
விண் ஊடு = சிதாகாயத்தில்.
வெற்பு = மலை.

4. எண்ணியவை யாவும் என் கருத்தின்படி அருள்புரியவந்த அருளாகிய மழையே.

5. தெவி[illegible] அமுதமே! தலை[illegible]ன்பப்பெருக்கு எடுத்தோடும் பெரிய நதியே! [illegible]ன்ன வெள்ளமே! (என்[illegible] ரக்ஷிப்பாயாக என்றபடி).

# ஆனந்தபோதினி

அக்ஷயஹு தைமீ கஉ

## தர்மத்தில் அதர்மம்.

அறந் தழைத்தோங்கும் புண்ணிய நாடாகிய நம் பாரத பூமியில் தொன்றுதொட்டே நம் பெரியார்கள் என்றென்றும் நிலைபெற்று நடந்து வருமாறு பல தருமங்களை ஏற்படுத்தி யிருக்கின்றனர். அவை எக்காலும் அழியாதிருக்க மூலதனங்களும், ஸ்தாவர சங்கமசொத்துக்களும் வைத்துச் சென்றிருக்கின்றனர். இக்காலத்திலும் பல புண்ணியாத்துமாக்கள் பற்பல தர்ம ஸ்தாபனங்களையும், புண்ணியச் செயல்களையும் நடத்தி வருகின்றனர். ஆட்சிமுறையை மேற்கொண்டாராலும் அநேகம் அறச்செயல்கள் நடத்திவரப்படுகின்றன.

இத்தகைய பெரியார்களால் முற்காலத்திலும் தற்காலத்திலும், மனிதர் வணங்கிக் கடைத்தேறுதற்கு எண்ணிறந்த தேவாலயங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன; திக்கற்ற ஏழைகளுக்கு அன்னங் கிடைக்குமாறு பற்பல தர்மசத்திரங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன; தண்ணீர்ப்பந்தல்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன; சுமைதாங்கிகள் கட்டப்பட்டிருக்கின்றன; இருமருங்கும் மாங்களடர்ந்த சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன; வைத்தியசாலைகள் வறுமையுற்ற மானிடரின் வன்பிணி தீருமாறு ஏற்படுத்தப்பட்டுள்ளன; கல்விச்சாலைகள் எண்ணில கட்டப்பட்டுள்ளன; நீதிமன்றங்களும் நிறுவப்பெற்றிருக்கின்றன; ஜனங்களுக்கு வரும் துன்பத்தைப் போக்குதற்கு அதிகாரவர்க்க வேலைக்காரர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

"அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு"

என்னுந் தமிழ்ப் பொதுமறைக் கருத்தினை நன்குணர்ந்த நம் பெரியார், அறமே மனிதரால் செய்யப்படும் செயல்களுட் சிறந்ததெனத்

187477

துணிந்து இவ்விதம் எண்ணிறந்த அறச்செயல்களைச் செய்து சென்றிருக்கின்றனர்; செய்து வருகின்றனர்; மேலும் செய்வார்கள். இங்ஙனம் புண்ணியம் கிடைக்கவேண்டுமென்னும் நோக்கத்துடன் ஆன்றோர் அமைத்துச்சென்ற, அமைத்து வருகின்ற தருமகாரியங்கள் இப்போது நடந்துவரும் விதத்தைக் கவனித்தால் அஃதறிஞர்க்கு அதிருப்தியை யுண்டாக்கக்கூடியதா யிருக்கின்றது. புண்ணிய விருத்தியின்பொருட்டுச் செய்துவரப்படும் தர்மகாரியங்களில், சில குறுகிய அறிவுடையார் புகுந்து அத்தர்மச்செயல்களை அதர்மச் செயல்களாக்கி வருகின்றனர். அவை எண்ணில; அவற்றால் மனிதர்க் குண்டாம் துன்பங்களோ பல:

சில கோவில்களில் சுவாமியைத் தரிசிப்பதற்கு, அங்குள்ள அக்கிரமஸ்தர்களால் பக்திமான்களிடம் கூலிவாங்கப்படுகின்றன; சில தேவாலயங்களில் தனவந்தர்களும், அதிகாரவர்க்கத்தினரும் எவ்வித இடைஞ்சலுமின்றி மூலஸ்தானம் புகுந்து சுவாமி தரிசனம் செய்கிறார்கள்; ஏழை மனிதர் அங்குள்ள பில்லைச்சேவகரால் தள்ளப்படுகின்றனர்; உயர்ந்த கோவில் பிரசாதங்களெல்லாம் பணக்காரர்களுக்கும், அதிகாரவேலைக்காரர்க்கும், அர்ச்சகர்க்குச் சிநேகமானவர்க்கும் இலவசமாக எளிதில் கிடைக்கின்றன. பணமில்லாத பக்திமான்களுக்கு, (அவர்கள் காசு கொடுப்பதாயிருப்பினும்) அவற்றின் வாசனையும் கிடைப்பது அருமையாயிருக்கின்றது. சில ஸ்தலங்களில் அர்ச்சகர்கள், பக்திமான்களிடம் அர்ச்சனைக்கென்றும், அபிஷேகத்துக்கென்றும் பெருந்தொகைப் பணத்தை வாங்கிக்கொண்டு அவற்றைச் சரிவர நிறைவேற்றுவதில்லை; சுவாமி காரியத்துக்கென்று பக்திமான்களால் கொடுக்கப்பட்ட பணம் பூஜகரின் சொந்த உபயோகத்திற் காகிவிடுகின்றது. சில தெய்வபக்தியாளர் தேவாலய உற்சவத்திற்குக் கொடுக்கும் பணத்தைக் கோவில் காரியஸ்தர்கள் முழுதும் செலவிடாமல் அதில் சிறிது பாகஞ் செலவிட்டுப் பெரும்பாகத்தைத் தங்கள் சொந்தக்காரியத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்கிறார்கள். தூரதேசங்களிலிருந்து முக்கிய ஸ்தலங்களுக்கு சுவாமி தரிசனத்தின்பொருட்டு அளவற்ற பணம் செலவு செய்துகொண்டுவரும் உண்மைப் பக்திமான்களை, அந்தப் பெரிய தேவஸ்தலங்களிலுள்ள குருக்கள்மார்களும், அர்ச்சகர்களும், பூஜகர்களும் நெடுந்தூரம் ரெயில் பிரயாணஞ் செய்துபோய் எதிர்கொண்டழைத்துவந்து, அவர்கள் தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்வதற்கென்று தீர்த்தமொன்றிற்கு ஐந்து, பத்து ரூபாய்கள் விகிதங்களாகவும், அர்ச்சனை அபிஷேகங்களுக்கென்று நூறு இருநூறு ரூபாய்கள் விகிதங்களாகவும், அளவற்ற பணங்களை அவர்களிடம் கவர்ந்துகொள்கிறார்கள். இராமேஸ்வரம் முதலிய ஸ்தலங்களில், யாத்திரைக்காரர்களை எதிர்கொண்டழைத்து அவர்களிடம் பணம் பறிப்பதற்கென்றே ஆங்காங்குள்ள பணக்காரர்களும், அர்ச்சகர்களும் பற்பல குமாஸ்தாக்களை நியமித்திருக்கின்றார்கள். இவர்கள் உண்மையாக யாத்திரைக்காரர்களுக்குத் துணைபுரிபவர்களைப் போன்று நடித்து அவர்களிடம் அளவற்ற பணத்தைக் கொள்ளையடிக்கிறார்கள். நியாயமாக அவர்கள் சுவாமி தரிசனம் செய்யுமாறு செய்து, தங்கள் பிரயாசைக்கு எவ்வளவு நியாயமாகப் பெற்றுக் கொள்ளலாமோ அவ்வளவு இவர்கள் பெற்றுக்கொள்வதில்லை. தெய்வத்தின் பெயரைச்சொல்லி, வருவோரிடம் திரவியம் கவர்வதையே நோக்கமாகக்கொண்டிருக்கின்றனர்.



அன்னதான சத்திரங்களில், பசிப்பிணியால் வருந்திப் பரிதாபத்துடன் வரும் ஏழைகளுக்கு அன்ன மிடுவதில்லை; அங்குள்ள காரியஸ்தர்கள் அவர்களுக்கு அரையணாவோ, காலணாவோ, ஒரு பிடி அரிசியோ கொடுத்து அவர்களைத் துரத்திவிடுகிறார்கள்; விலாப் புடைக்கத் தின்று பருத்திருக்கும் சில பணக்காரருக்கும், அதிகாரவர்க்கத்தினர்க்கும், சத்திர உத்தியோகஸ்தருக்கும் வடைபாயசத்தோடு சட்டதிட்டமான சாப்பாடு அட்டியின்றிப் போடுகின்றார்கள். பசிக்கவலையில்லாத பணக்காரர் சிலரும், அதிகாரஸ்தர் பலரும் ஊர்ப்பிரயாணம் புறப்படுங்காலத்தில் நடுவழியில் உள்ள சத்திரங்களில் நல்ல சாப்பாடு சாப்பிடலாம் என்னும் உறுதி யுடனேயே புறப்பட்டு வருகின்றார்கள்; ஏழைகளுக்கு அமைக்கப்பட்ட சத்திரங்கள் இவ்வாறு பசியறியாப் பணக்காரருக்குப் பயன்படுகின்றன. சில சத்திரங்களில் உள்ளோர் வகுப்புப்பேதம் பாராட்டிச் சில வகுப்பாருக்குமட்டும் சாப்பாடு போட்டு, மற்றையர் பசியால் கூப்பாடு போட்டும் போகச்செய்கின்றனர். (எல்லாச் சத்திரங்களிலுமா இத்தகைய அநீதச்செயல்கள் நடக்கின்றன? என்று சிலர் குறுக்குக் கேள்விகள் கேட்கலாம்; சில சத்திரங்களில் தர்ம கர்த்தாக்கள் ஏழைகளுக்குச் சாப்பாடுபோட்டு வந்தாலும் பெரும்பான்மையான சத்திரங்களில் நியாயமற்ற அன்னதானமே நடந்துவருகிறதென்பது பாரபக்ஷமற்ற அறிஞர்களுக்கு விளங்காமலிராது).

தண்ணீர்ப்பந்தல்களில் கொஞ்சம் இடம்பமாகவரும் ஆசாமிகளுக்கு நல்லமோரும், நெல்லிக்காய் ஊறுகாயும், வெயிற்காலங்

களில், தருமம் நடத்துவோரால் வழங்கப்படுகின்றன; ஏழை மனிதர்க்கு வெறுந் தண்ணீரும் ஊற்றுவதற்குச் சிரமப்படுகிறார்கள். சிலர் தண்ணீர்ப்பந்தல் தர்மத்தின் பேரைச்சொல்லிப் பலரிடம் பணம் வாங்கிச் சேர்த்து மெத்தைவீடு கட்டிக்கொண்டு தண்ணீர்ப் பந்தலென்ற சிந்தனையே இல்லாமலிருந்து விடுகின்றனர்.

புற்பல மடாலயங்களிலுள்ள தர்ம போஷகர்கள், சாதுக்களுக்கும், தெய்வத்திற்கும், கல்வி விருத்திக்கும், வேறு சில தர்மங்களுக்கும் முன்னோர்களால் வைக்கப்பட்ட பூஸ்திதிகளையும், மூலநிதிகளையும் அகிருத்தியமான வழிகளில் தங்கள் நோக்கம்போல் செலவிட்டு அறச்செயல்களை அறவே மறந்திருக்கின்றனர்; அவ்விடங்களில் சற்பாத்திரங்களாயுள்ளோர் எவ்வுதவியும் பெறாமல் ஏங்குகின்றனர்; உலகத்தை ஏமாற்றும் போலிமாக்களும், பொய்ப்பட்டதாரிகளும், துர்ச்செயலுடையாரும் வேண்டுவனபெற் றின்புற்று மிகு மகிழ்ச்சி யடைகின்றனர்.

தர்மக்கல்விச்சாலைகளில் சாப்பாட்டுக்கும், சம்பளத்திற்கும் பணமின்றிக் கஷ்டப்படும் ஏழைப் பிள்ளைகளுக்குப் பெரும்பான்மையும் சாப்பாடு போட்டுக் கல்வி போதிக்கும் சகாயம் கிடைப்பதில்லை. சிபாரிசு உள்ள பிள்ளைகட்கே (கஷ்டமில்லா திருந்துங்கூட) அவ்வுதவி கிடைக்கின்றது.

தர்ம வைத்தியசாலைகளிலோ, உத்தியோகத்திலுயர்ந்தவர்க்கும், செல்வவந்தர்க்கும், படாடோபக்காரருக்கும், கைக்கூலி கொடுப்போருக்கும் மிக்க உபசரிப்புடன் வைத்தியம் செய்யப்படுகின்றது. அங்குள்ள வேலைக்காரர்கள் ஏழைகளைச் சிறிதும் கவனிப்பதில்லை; மத்தியானம்வரை காக்க வைக்கின்றனர்; கஷ்டமான நோயுள்ளவர்கள் தங்கள் துன்பத்தைத் தெரிவித்துக்கொள்ளும்பொருட்டு உட்புகுந்தால் சேவகர்களால் பிடர்பிடித்துத் தள்ளப்படுகின்றனர். அச்சேவகர் அந்த ஏழை மனிதரைப் பேசத்தகாத விதமாகப் பேசித் திட்டுகின்றனர்; நெஞ்சு திடுக்கிடும்படி பேசுகின்றனர்; வியாதியஸ்தரிடம் தங்கள் முழு அதிகாரத்தையும் காட்டி விடுகின்றனர்.

நீதித் தீர்ப்புக்கென்றேற்பட்ட நியாயஸ்தலங்களில் மனிதர், தங்கள் குறைகளைச் சொல்லி முறையிட்டுக்கொள்வதென்றால் அது சுலபமாக முடிவதில்லை; அதன் சட்டதிட்டங்களும் அவர்களால் தெரிந்துகொள்ளுதல் இயல்வதில்லை. ஒரு துஷ்டனால் அடிக்கப்பட்டவன் தன்னுடைய துன்பத்தை நீதிமன்றத்தில் தெரிவிப்ப



தற்கு மிகுந்த பணம் செலவிடவேண்டும்; நியாயவாதிகளை ஏற்படுத்தவேண்டும்; இவ்வளவு பிரயாசையுடன் அத்துன்பத்தை நியாயஸ்தலத்தில் எட்டவைத்தாலும் அதற்குப் பரிகாரம் பெறுவதற்குப் பல மாதங்களோ வருடங்களோ கழிந்துவிடுகின்றன. முடிவிலும் லாட்டரிபோல் அனுகூலம் கிடைத்தாலும் கிடைக்கும்; பிரதிகூலம் கிடைத்தாலும் கிடைக்கும். சில சமயங்களில் கிடைக்கும் முடிவுகளால் அவஸ்தை யடைந்தவர்க்கு மேலும் அல்லலுண்டாகி விடுகின்றது.

ஜனங்களுக்கு நன்மைபுரிவதற்கென் றேற்பட்ட வேலைக்காரர்கள், அவ்வாறு சகாயம் செய்வதில்லை. சிலர், தாங்கள் துன்பமுற்று அதை அவர்களிடம் தெரிவித்தால், அவர்கள் அதற்குத்தக்க பரிகாரம் செய்ய நாடுவதில்லை. தங்களுக்கு ஏதேனும் வருவாய் கிடைக்கக்கூடிய வழியையே பார்க்கிறார்கள்.

இப்படியே தர்மநீதிகள் நடக்கும் ஒவ்வொருவகையிலும் அதர்மநீதிகளே நடந்து வருகின்றன; இது காலபேதத்தாலும், மனிதபேதத்தாலும் நடப்பதே. நல்லோரால் ஏற்படும் நற்காரியங்களெல்லாம் தீயோர் பார்வையால் தீச்செயல்களாக மாறிவிடுவது இயற்கையே. எனினும், நாட்டின் நன்மையைநாடும் பெரியோர்கள் இவ்வாறு தர்மத்தினூடே தலையெடுக்கும் அதர்மத்தை வேரறக் களைந்து உண்மையான தர்மத்தை நிலைநிறுத்த முற்படவேண்டும். இங்குக்கூறிய அநீதிச்செயல்களில் சில நீக்க முடியாதனவா யிருப்பினும் பல எளிதில் அகற்றக்கூடியனவே. அவைகளையேனும் அகற்ற அறிஞர் முயலாமலிருப்பது அழகாகாது. மறநெறிகுன்றி அறநெறி தழைத்தோங்க ஆதியந்த மற்ற அற்புதமூர்த்தி அருள்செய்வானாக.

ஓம் தத் ஸத்.

## தேசநலப் பகுதி.

### மகாத்மா காந்தியின் சரித்திரம்.

#### பிறப்பு.

நம் பாரத நாட்டில் தோன்றிய பெரியார்களுள் காந்தி அடிகளும் ஒருவர். உலகம் போற்றும் அந்த உத்தமரின் சரித்திரத்தைத் தமிழர்கள் தெரிந்துகொள்ளவேண்டியது மிகவும் அவசியமாகும். பம்பாய் மாகாணத்தில் போர்பந்தர் என்ற ஒரு சிறிய சமஸ்தானம் இருக்கின்றது. அந்த சமஸ்

தானத்திலுள்ள ஒரு கௌரவம் வாய்ந்த வைசிய குடும்பத்தில் 1869-ம் வருஷம் அக்டோபர்மாதம் 2-ந் தேதி யன்று மோகனதாஸ் காந்தி பிறந்தார். அவருடைய தந்தையாரும், பாட்டனாரும் அந்த சமஸ்தானத்தில் திவான்களாக வேலைபார்த்து வந்தனர். காந்தியின் தந்தையாரின் பெயர் கரம்சந்த் காந்தி. அவரது அன்னையின்பெயர் புத்திராவதியார். காந்தியடிகளின் பெற்றோர்கள் மிகுந்த மதப்பற்று உடையவர்களாகவும், தருமசிந்தனை யுள்ளவர்களாகவும் இருந்து வந்தார்கள். அப்படிப்பட்டவர்களுக்குப் பிறந்த குழந்தையைப்பற்றிக் கேட்கவும் வேண்டுமோ? மோகனதாஸ் காந்தி கரம்சந்த் காந்தியின் மூன்றாவது குமாரராவர். சிறுவயது முதல் மோகனதாஸ் காந்தி, ஒழுக்கத்தில் சிறந்தவராகவும், உண்மை பேசுவதில் விருப்பமுள்ளவராகவும், மிகுந்த பக்தியுள்ளவராகவும் இருந்துவந்தார்.

## படிப்பு.

காந்தியின் தந்தையான கரம்சந்த்காந்தி முதலில் போர்பந்தர் சமஸ்தானத்தில் திவானாக இருந்தார். ஒருசமயம் அவருக்கும் அச்சமஸ்தான மன்னவருக்கும் ஏதோ ஒருவிஷயத்தில் மனவருத்தம் ஏற்பட்டது. ஆகவே அவர் அந்த சமஸ்தானத்தைவிட்டு ராஜ்கோட் என்ற மற்றொரு சமஸ்தானத்திற்குச் சென்றார். அந்த சமஸ்தானத்தில் அவருக்கு முதல் மந்திரி வேலை கிடைத்தது. சமஸ்தான மன்னருக்கு அவரிடத்தில் அதிக மதிப்பும், அன்பும் இருந்தன எனவே அவருக்கு அதிகமான பூமியை அந்த மன்னர் ஜாகீராகக் கொடுத்தார். ஆனால் மோகனதாஸின் தந்தையார் அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். பல நண்பர்களின் வற்புறுத்தலுக் கிணங்கி அவர் சிறிது பூமியை ஏற்றுக்கொண்டார். முதல் முதலில் காந்தி அடிகள் இராஜ்கோட்டிலுள்ள உயர்தரபாடசாலையில் படித்துப் பிரவேசப் பரீட்சையில் தேறினார். பின்பு பவ நகரிலுள்ள சியாமளதாஸ் கல்லூரியில் சேர்ந்து கல்வி பயின்று வந்தார். மோகனதாஸுக்கு பன்னிரண்டாவது வயதிலேயே அவரது பெற்றோர்கள் கஸ்தூரிபாய் என்ற பெண்மணியைக் கலியாணம் செய்துவைத்தார்கள். தமது 17-வது வயதில் மோகனதாஸ் காந்தி சிறப்புடன் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறினார். இங்கிலாந்து சென்று பாரிஸ்டர் பரீட்சைக்குப் படிக்கவேண்டுமென்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. ஆனால் அவரது அன்னையாரும், உறவினர்களும், அதற்கு விரோதமாக இருந்தனர். கடைசியாக ஒரு ஜயின சந்நியாசியின் முன்பு மோகனதாஸ் குடிப்பதில்லை; புலாலுண்பதில்லை; பிறமாதரை நேசிப்பதில்லை என்ற மூன்று வாக்குறுதிகளைச் செய்து கொடுத்ததும் அவரது அன்னையார் இங்கிலாந்து செல்ல அவரை அனுமதித்தார்.

## இங்கிலாந்து வாசம்.

1888-ம் வருஷம் செப்டம்பர் மாதத்தில் காந்தி லண்டன் நகருக்குப் போய்ச் சேர்ந்தார். இங்கில்ாந்துக்குச் சென்றதும் முதலில் மோகனதாஸ் காந்திக்கு மேனாட்டவரின் நடை உடைபாவனைகளில் விருப்பம் அதிகரித்தது.



ஆகவே அவர் ஆங்கிலேயர்களின் நடையுடை பாவனைகளைப் பின்பற்றி நடக்க ஆரம்பித்தார். நாட்டியம் ஆடுவதற்கும், பிடில் வாசிப்பதற்கும் கற்றுக்கொண்டார். மேனாட்டவரைப்போல் பாடுவதற்கும், பிரஞ்சு பாஷை பேசுவதற்கும் கற்றுக்கொண்டார். ஆனால் சீக்கிரத்தில் அவரது வாழ்க்கை மாறிவிட்டது. ஒருநாள் மோகனதாஸ் ஒரு விருந்துக்கு அழைக்கப்பட்டார். அந்த விருந்தில் புலாலுணவு வழங்கப்பட்டது. புலாலுணவைப் பார்த்ததும் காந்தி அடிகள் தமது அன்னைக்குச் செய்துகொடுத்த வாக்குறுதிகளை நினைத்துக்கொண்டார். உடனே பேசாமல் எழுந்து வெளியே சென்றார். இது அவரது நண்பர்களுக்குப் பிடிக்கவில்லை. பின்பு அவர் இதுவரையில் தாம் நடத்திய வாழ்க்கை தவறானது என்பதை உணர்ந்து அன்றுமுதல் இந்தியரைப்போல் சாதாரணமான வாழ்க்கையை நடத்த ஆரம்பித்தார். மரக்கறி உணவை ஆதரித்துவந்த பலரின் சிநேகம் நம் காந்தி அடிகளுக்குக் கிடைத்தது. மரக்கறி உணவைப்பற்றியும், அதன் பெருமையைப்பற்றியும் பலர் எழுதிய நூல்களையெல்லாம் அவர் படித்து வந்தார். பகவத்கீதையையும், மற்றும் பல மத நூல்களையும் படித்துவந்தார். அவரது நண்பர்களில் சிலர் அவரைக் கிறிஸ்தவ மதத்தில் சேரும்படி வற்புறுத்தி வந்தனர். ஆனால் மோகனதாஸ் அதற்கு இணங்கினாரில்லை. பின்பு பாரிஸ்டர் பரீட்சையில் தேறி 1891-ம் வருஷம் இந்தியாவுக்குத் திரும்பிவந்தார். இதற்கு முன்பே அவரது அன்னையார் இறந்துபோனார். அன்னையின் மரணத்தைக் குறித்துக் காந்தி மிகவும் வருந்தினார்.

## பாரிஸ்டர் வேலை.

மோகனதாஸ் காந்தி முதலில் கொஞ்சகாலம் ராஜ்கோட் சமஸ்தானத்திலேயே பாரிஸ்டராகத் தொழில் நடத்திவந்தார். பிறகு அங்கிருந்து பம்பாய்க்குச் சென்று அங்கு பாரிஸ்டராகத் தமது நியாயவாதத் தொழிலை நடத்துவதற்கு ஆரம்பித்தார். பம்பாயில் இருந்தகாலத்தில் அவருக்கு குஜராத்தேசத்தைச்சேர்ந்த ராஜசந்திராவ்ஜி பாய் என்ற பெரியாரின் நட்புக் கிடைத்தது. ராஜசந்திரர் தாம் பிறருக்கு உபதேசிக்கும் வண்ணம் தமது ஒழுக்கத்தை அனுஷ்டானத்தில் நடந்து காட்டக்கூடிய உத்தமர். அவரது நட்பு காந்தி அடிகளின் வாழ்க்கையைச் சீர்ப்படுத்துவதற்குப் பெரிதும் துணையாக இருந்தது. அக்காலத்தில் போர் பந்தரில் இருந்த ஒரு கம்பெனிக்கு தென் ஆப்பிரிக்காவிலுள்ள பிரிட்டோரியா என்ற நகரில் ஒரு வியாபாரசாலை இருந்தது. அந்த நகரில் அக்கம்பெனியாருக்கு ஏற்பட்ட ஒரு பெரிய வியாஜ்யத்தை அங்குசென்று நடத்தும்படி அக்கம்பெனியின் முதலாளிகள் காந்தி அடிகளைக் கேட்டுக்கொண்டனர். அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி காந்தி அடிகள் தென் ஆப்பிரிக்காசென்று தாம் அந்த வழக்கை நடத்துவதாக ஒப்புக்கொண்டார்.

## தென் ஆப்பிரிக்கா விஜயம்.

காந்தி 1893-ம் ஆண்டில் அந்த வழக்கை நடத்துவதற்காகத் தென் ஆப்பிரிக்காவிற்குச் சென்றார். தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்கள் கேவல

மாக மிருகங்களைப்போல் நடத்தப்படுவதைக் கண்டார். அவர்களின் சுய மதிப்பையும், கௌரவத்தையும் காப்பாற்றவேண்டுமென்று உறுதிசெய்துகொண்டார். அவர் சென்றகாரியம் முடிந்துவிட்டது. தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்களின் வாக்குரிமையை ரத்துசெய்ய ஒரு சட்டம் தயாரிக்கப்படுவதைக் கேள்விப்பட்டார். அவரது யோசனையின்மேல் அம்மாதிரியான சட்டங்களை நிறைவேற்றக்கூடாதென்று இந்தியர்கள் கூட்டங்கூடி ஆக்ஷேபித்தனர். பின்பு மோகனதாஸ் காந்தியை தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்கள் தங்களுக்குத் தலைவராக இருந்து எல்லாக்காரியங்களையும் நடத்தும்படி கேட்டுக்கொண்டனர். அதற்கிணங்கி காந்தி அடிகள் நெட்டால் மாகாணத்திலுள்ள தர்பான்நகரில் இருந்து அங்கே தமது பாரிஸ்டர் தொழிலை நடத்தி வந்தார். சீக்கிரத்தில் சட்டஞானத்தில் சிறந்த அவர் அங்கே பெரும் புகழும் பெற்றார். இந்தியர்களும், சீனர்களும், ஜப்பானியர்களும் அவரிடமே தங்களது வழக்குகளைக் கொடுத்து வந்தார்கள். தம்முடைய தொழிலிலேயே அவர் முற்றும் கவனம் செலுத்தாமல் இந்தியர்களின் முன்னேற்றத்தைக்கருதியும் பல காரியங்களைச் செய்து வந்தார். நெட்டாலில் வேலைசெய்துவந்த இந்தியத் தொழிலாளர்களின் நன்மையைக்கருதி அவர் ஒரு பொதுச்சபையையும் கல்விச்சங்கத்தையும் ஏற்படுத்தினார். 1896-ம் ஆண்டில் அவர் தமது மனைவி மக்களை அழைத்துப்போக இந்தியாவுக்குத் திரும்பினார். இந்தியாவுக்கு வந்ததும் அவர் பல பெரிய நகரங்களுக்குச் சென்று அங்கு தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களின் நிலைமையைப்பற்றி விளக்கிப் பல பிரஸங்கங்கள் செய்தார். அவர் சொன்ன விஷயங்களையெல்லாம் ராய்டர் தந்தி நிருபர் மாறுபடுத்தித் தென் ஆப்பிரிக்கா முதலிய இடங்களுக்குச் செய்தி அனுப்பிவிட்டார். அதனால் தென் ஆப்பிரிக்காவிலிருந்த ஐரோப்பியர்களுக்கு காந்தியின் மீது மிகுந்த கோபம் ஏற்பட்டது. எனவே அவர்கள் இந்தியர்களையே தென் ஆப்பிரிக்காவைவிட்டு வெளியேற்றிவிடவேண்டுமென்று யோசித்தார்கள். 1896-ம் வருஷம் நவம்பர் மாதக் கடைசியில் காந்தி அடிகள் தமது மனைவி குழந்தைகளுடன் தென் ஆப்பிரிக்காவுக்குப் புறப்பட்டார். இந்தியர்கள் நிறைந்த மற்றோர் கப்பலும் அவர் சென்ற கப்பலுடன் சென்றது. தென் ஆப்பிரிக்காவின் கரைக்கு இவ்விரண்டு கப்பல்களும் வந்துசேர்ந்தன. அதிலுள்ள இந்தியர்களை வெள்ளையர்கள் இறங்கவிடாமல் தடுத்தனர். பின்பு அரசாங்க அதிகாரி ஒருவர் உத்தரவு கொடுத்ததன்மேல் இந்தியர்கள் தைரியமாகக் கப்பலில் இருந்து இறங்கினார்கள். காந்தி அடிகள் கப்பலைவிட்டு இறங்கிச் சென்றதும் பொது ஜனங்கள் அவர்மீது பாய்ந்து அவரைப் பலமாகத் தாக்கினார்கள். ஒரு ஐரோப்பிய போலீஸ் சூப்பிரின்டெண்டின் மனைவி அப்பொழுது குறுக்கிட்டு அவரைக் காப்பாற்றினாள். ராய்டர் நிருபரின் கூற்றினால் இப்படி நேரிட்டது என்பதைப் பிறகு அவர் உணர்ந்துகொண்டார்.

(தொடரும்.) திரு. கே. சு.

## காங்கிரஸும் ஹிந்து முகம்மதிய ஒற்றுமையும்.

ஒரு சிறு வீட்டில் இல்லறம் நடத்தும் தம்பதிகளுக்குள்ளும், அக்குடும்பம் நடைபெறுவதற்கான சாதனங்கள் பலவிருப்பினும் பரஸ்பர ஒற்றுமை பொருந்தியிருந்தாலல்லது அவர்கள் வாழ்வு இனிது நடைபெறாது. அதேபோல நாடாகும் பெரும்வீட்டிலும் நன்மைகள் பல ஆவதற்கு ஒற்றுமை என்பது இன்றியமையாதது. ஒருவீட்டில், தம்பதிகள், தாய் தந்தையர் குழந்தைகள் ஆன பலரிருக்கின்றனர்; பெரும் வீடாகிய நாட்டிலோ, ஹிந்துக்கள், முகமதியர்கள், கிரிஸ்தவர்கள், ஜைனர்கள் முதலான மதஸ்தர்கள் வசிக்கின்றனர்; இத்தகைய பாரதவீட்டிலிருக்கும் சகல மதத்தினரும் ஒற்றுமையுடன் வாழ்ந்தாலன்றி அவர்களுடைய முயற்சிகள் பயன்தருவனவாகா. ஒவ்வொருவருடைய மதப்பற்றுதல்களும் வெவ்வேறாயிருப்பினும் தேசநலம்—தேசசேவை—தேசபக்தி என்னும் கொள்கைக்காக அவர்கள் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். ஏன்? நாடு செழித்தால்தான் மதஸ்தர்கள் தத்தம் உரிமைகளுடன் வாழமுடியும். இந்த இரகஸ்யத்தை நமக்குணர்த்தி நமக்குள் ஓர் 'ஒற்றுமை தாகத்தை' உண்டாக்கினார் சாந்தகுணசீலராய்ச் சபர்மதியில் வாழும் காந்தியடிகள்; 'தேசசேவை' என்னும் போரை ஆரம்பித்தார் தாதாபாய்நௌரோஜி; அதற்கு ராஜஸ உணர்ச்சி தந்தனர் கோபாலகிருஷ்ண கோகலே—திலகர்; இராஜஸத்திலும் மிக்க பராக்கிரமம் பொருந்திய 'சாத்வீக நிலையை' சமர்ப்பித்தார் மஹாத்மா. இந்தியநாடாகும் நாடகமேடையில் 'தேசிய—தேசசேவை' என்னும் நாடகத்தில் முதலிரண்டு மூன்றாம் அங்கங்களில் கதாநாயகர்களாக நடித்த—ஒரு நௌரோஜியும்—திரு-கோகலேயும், பெருந்திலகரும் நாடகத்தை ஆரம்பித்துவிட்டு அந்தோ! மறைந்தனர். பின்பு பார்ந்துடன் வந்தார் நற்காந்தி! முன்னோர் முறைகளை ஆராய்ந்தார்; பழய வைத்தியர்களாகும் தேசபக்தர்கள் நாடாகும் நோயாளிக்களித்த மருந்துகளெல்லாம் சிலாக்கியமானவையல்லவெனத் தெளிந்தார்; 'சாந்தமுலேகா-சௌக்கியமுலேது' என்ற தியாகப்பிரம்மத்தின் அருள்வாக்கை அறிந்தார்; மலையில் வாழும் ஓர் உயர்ந்த மருந்தை யளிக்க முற்பட்டார்; அம்மருந்துதான் 'அன்பு' என்னும் அரும் பெரும் மருந்து. அதன் உயர்வையும் சக்தியையும் எடுத்தெழுத எமக்குச் சக்தி போதாது; பராசக்தியே அதற்குத் தகுந்தவள்.

இந்த அன்பிற்கு சமத்துவம், சகோதரத்துவம், ஒற்றுமை, அஹிம்சை, அறிவு என்ற ஐந்து அருந்தவப் புதல்வர்களுண்டு; இவர்கள் உதவியின்றி 'அன்பு' என்னும் தாயின் அகம் குளிராது; அந்த அன்பான தாயின் வசிப்பிடம் நம் பாரதநாடு. ஆகவே பாரதத்தாய் இன்பமாய் வாழ அன்பு வேண்டுவது அத்யாவஸ்யம். அவ் 'வன்பும் சிவமும் இரண்டல்ல' இவ்விதத் தத்துவார்த்தங்கள் பொதிந்த "சாத்வீக வழியை" மோஹனதாஸ் கரம் சந் காந்தியடிகள் நமக்குணர்த்தினார்.

மஹாத்மா நமக்குப் போதித்தவற்றுள் 'ஹிந்து முகம்மதிய ஒற்றுமை' என்பது முக்கியமானது; நமது நாட்டில் பெரிதும் வசிப்பவர் ஹிந்து முகம்

மதியர்களை யாவர்; இவர்கள் தம்முள் சண்டையிடுதலானது 'நலம்' என்னும் ரஸ்தாவில் 'மலம்' என்னும் முள்ளையிட்டதுபோலாகின்றது. "ஒருதாயின் வயிற்றிற் பிறந்தோர்—தம்முள்—சண்டைசெய்தாலும் சகோதரரன்றோ!" என்னும் பாரதியின் வாக்கிற் கிணங்க இந்தியநாடாகும் தாயின் வயிற்றில் வாழும் இந்து முகம்மதியர்கள் தம்முள் எத்தகைய மதவேறுபாடான கொள்கைகளிருப்பினும் 'சகோதர வாஞ்சையுடனே தேசசேவை புரிதல் வேண்டும்' என்னும் மஹாத்மாவின் உபதேசம் எத்துணை உயர்வுடையது?

'அன்பாவது அமலன்' என்பது எம்மதத்தினரும் ஏற்கத்தக்கதே. 'அன்பே' அடிப்படையாக அமைந்தனவாய் மதங்களிருக்க, அக்கொள்கைகளால் சச்சரவு ஏற்படக் காரணமென்ன? எந்தப் பசு உலகத்தையெல்லாம் தன்னிடத்தே கொண்டு, பால்கொடுத்து ரக்ஷித்துப் புராணங்களால் புகழப்படுகின்றதோ, அப்பசுவே இந்து முகம்மதியச்சண்டைக்கும் காரணமாய்நிற்கின்றது. முகம்மதியர்களுள் 'கோவதை' யென்பது அவர்கள் மதக்கொள்கைகளில் ஒன்றல்லவாயினும், எவ்வாறோ அது அவர்கள் வழக்கிலிருந்து வருகின்றது. 'கோரக்ஷணம்' ஹிந்துக்களின் அடிப்படையான மதாசாரக் கொள்கையாயிருத்தலின் அங்கு வந்துறுகின்றது 'ஹிந்து முகம்மதிய வேற்றுமை'! மிருகபலம் தலைவிரித்தாடுகின்றது; ஆத்மபலம் மெல்ல அவ்விடத்தைவிட் டகலுகின்றது. இன்னும் சச்சரவிற்குக் காரணமாக நிற்பது 'மசூதிமுன் மேளம்'; அதாவது முகமதியர்கள் பள்ளிவாசலிற் றொழும்பொழுது மசூதிகளிருக்கும் வழியாக ஹிந்துக்கள் உற்சவநிமித்தமாகவோ அல்லது விவாஹஊர்வலம் செல்லும்போதோ மசூதிகளின் முன்பாக மங்கள மேளவாத்தியங்களை நிறுத்திச் செல்லவேண்டுமென்னும் நிபந்தனை; ஹிந்து முகம்மதியர்கள் இவ்வித விஷயங்களில் பிடிவாதமாகக் கக்ஷிகளைக் கிளப்பிக் கலகத்தையும், கலக்கத்தையும் விளைவிக்கின்றனர்; வாதத்திற்கு மருந்து கொடுக்கலாம்! பிடிவாதத்திற்கு மருந்து கொடுப்ப தியலாதன்றோ! 'குட்டிகுரைக்க நாயின் தலையில் விடிவது' போல் இச்சிறு சச்சரவுகள் தேசநலமென்னும் மரத்தின் வளர்ச்சியைக் குலைக்கும் கொடும் புல்லுருவியாவது கண்டும் இவர்கள் சமாதானத்தை நாடாதிருப்பது எத்துணை பரிதாபம்!

இதுகாரணமாக நாடெங்குமா மிருகபலப்பேயாட்டம்! கல்கத்தாவில் கலகம்! கொலை! மற்றோரிடத்தில் அடிதடி! 'சாத்வீக எதிர்ப்புக்கும்' 'அஹிம்சா தர்மத்திற்கும்' மாறாக நிற்கும் இம்மதச் சண்டைகளைக் கண்டார் மஹாத்மா!; மனம் புண்ணாகி இருபத்தொருநாள் உண்ணா விரதமிருந்தார்; "'அருட்கடலே இப்பிணக்குகள் என்றொழியும்!' 'என்று மடியு மெங்கள் அடிமையின் மோகம்!' 'என்று நம்நாடு பிணக்கின்றி மணக்கும்!' 'இதுவே விதித்த விதியோ'" என்று வகுப்புச் சண்டையைப்பற்றிக் கேட்குந்தோறும் மனம் புண்ணாகின்றார்.

ஆகையால் சகோதர சகோதரிகளே! நம்முடைய நாடு நலமடைய வேண்டுமானால்—நாம் நம்வீட்டில் சுகமாக வாழவேண்டுமானால், பலதுறைகளிலும் நம் பாரதநாட்டின் எழில் சிறக்கவேண்டுமானால்—'ஜெய! ஜெய!! பாரத!!!' என்ற இசை நம்நாடு முழுதும் எழவேண்டுமானால், நம்மில் கிறிஸ்தவராயினும், முகமதியராயினும், ஹிந்துக்களாயினும், பௌத்த ஜைனர்களாயினும், மற்ற யாராயினும் ஒற்றுமையுடன் வாழ்ந்து தேசகைங்கர்யத்தை ஏகோபித்தியற்றி, நம்மனைவர்க்குந் தாயான பாரதவல்லியின் பெருமைக்குப் புத்துயி ரளிக்கவேண்டும்! இதுவே நமது அறம்!



S. V. V. திருச்சி.

---

## இந்தியரின் ஆயுள் விருத்தியும் உபவாசமும்.

(251-ம் பக்கத் தொடர்ச்சி.)

பட்டினியானது மதத்துடன் கலந்து பொது ஜனங்களால் அனுசரிக்கப்பட்டு வந்தால், நம் பாரதமக்கள் நோயற்ற வாழ்வைக் குறைவற்ற செல்வமாகப்பெற்றுப் பூரணாயுளுடன்வாழ, பின்பு தோன்றும் பாரதவம்சமே அழியாத சிறப்புடையதாகநின்று நிலவுமென்ற எண்ணத்துடன் சமயாசாரத்தில் பட்டினியைக்கலந்த நம்பெரியார்களின் பெருமையை என்னென்று கூறுவோம்!

இனி, இவ்வுபவாச முறையால் தேகசுக மெவ்வாறுண்டாகும் என்பதைச் சற்று ஆராய்வோம். வியாதியை நீக்கும் முறையில் உபவாசமானது செய்யும் திறமுடைய வேலை மிகவும் ஆச்சரியமானது. தேகத்திலுள்ள இயந்திரங்களுக்கு ஓய்வைக் கொடுப்பது பட்டினியின் முக்கிய அம்சமல்ல. ஆனால், உண்மையான பசியேற்படும் சமயத்தில் போஜனத்தைக் கொள்ளாது, வேளை தப்பி உண்பதால், ஜீரணக்கருவிகள் கொண்ட உணவைச் சீரணிக்கப் போதுமான அவகாசமில்லாது, அழுக்கடைந்து நாளடைவில் அந்த அழுக்கு அதிகப்படுவதால் அஜீரணத்தை யுண்டுபண்ணி வியாதியையும் பெருக்கிவிடுகின்றது. மற்றும், பசியுண்டாகும்போது உண்ணாது, பசிவேளை சென்றபின் உண்பதால், ஜீரணக்கருவிகள் என்புகளையே (ஆகாரமில்லாத காரணத்தால்) கரைத்துவிடுகின்றன. இக்காரணங்களாலும் நோய்வாய்ப்படுதல் இயல்பு. சீரணக்கருவிகள் அழுக்குமிகுந்து அதனால் தேகத்திற்கு வியாதியை உண்டுபண்ணும்பொழுது பட்டினியை அனுசரிப்பதால் பழமையான ஜீரணக்கருவிகளிலும் மற்ற பாகங்களிலுமுள்ள அழுக்குகள் ஜீரணித்துவிடும். பின்பு, உண்மையான பசியுண்டாகும். இதனால் ஜீரணக்கருவிகள் சுத்தமாகின்றன. நல்ல இரத்த ஓட்டம் பெருகுகின்றது. வியாதியும் உடனே நிவாரணமாகின்றது. இது, நீடித்த வியாதிகளைப் போக்குவதற்கும் ஒப்பற்ற கைகண்ட முறையாகின்றது. சாதாரணமாக ஏற்படும் காய்ச்சல், வயிற்றுவலி, வயிற்றுக்கடுப்பு முதலான வியாதிகளும் அததனுடைய நிலைக்குத் தக்கவாறு ஒருநாள், இரண்டுநாள் பட்டினியால் குணப்படுவது நிச்சயம். தற்காலம் நாட்டுவைத்தியர்கள் 'பத்தியம்' என்று கூறுவதும் இவ்வுபவாசமுறையின் ஓர் ஆரம்பமாகும். ஆயுர்வேத வைத்தியமுறையில் பட்டினியை ஓர் முக்கியமான அம்சமாக அமைத்திருப்பது, வியாதியை நிவர்த்திசெய்வதற்கான முக்கிய வழியாகும்.

இவ்வாறாக, வைத்தியமுறையில் பத்தியம் விதித்துப் பிணிகளை ஆற்றி வந்தனர் வைத்தியர்கள். சரீரத்தில் வியாதி இயற்கையிலேயே ஏற்படா வண்ணம் அவ்வப்பொழுது ஜீரணக்கருவிகளும் மற்ற இயந்திரங்களும் சுத்தமாகக் கிருத்திகை, ஏகாதசி, அமாவாசை, பூர்ணிமை முதலான புண்யதினங்களில் உபவாசமிருக்கவேண்டுமென்ற மதக்கொள்கைகளும், அவற்றிற்கேற்ப விரதப்பலன்களை விளக்கும் புராணங்களும் நமது ஹிந்து மதாசாரங்களுடன் திகழ்வனவாயின. "அரசன் எவ்வழி அவ்வழி குடிகளும்" என்பதற்கேற்ப மத உத்தாரணஞ் செய்யவந்த சமயாசாரியர்களிடத்தும், வைத்திய முறைகளை யுணர்த்தவந்த மஹான்களிடத்தும் அக்கால அரசர்கள் மிகுந்த பக்தி செலுத்தி அன்னவரின் உபதேசப்படியே தாம் நடந்துகாட்டி, குடிகளும் அவ்வழியொழுகச் செய்த காரணத்தால் இவ்வுபவாச வழக்கம் இந்திய ஜனசமூகத்தில் வேரூன்றிவிட்டது.

இவ்வித உபவாசக் கொள்கைகள், நவீன நாகரீகம் தலைவிரித்தாடுதலால் பாழடைந்ததென்பது வெளிப்படை. பெரியோர்கள், "ஒருவேளை யுண்பான் யோகி! இருவேளை யுண்பான் போகி! மூவேளை யுண்பான் ரோகி" என்று கூறக்கேட்டிருக்கின்றோம். நிகழ்கால ஆகாரவிதங்கள் இவ்வழக்கிற்கும் மிஞ்சியிருப்பதை நாம் நன்கறியலாம். காலையில் படுக்கையில் காப்பி (Bed Coffee); பின்பு, சிற்றுண்டியுடன் காப்பி (Light Tiffin) முதலான ஆறுவேளை—ஆறுவகை உணவுகள் புதுமுறைகளாயின. மதாசாரத்துடன் முன்பு எவ்விதம் பட்டினிமுறை கலந்ததோ, அஃதேபோல தற்காலத்தில் போஜனத்துடன் காப்பிமுறை விடா நட்புக்கொண்டுள்ளது. நம்மை அரசாக்ஷிபுரியும் அரசாங்கத்தாரின் மதமும், நாகரீகமும் நமது கொள்கைகளுக்கு வேறுபட்டு நிற்பதால் நமது மதாசாரமும், அதனுடன்வந்த முறைகளும் பொதுஜன சமூகத்தில் மங்குவனவாயின. அந்தோ! 'நாகரீகமோ நாசகாலமோ' என்ற நிலையிலிருக்கும் நம் நாட்டை எவ்வாறு மீட்கப்போகின்றோம்!

மனக்கட்டுப்பாடுள்ளவர்கள் தத்தம் தேகத்திலுள்ள ஒவ்வொரு அவயவங்களும் அவ்வவற்றின் இயல்புக்கும் இயற்கைக்குத் தக்கவாறு இச்சைகொண்டு, தாம் கண்டவற்றை அனுபவிக்கவேண்டுமென்றவகையில் முயற்சிப்பதைக் கண்டித்துத் தண்டிப்பது வழக்கம். இத்தகைய பெரியார் பலரைப்பற்றி நாம் கேட்டிருக்கலாம்; நம்மில் பலர் வாசித்திருக்கலாம். ஆனால், நிதரிசனமாக நாம் இப்பொழுது காணக்கூடிய அவ்விதப் பெரியார் மஹாத்மா காந்தியடிகளே யாவர்! பட்டினியின் மகிமையைத் தற்காலத்திற் கண்டவர் காந்தியடிகளே! மஹாத்மா தன் நாவிற்கு அடிக்கடி தண்டனை விதிப்பதுண்டு. தேஹ ஆரோக்கியத்திற்கும் ஆயுள் விருத்திக்கும் உபவாசமென்ற பணச்செலவில்லா ஒப்பற்ற மருந்தின் உயர்வை நன்குணர்ந்த அவர், வாரத்திற்கொருநாள், இரண்டுநாள் உபவாசமிருந்து அதை வழக்கத்தில் கொண்டுவந்துவிட்டனர். இப்பொழுது மாதக்கணக்கிலும் பட்டினிகொண்டாடத் தமக்குச் சக்தியுண்டென்கின்றார்! அதன் சக்தியை மூன்றுவாரம் உபவாசமிருந்து நமக்கு வெளிப்



படுத்தினார். உபவாசமென்ற சொல்லை யறியாத பலவேளை போஜனக்காரர் பலர் மஹாத்மா மூன்றுவாரம் உண்ணாவிரதமிருந்தபொழுது, அவர் எங்கு இறந்துவிடுவரோ—எண்ணித்துணிந்தாரில்லையே—என ஏங்கித் தந்திகளைக் கொடுத்து ஊரில் வதந்திகளைப் பெருக்குவாராயினர்! மஹாத்மாவின் அரிய உபதேசம் என்ன? "எதுவும் ஆரம்பத்தில் கடினமாயிருக்கும்—அவை வழக்கத்தில் வந்தபின் மிருதுவான புஷ்பத்திற்குச் சமானமானதாயிருக்கும்" என்பதன்றோ! அனைவருக்கும் பயங்கரமாகத்தோன்றிய இப்பட்டினி மஹாத்மாவிற் கோர் மலராய் நின்றதினின்றுமே அதன் உன்னதம்—பெருமை—உயர்வு விளங்கும்.

நாம், இனியாகிலும் இவ்வுபவாசத்தின் மகிமையை யுணர்ந்து, அனுசரித்து ஆரோக்கிய திடகாத்திரராக வாழ்ந்து நோயற்றிருக்கவும், இனித்தோன்றும் சந்ததிகள் பராக்கிரம சரீரமும் சுகமும் பொருந்தியவைகளாக இருக்கவும்—நம்நாட்டில் வறுமை, அற்ப ஆயுளில் மரணம் முதலியன நசிக்கவும் முயலுவோமாக. உபவாசமதத்தின் உன்னதமும்! அதன் அறக்கடவுளின் மகிமையும் வாழ்க!

S. V. வரதராஜய்யங்கார், உறையூர்.

# அறநெறிப்பகுதி.

## ஆரிய சித்தாந்தம்.

### பொதுத் தர்மம்.

(254-ம் பக்கத் தொடர்ச்சி).

பிரமயக்ஞம் சூரியார்கமான காரியங்களைத் தானே செய்யவேண்டும். எந்த அங்கத்தினால் கர்மத்தைச் செய்யவேண்டுமென்று விதிக்கப்படவில்லையோ அந்த அங்கத்தால் அதைச் செய்யலாகாது; வலதுகையினாலேயே செய்யவேண்டும். தாழ்ந்த காரியங்களை இடதுகையாலும், உயர்ந்த கர்மங்களை வலதுகையாலும் செய்யவேண்டும். உட்கார்ந்துகொண்டாவது நின்றுகொண்டாவது குனிந்துகொண்டாவது செய்யவேண்டுமென்று விதிக்கப்படாத கர்மங்களை உட்கார்ந்துகொண்டே செய்யவேண்டும். எந்தக் கர்மங்கள் இன்ன திசையைநோக்கி யிருந்துசெய்யவேண்டுமென்று விதிக்கப்படவில்லையோ அந்தக் கர்மங்களைக் கிழக்கு வடக்கு அல்லது ஈசானியதிசையைநோக்கி யிருந்துசெய்யலாம் என்று காத்தியாயனர் கூறினார். ஸ்நானம், தவம், ஜபம் ஆசமனங்களால் சுத்தி செய்துகொண்டு இன்ன கர்மத்தைச் செய்கிறேன் என்று சங்கல்பம் செய்துகொண்டு கர்மங்களைச் செய்யவேண்டும். பிரதானமான கர்மம் செய்யப்படாவிட்டால் அதை மறுபடியும் பூர்ணமாய்ச் செய்யவேண்டும். அங்கமான கர்மம் செய்யப்படாமலிருந்தால் பிராயச்சித்தமாத்திரம் செய்துகொள்ளவேண்டும். ஆரம்பித்த கர்மத்தைத் தெரியாத்தனத்தால்

தவறுதலாகச் செய்யப்பட்டால் தவறினதைமாத்திரம் மறுபடியும் சரியாகச் செய்யவேண்டும். கர்மத்தைச்செய்து முடித்தபின் கர்மம் தவறாகச் செய்யப்பட்டதென்று தெரிந்தால் தவறின இடத்திலிருந்து மறுபடியும் செய்யவேண்டும் என்று ஸ்மிருதிசந்திரிகை கூறுகின்றது. அதிகமாயிருந்தாலும் குறைவாயிருந்தாலும் தன்னுடைய கிருஹ்ய சூத்திரத்தின்படிசெய்தால் எல்லாம் செய்ததாகவே ஆய்விடும். சிரௌத சூத்திரங்களில் சொல்லப்பட்ட கர்மங்கள் எந்தச் சாகைக்குரியனவாயிருர்தாலும் அவைஎல்லாச் சாகைகளுக்கும் பொதுவாகும். அப்படியே கிருஹ்ய சூத்திரங்களில் சொல்லப்பட்ட கர்மங்கள் எந்த ஸ்மிருதியில் சொல்லப்பட்டனவாயிருந்தாலும் எல்லாருக்கும் பொதுவாகும் என்று சாதாதபர் சொன்னார். முக்கிய பட்சத்தை அனுஷ்டிக்கத்தக்க ஒருவன் கௌணபட்சத்தை அனுஷ்டித்தால் அவன் அந்தக்கர்மபலனை அடையமாட்டான். ஜாதிகுலம் சமையம் கிரமாசாரம் இவைகளுக்கு ஒத்த கர்மத்தையே செய்யவேண்டும். தன் சாகையில் சொல்லப்படாததும் பிறர் சாகையில் சொல்லப்பட்டதுமான கர்மம் தன் சாகைக்கு விரோதமில்லாமலிருந்தால் அதைச்செய்யலாம். தன்னுடைய தந்திரத்தில் சொல்லப்படாததைப் பரதந்திர முறைப்படி செய்யவேண்டும். தன் சூத்திரத்தில் சொல்லியதைவிட்டுப் பிறர் சூத்திரத்தில் சொல்லியதைச் செய்வது குற்றமாகும் என்று காத்தியாயனர் சொல்கிறார். தன்னுடைய சூத்திரம் அகப்படாவிட்டால் பிறர் சூத்திரப்படிசெய்யலாம். போதாயன சூத்திரப்படிசெய்வது விசேஷம். கர்மத்தை விதிப்படி செய்யாதவன் அதன்பலனை அடையமாட்டான் என்று மனுதர்மம் கூறுகின்றது.

சூரியகிரகணம் பிடிப்பதற்கு நாலுஜாமத்துக்கு முன்பும், சந்திரகிரகணத்துக்கு மூன்றுஜாமத்துக்கு முன்பும் போஜனம் செய்துவிடவேண்டும். இந்த நாழிகைகளில் சாப்பிடக்கூடாது. இரவு கடைசிஜாமத்தில் சந்திரகிரஹணம் பிடித்து கிரகணம் விடாமலிருக்கும்போதே உதயமாய்ச் சந்திரன் மறைந்துவிட்டால் கிரஸ்தாஸ்தமன சந்திரகிரகணமென்று பேர். அன்றுபகல் உபவாஸமிருந்து சந்திரனைத் தரிசித்து ஸ்நானம் செய்துவிட்டுப் பிறகு போஜனம் செய்யவேண்டும். கிரஸ்தாஸ்மன சூரியகிரகணத்திலும் இரவில் உபவாசமிருந்து மறுநாள் விடிந்தபின் சூரியனைத் தரிசித்து ஸ்நானம் செய்தபிறகு போஜனம் பண்ணவேண்டும். அர்த்தோதய மஹோதயங்களைப்பற்றிய விஷயம் முன்பே யெழுதியிருக்கிறது. அது ஒரு பட்சம். மறுபட்சம் தை அல்லது மாசிமாதம் ஞாயிற்றுக்கிழமை உதயத்தில் திருவோணம், அமாவாசை, வியதிபாதம் கூடினால் அர்த்தோதயம் என்பர். மேற்படி மாதங்களில் திங்கட்கிழமை உதயத்தில் திருவோணம், வியதிபாதம், அமாவாசைகூடினால் மகோதயமாம்; துவாதசியில் திருவோணம் கூடினால் சிரவதுவாதசியாம். இது மஹாபுண்ய காலம். இதில் உபவாசமிருந்து செய்யப்படும் ஸ்நானதான தர்மங்கள் அநந்த பலனைத் தரும்.

வைதிருதி, வியதிபாதமாகிய யோகங்கள், புஷ்யம், ஜன்மநட்சத்திரம், அமாவாசை, ஞாயிறு இவைகளில் ஓடுகிற நதி தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தால் சிறந்த பலனுண்டாகும்; சித்திரைமாதம் சுக்கிலபக்ஷத்தில் புதன்கிழமையும் புனர்பூசமும் கூடியதினத்தில் புண்ணியதீர்த்தங்களில் ஸ்நானம் செய்தால் யாகம்செய்த பலன் கிடைக்கும். கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, நர்மதை, சிந்து, காவேரி இவை ஸப்தகங்கையென்று நூல்களாற் கூறப்பட்டவை. துங்கபத்திரை, கிருஷ்ணவேணி, பிநாகி இவற்றைச் சேர்த்துத் தசகங்கை என்றும் பெரியார் கூறுகின்றனர். இவற்றுடன் தாம்பிரபர்ணியையும் சேர்த்துக்கொள்வது முண்டு. இவைகளெல்லாம் கங்கைகளே. புண்ணிய காலங்களில் இவைகளில் ஸ்நானம்செய்வது மஹா உத்தமம். சிவசந்நிதி, விஷ்ணுசந்நிதிகளிலுள்ள தீர்த்தங்களும் புண்ய தீர்த்தங்களென்று சிஷ்டர்களால் புகழப்படுகின்றன. இவைகளில் ஸ்நானம்செய்து தானதர்மங்களை இயன்றவரையிற்செய்து சிவ விஷ்ணுக்களைத் தரிசிப்பவன் ஒருபோதும் நரகங்களைப் பார்க்கவேமாட்டான். ஐப்பசிமாதம் முதல்நாள் தொடங்கிச் சங்கல்பத்துடன் காவேரியின் புண்யகட்டங்கள்தோறும் ஸ்நானஞ் செய்துகொண்டு சென்று கடைசிதினத்தில் காவேரி சமுத்திரத்தில் கலக்கிற சங்கமுகத்தில் ஸ்நானம் செய்வது வெகுபுண்யமென்று கூறப்படுகிறது. இந்தக் காவேரி ஸங்கமத்தில் ஸ்நானம்செய்து பண்ணப்படும் தானதர்மங்கள் அநந்த பலனைத்தரும். இவ்விடத்தில் எந்தநாளிலும் ஸ்நானம் செய்யலாம்.

பிறகு தங்கள் குலாசாரத்துக்கு ஒத்தபடி ஊர்த்துவபுண்டரமோ, திரிபுண்டரமோ எதையாவது தரித்துக்கொண்டு ஜபங்களைச் செய்யவேண்டும். ஜபம் செய்யும் விதிப்படி கிழக்குமுகமாயாவது வடக்கு முகமாயாவது இருந்து ஜபம் செய்யவேண்டும். காயத்திரிக்கு மாத்திரம் காலையில் கிழக்குமுகமாக நின்றுகொண்டு ஜபிக்கவேண்டும். பகலில் சூரியன் சாய்ந்துவிட்டால் வடக்கு முகம் உட்கார்ந்து ஜபம் செய்யவேண்டும். சாயுங்காலத்தில் மேற்குமுகமாக உட்கார்ந்துகொண்டே செய்யவேண்டும் என்கிற நியமம் உண்டு. மற்றைய ஜபங்களை யெப்போதும் கிழக்கு அல்லது வடக்குமுகமாக இருந்துகொண்டே செய்யவேண்டும். ஜபிக்கும்போது வாசிகம், மானஸிக முதலிய விதிகளிலொன்றை யனுசரித்தே செய்யவேண்டும். இவை நித்தியவிதியில் செவ்வனே விரித்து எழுதப்பட்டுள்ளன. ஆண்டுக்காண்க. ஜபம் செய்யும்போது ஒருவரோடும் பேசக்கூடாது. இலௌகிக காரியங்களைக் கவனித்துக்கொண்டு ஜபிக்கக்கூடாது. ஜபாவர்த்திகளைக் கணக்கிடாமல் ஜபிக்கக்கூடாது. இரண்டுகைகளையும் ஜபமாலையையும் மூடிக்கொண்டே ஜபிக்கவேண்டும். கணக்கிடாமல் ஜபிப்பது பலன் அளியாது. ஜபிக்கும்போது ஜபமாலையைத் தன் ஆசானுக்குக்கூடக் காட்டக்கூடாது. இவ்வாறு ஜபித்தால் பலனுண்டாகும்.

ஸரஸ்வதி, திருதவதி என்கிற இரண்டு தெய்வநதிகளுக்கும் நடுவிலிருக்கிறதேசம் தேவதைகளாற் செய்யப்பட்ட பிரமாவர்த்தமென்று சொல்லப்படும். இந்தவிடத்தில்தான் சங்கரஜாதிகளுள்படப் பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் என்கிற உத்தமவருணங்களுக்கும், அனுலோமர் பிரதிலோமர் அந்தராளரென்கிற மத்திம வருணத்தார்க்குமுரிய ஆசாரங்கள் பிறந்தன. அவ்

வாசாரங்களே பிரமாணமாகும். குருக்ஷேத்திரம், மச்சதேசம், பாஞ்சால தேசம், சூரசேனதேசம் ஆகிய இவைகள் பிரமரிஷிதேசங்கள். பிரமாவர்த்த தேசத்தைவிடக் கொஞ்சம் தாழ்ந்தவை. இந்தத் தேசத்திலிருக்கிற பிரா மணர்களிடத்தி லிருந்துதான் சகலதேசத்தாரும் தத்தம் தேசசரித்திரங் களைத் தெரிந்துகொண்டார்கள். இமயமலை விந்தியமலைகளுக்கு நடுவிலும் வினசத்துக்குக் கிழக்கிலும் பிரயாகைக்கு மேற்கிலும் உள்ள தேசம் மத்திய தேசமென்று சொல்லப்படும். வினசமென்பது சரஸ்வதி அந்தர்த்தானமான இடம். கீழ்க்கடல் மேல்கடல் இமயமலை விந்தியமலை இவைகளுக்கு மத்தியி லிருக்கும் தேசமானது ஆரியாவர்த்தமென்னப்படும். இந்த விடங்களில் பிரா மணர்கள் பிரயத்தனப்பட்டாவது வசிக்கவேண்டும் என்று மனு கூறினார். பிரமாவர்த்தம் உத்தமதேசம்; ரிஷிதேசம் அதைவிடத்தாழ்ந்தது; மத்திய தேசம் அதிலுந் தாழ்ந்தது; ஆரியாவர்த்தம் அதிலும் தாழ்ந்தது என்று வியாசமுனிவர் கூறினார். இவ்விடங்கள் யாகயக்ஞங்கள் செய்வதற்கும் தவசு செய்வதற்கும் யோக்கியமானவைகள். எந்தவிடங்களில் நாலுவருணத்தார்க் கும் வியவஸ்தை கிடையாதோ அந்த இடம் மிலேச்சதேசம் என்னப்படும். மிலேச்சதேசங்களில் சிரார்த்தம் செய்யவும் கூடாது; அவ்விடத்துக்குப் போகவும் கூடாதென்று விஷ்ணு கூறினார்.

(தொடரும்.) சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

---

## சொற்றூய்மை.

ஒருவன், உண்மை பேசினால் யாவரும் நம்புவர். நல்லவன் என்று பெயர் எடுக்கலாம். பொய் மொழிவதனால் பாவமும் அப்பாவத்தினால் துன்பமும் ஏற்படுகின்றன. உண்மைக்குக் கேடே கிடையாது. கேடில்லாதவன் துன் பப்படவேண்டியதில்லை. எல்லாத் தீமைக்கும் காரணமாக இருக்கும் ஆசை யும் கோபமும் பொய்யைத்தான் துணையாகக்கொண்டிருக்கின்றன. அடிபிடி, பகை, கொலை, களவு, அச்சம், துயரம் ஆகிய எல்லாம் பொய்யினால் தோன் றும்; மெய்யினால் அகலும்.

சிலர் அச்சத்தினாலும், சிலர் பிறர் தம்மைப் பெருமையாக நினைத்துக் கொள்ளவும் உள்ளதை மறைத்து, இல்லாததைக் கூறுகிறார்கள். பயப்பட்டுப் பொய் கூறக்கூடாது என்பதற்காகத்தான் 'இறந்தாலும் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்' என்ற வாக்கியம் ஏற்பட்டது. எதற்கும் அஞ்சாத தீரன் தான் உண்மை உரைப்பான். ஒருவன் தன்னைப் பெருமைப் படுத்திக்கொள்ள விளையாட்டாகச் சொல்லும் பொய் விரைவில் வெளிப்பட்டுப் பெருமைக்குப் பதிலாக அவனுக்கு அவமானத்தைத்தான் உண்டுபண்ணும். என்ன வந்தா லும், போனாலும் நாம் ஒருவனுக்குக் கொடுத்த வாக்கைத் தட்டக்கூடாது. பணமோ, வேறு எந்தப் பொருளோ ஒருவரிடமிருந்து நாம் வாங்கிவிட்டு அதை அவருக்கு இன்னநாளில் தருகிறோம் என்று கூறினால் அன்று கட்டா யம் கொடுத்துவிடவேண்டும். கூட்டம் அல்லது மங்கள காரியத்துக்கு நான்



வருகிறேன் என்று ஒருவருக்கு வாக்களித்துவிட்டுப் பின் நின்றுவிடுவது அவரை ஏமாற்றுவதாகும். இப்படிச்செய்வது நல்லவர்களுக்கு அழகல்ல.

நாமாக வலியப்போய் 'உண்மை கூறுகிறோம்' என்றுசொல்லி ஒரு நன் மையும் செய்யாமல் பிறருக்குக் கேடு விளைவிக்கும் சொல்லைச் சொல்லுவதி லும் அவ்வாறு சொல்லாதிருத்தலே மேல். அப்படிச் சொல்வது கோள் சொல்லுவதில் ஒரு பிரிவாகும். பெரியவர்களிடம் அவர்கள் கேட்பதன்முன் னும், பிறருடன் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதும் பேசக்கூடாது.

நல்லவன் பிறரைக் காணாதவிடத்தில் பிறரது நற்குணங்களை எடுத்துச் சொல்லிப் புகழ்வான். தீயவன் காணாதவிடத்தில் பிறர் தீமைகளை எடுத்துச் சொல்லி இகழ்ந்து பலருடன் கூடிச் சிரிப்பான். இப்படிச் செய்பவன் அறி வில்லாதவன். அவனை நேசிப்பவர்களும் மூடர்களே. இவர்கள் தங்களைப் பிறர் பழித்தால் தங்களுக்கு எப்படி இருக்கும் என்பதை உணராத கடையர். நல்லவர்கள் நன்மைசெய்து இனியதும், நல்லதும், உள்ளதும் சொல்வ தன் காரணம், தம்மைப்போல் பிறரை நினைப்பதும், பிறர் செய்கிற குற் றத்தை அறிவதுபோல் தமது குற்றத்தை யறிவதுமேதான். பிறரைப் பழித்து உரைப்பவனை அவன் நண்பர்களும்கூட விரும்பமாட்டார்கள்; 'நம் மையும் இப்படித்தானே காணாதவிடத்தில் இகழ்ந்துரைப்பன்' என்று எண்ணி வெறுப்பர். ஒருவன் முன்பு அவன் தீச்செயல்களைக் கூறினாலும் அவன் இல் லாதவிடத்தில் அவற்றைச் சொல்லவே கூடாது.

ஒருபயனும் இல்லாமல் வழ வழ வென்று பேசிக்கொண்டிருப்பது கேட் பவருக்கு வெறுப்பைக் கொடுக்கும். ஆதலால் நல்ல பயன்தரும் சொல்லையே பேசவேண்டும். வீண்பேச்சுப் பேசுகிறவன் யாவராலும் வீணன் என்று இக ழப்படுவான். ஒன்றையே பன்னிப் பன்னிப் பேசுவதும் அறிவுடையோர்க்கு அழகல்ல.

எவரிடத்தும் இனிய சொல்லையே பேசவேண்டும். இவ்வாறு பேசுவது அன்புடையவர்களிடமே உண்டாகும். ஒருவர் ஏழையாக இருந்தாலும், அரு வருக்கத்தக்க உருவத்துடன் கூடியிருந்தாலும் அவரிடத்தும் உள்ளன்பு ஒழு கும் இன்சொல்லே கூறவேண்டும். தாய், தன் மக்களிடத்து அன்புகொண் டிருப்பதனால்தான் அவர்களை அருமையாக அழைத்துப் பிரியமாகப் பேசு கிறாள். அதுபோல் உலகில் அன்புடைய பெரியோர்களே இன்சொல் சொல்லுவர். அப்படிச் சொல்லுகிறவர்களே எல்லோருக்கும் தாய் போன்ற வர்கள். தீயவரும் அறிவீனருமே கடுகடு வென்[illegible] வெறுப்பை யுண்டுபண் ணும் பேச்சுக்களைப் பேசுவர். மன நிறைவுடன் இ[illegible]சொல் கூறவேண்டும். உள்ளே வெறுப்பும் வெளிக்குமட்டும் அருமையுமாக [illegible]டித்துப் பேசுகிறவன் வஞ்சகன். அவனை நம்பக்கூடாது. பணிவுடன் அன்போடுகூடிய இனிய அருமைச் சொற்களையுடையவனுக்கு வேறு ஆபரணம் வேண்டியதில்லை. அவைகளே அவனுக்கு நல்ல அழகை உண்டுபண்ணும். அவற்றைக் கண்ட வர்கள் அவனிடத்து நட்புள்ளவர்களாவர்.

ஆதிநாதன்.

# மாணவர்பகுதி.

## ஆத்திசூடி உதாரணக்கதைகள்.

(262-ம் பக்கத் தொடர்ச்சி.)

### " அனந்த லாடேல். "

*"அனந்தல்—நித்திரையை, ஆடேல்—(நீ அளவுக்குமிஞ்சிச்) செய்யாதே" என்பது இதன்பொருள்.*

மனிதர் நித்திரையை அதிகமாக அனுசரிக்கலாகாது. இரவில் 10 மணிக்குமேல் தூங்கிப் பின்னிரவு நான்குமணிக்கு விழித்துக்கொள்ள வேண்டும்; பகலில் உறங்குதல் அறவே கூடாது. பகலிலும், இரவிலும் அளவுக்குமிஞ்சி நித்திரை செய்வதால், அங்ஙனம் செய்வார்க்குச் சோம்பல் அதிகரிக்கும்; தலைநோய், கண்ணெரிச்சல், நாவறட்சி, நெஞ்சுலர்தல் முதலிய பல நோய்களுண்டாகும்; காரியங்கள் கெடும்; சம்பாத்தியக் குறைவாகும்; ஆயுள் குறையும்; வறுமைசேரும்; அவர்களிடம் இடைவிடாது மூதேவிவந்து வாசஞ் செய்துகொண்டிருப்பாள். இவ்வாறு அளவுக்கு மிஞ்சிய நித்திரையால் மனிதர்க்குப் பலவித கெடுதிகளிருப்பது குறித்தே, மிஞ்சிய நித்திரையை விலக்க வேண்டுமென்று ஔவைப்பிராட்டியார் இந் நீதியைக் கூறினர். சிலர், இந் நீதியை உணராமையால், பகலிலும், இரவிலும் அளவுக்கு மிஞ்சிக் கும்பகர்ணனைப்போல் நித்திரைசெய்து தேகசுகத்தைக் கெடுத்து ஆயுளையும் குறைத்துக் கொள்வதோடு, தொழில் செய்யும் வன்மையற்றவர்களாய்ச் சோம்பேறிகளாகியும் திரிகின்றனர்; பொருள் தேடும் மார்க்கத்தையிழந்து தரித்திரர்களாய்த் தயங்குகின்றனர். தங்களுக்குக் கிடைக்கக்கூடிய பல நன்மைகளையும் இழந்துவிடுகின்றனர். தூக்கத்தால் நேர்ந்த சோம்பலால், பெரியோர்கள் தேடிவைத்த பொருள்களையும் விருத்திசெய்யத் தெரியாமல் போக்கிவிடுகின்றனர். இவ்வாறு அதிகத் தூக்கத்தால் அவஸ்தை யடைந்தவர்களின் கதைகள் பலவுண்டு. அவற்றுள் ஒன்று இதனடியில் வருவதாம்:

ஒரு சிற்றூரில், திருமலை யென்னும் வாலிபனொருவனிருந்தான். அவன், இளமையிலேயே தூக்கத்தில் மிகவும் பிரியமுடையவனா யிருந்தான். இரவில் ஏழுமணிக்கு முந்தியே படுத்துவிடுவான்; காலையில் எட்டுமணிக்குப் பிறகுதான் எழுந்திருப்பான். பள்ளிக்கூடத்திற்குப் படிக்கப்போனால் புத்தகத்தைக் கையில் வைத்தபடியே தூங்கிவிழுந்துகொண்டிருப்பான். அதனால் அவனுக்குக் கல்வியறிவும் ஏற்படவில்லை. அவ்வாறு படிப்பில்லாமற் போகவே அவன் எவ்விததொழிலும் செய்து பொருள்தேடுதற்கு வல்லமையற்றவனாய் விட்டான். ஆயினும், அவனுடைய முன்னோர்கள் தேடிவைத்த திரவியம் அவனிடம் சேர்ந்தபடியால் அவனுக்கு ஜீவனவிஷயத்தில் கஷ்டமேற்படவில்லை; நல்ல போஜனமும் சுகானுபவங்களும் கிடைத்தன. அவன் கவலையற்றவனாயிருந்தான். அவ்வாறு அவனுக்குப் பணக்கவலையில்லாமற் போகவே, பகலிற் சாப்பாடு முடிந்தவுடன் படுத்துறங்குவதும், இரவில் போஜனமுண்டபின் நித்திரை செய்வதுமே வேலைகளாய்விட்டன. அவன் இவ்வாறு தூக்கத்



தில் மிகுந்த பிரியக்காரனானதால் தூங்கும் விஷயத்தில் சில சட்டதிட்டங்களையும் ஏற்படுத்தி யிருந்தான்: தூங்கும்போது அவனை எழுப்புதல் கூடாது. எழுப்புகிறவர்களை அவன் அடிப்பான். அவன் தூங்கும்போது, "என்னை எவரும் எழுப்புதல் கூடாது; அவ்வாறு எழுப்பினால் எனக்கு மிகுந்த கோபம் வரும்; அக்கோபத்தால் என் தூக்கத்தைக் கெடுப்பவர்களை நான் அடித்துவிடுவேன்" என்று சொல்லிவிட்டே தினந்தோறும் படுப்பான். அதனால் அவனைத் தூக்கத்தில் எழுப்புவதற்கு எவர்களும் பயப்படுவார்கள். அவனிடத்தில் தூக்கமும் சோம்பலும் மிகவே மூதேவிவந்து குடியேறினள். அவன் தொழிலின்றி யிருந்துகொண்டே பணச்செலவு செய்துவந்ததால் அவனிடமிருந்த பிதுரார்ஜித சொத்துக்களெல்லாம் தொலைந்தன; வறுமை மிகுந்தது; பிணியும் அதிகரித்தது. முடிவில் அவன் ஜீவனத்திற்கு வழியின்றித் திண்டாடினான். இந்நிலையிலும் அவன், தன்னுடைய தூக்கத்தை விடவில்லை; முன்னிலும் அதிகமாகவே தூங்கிவந்தான். அவனைக் கண்டவர்களெல்லோரும் "இவன் மூதேவி பிடித்தவன்" என்று நிந்தித்து வந்தார்கள்.

அவன், இவ்வாறு முன்னிலும் அதிகமாகத் தூங்கிவருங்காலத்தில், அவனுடைய செவியோரத்தில் துப்பாக்கி வெடிகிளப்பினாலும் தூக்கம் கலையமாட்டாது; அவன் பக்கத்தில் நெருப்பு பற்றி யெரிந்துவந்தாலும் அது தன் தேகத்தில் சுட்டபிறகே துள்ளியெழுந்திருப்பான். இப்பெருந் தூக்கக்காரன் இப்படிக் காலங்கழித்து வரும்போது ஒருநாள் இரவு தன்னுடைய கூரைவீட்டில் படுத்துக் குறட்டைவிட்டுறங்கினான். அவனுடைய குறட்டைச் சப்தத்தைக்கேட்டு அங்குள்ள எலிகளெல்லாம் பயந்தோடிவிட்டன. அப்போது அவனுடைய கெட்டகாலத்தால் அவ்வீட்டில் தீப்பற்றிக்கொண்டது; காற்று அதிகமாக வீசியபடியால் சிறிதுநேரத்திற்குள் நெருப்பு அவ்வீடுமுழுதும் பரவிவிட்டது. ஊராரெல்லோருங்கூடி இரைந்து விரைந்து அந்நெருப்பை அவிக்க முயன்றார்கள். அக்கினியின் வேகத்தைத் தணிக்க அவர்களால் முடியவில்லை. உள்ளே படுத்திருந்த திருமலை இவ்வளவு சந்தடி யுண்டாகியும் எழுந்திருக்கவில்லை. நெருப்பின் வெப்பம் தன் தேகத்தில் தாக்கிய பிறகே துள்ளியெழுந்தான். எழுந்ததும், தான் பெரிய நெருப்புக்கோட்டைக்குள் இருப்பதைக் கண்டான்; நெஞ்சம் துடித்துச் சிறிதுநேரத்திற்குள் உடல் கரிந்து மாண்டான். அவன் இறந்ததை யுணர்ந்து அவ்வூரார் அவனுடைய பரிதாபநிலைமைக் கிரங்கினார்கள்.

(தொடரும்.) **செம்பூர். வீ-ஆறுமுகஞ்சேர்வை.**

---

## மாணவர்க்கோர் அறிவுரை.

1921-ம் வருடம் செப்டம்பர் மீ 21 உ நடந்தேறிய வேதாரணியம் போர்டு பாடசாலை மாணவர் சங்கத்தின் 6 வது வருஷக் கொண்டாட்டத்தில், அக்கிராசனம் வகித்த தஞ்சைஜில்லா கல்வி அதிகாரி-ஸ்ரீமான்-வி-சி-ஸ்ரீனிவாஸாசாரியார் அவர்கள் B. A., L. T., தம்முடைய முடிவுரையில் மாணவர்களுக்குப் புத்தி புகட்டியது பின்வருமாறு:—

"இதுமாதிரியான சங்கங்கள் ஹைஸ்கூல்களில் நடந்து வருகின்றன; அவைகளை நான் பார்த்திருக்கிறேன்; ஆனால், சில எலிமெண்டரி ஸ்கூல்களில் இச்சங்கங்கள் நடந்து வருவதாகக் கேள்விப்பட்டிருக்கிறேனே யொழிய நான் அவைகளை நேரில் பார்த்ததில்லை; நான் முதல் முதல் பார்த்தது இந்த ஸ்கூலில்தான். இன்று நடந்த விஷயங்களைக் கவனித்தவரையில் எனக்கு மிகவும் சந்தோஷமுண்டாகிறது; எனக்கு இது ஒரு கண் திறப்பாக விருக்கிறது; எலிமெண்டரிஸ்கூல் பிள்ளைகளைத் தயார்செய்தால் அவர்களை செகண்டரி ஸ்கூல் பிள்ளைகளுக்குச் சமதையாகக் கொண்டுவந்து விடலாம்; வருஷாந்தர அறிக்கையைக் கவனிக்க இச்சங்கம் பிரஸ்தாப வருஷத்தில் மிகவும் சுறுசுறுப்பாக வேலைசெய்து வந்திருப்பதாகத் தெரிகிறது; நம்முடைய தேசம் முன்னுக்கு வரவேண்டியது நம் சிறுவர்களாலேதான்; அதற்கு அவர்களுடைய முயற்சியும் ஊக்கமும் வேண்டும்.

நாம் அநேக நல்ல விஷயங்களைப்பற்றிப் படிக்கிறோம், அல்லது சொல்லுகிறோம்; ஆனால் அதன்படி நடக்கவேண்டும்; நம்மவரிடம் இந்த விஷயத்தில் குறை இருக்கிறது; இவ்விஷயத்தை நாம் ஏட்டுப்படிப்பாக நினைக்காமல் அனுபவத்துக்குக் கொண்டுவரவேண்டும்; சிலர் ஆரம்ப சூரர்களாகவிருந்து நாள்ஆக, ஆக, தாங்கள் எடுத்துக்கொண்ட காரியத்தில் ஊக்கக் குறைவைக் காண்பிக்கிறார்கள்; இது நம்தேசத்தில் ஏற்பட்டிருக்கிற பெருங்குறைவு; அவ்விதமிருந்தால்,அது தேச முன்னேற்றத்துக்குப் பாதகமாகும்; நமக்கு எது சரி என்று தோன்றுகிறதோ அதன்படி நாம் நடக்கவேண்டும்; இவ்விஷயத்தில் மனவுறுதியும் வேண்டும்; உபாத்தியாயர்களும் மாணவர்களுக்கு வேண்டிய உபாயங்களைத் தேடிக்கொடுத்து அவர்களை நல்வழிப்படுத்தி வரவேண்டிய தவசியமாகும்.

நம் பெற்றோர்கள், அனுஷ்டித்துவந்த தொழிலைக் கூடியவரையில் கைப்பற்ற முயலவேண்டும். ஆனால் சில மாணவர் அப்படிக் கைப்பற்றுவதை அவமதிப்பாக எண்ணித் தங்கள் படிப்பு முடிந்ததும் குறைந்த சம்பளத்துக்கு எங்கேயாவது ஒரு வேலையில் அமர விரும்புகிறார்கள்; அது மிகவும் தவறான காரியமென எனக்குத் தோன்றுகிறது; சிலர் தம்முடைய வீட்டுக்காரியத்தையும் அது சம்பந்தமாய்த் தம்முடைய சொந்தத்துக்கு வேண்டிய தொழிலையும் செய்ய மிகவும் அவமான மடைகிறார்கள். ஒரு சிறு காரியத்தைச் செய்வதற்குக்கூட ஒரு வேலைக்காரன் வரும்வரையில் அவனை எதிர்பார்க்கிறார்கள். இவ்வித மிருக்கக்கூடாது. நம் சொத்துக்குவேண்டிய எத்தொழிலையும் நாம் கற்றுத் தெரிந்துகொண்டு அவைகளை அனுபவித்துச் சந்தோஷமடைய வேண்டும்.

மேனாட்டாரிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டிய விஷயங்கள் அநேக மிருக்கின்றன. ஆனால், ஸகஜமாக நமக்குக் கெட்ட பழக்கம் மிகவும் சீக்கிரத்தில் படிந்துவிடுகிறது. நாம் சற்றுக் கவனித்துக் கெட்டதை நீக்கி நல்லவற்றைக் கைக்கொள்ளவேண்டும்; நீங்கள் கடை மாணாக்கர்களாகாமல் உத்தம மாணாக்கர்களாகவேண்டும்; மேனாட்டாரிடத்தில் ஊக்கமும் விடா



முயற்சியும் விசேஷமாகக் காணப்படுகின்றன; குறித்தகாலத்தில் ஒரு வேலையைச் செய்வதில் நம்மவரிடத்தில் குறை இருக்கிறது; ஆனால் மேனாட்டார்கள் இவ்விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையுள்ளவர்களாக விருக்கிறார்கள். இன்னின்னகாலத்தில் இன்னின்ன வேலை செய்யவேண்டுமென்று நிச்சயம் செய்துகொண்டு அதன்படி காரியங்களைச் செய்து வருகிறார்கள்; அவர்களுக்கு உழைப்பே முதன்மையாக இருந்து வருகிறது; அவர்கள் மேன்மையாக இருப்பதற்குக் காரணம் அதுதான்; இங்கிலாந்தில் அற்பவேலைக்காரர்களுக்குக்கூட இந்தவிதமான உணர்ச்சி இருந்து வருகிறது. ஆதலால், நாமும் அவர்களுடைய நற்பழக்கங்களைக் கைக்கொண்டு முன்னேற்றத்தை அடையும்படியான வழிகளை அனுசரித்து வரவேண்டும்.''

இந்த அறிவுரைகளை மாணவர்கள் மனத்துட்கொண்டு இவற்றின்படி நடந்துவருவார்களாயின் முன்னேற்ற மடைவார்கள்.

A. சௌந்தரராஜ அய்யங்கார், தலைமை உபாத்தியாயர்,
போர்டு ஸ்கூல், வேதாரணியம்.

## ஞானப்பகுதி.

### வேதாந்த சாரசங்கிரக வசனம்.

(257-ம் பக்கத் தொடர்ச்சி.)

அனுபவிக்கத்தக்கவை யாயுள்ள மனை மனைவி மக்கள் முதலான பொருள்களினிடத்தில் சுகமில்லை. அதற்கு மாறாகத் துக்கமே யுண்டாகும். ஆகையால் கர்ப்பவாசம் முதல் இந்திரபதவி பிர்மபதவி யீறாகவுள்ள எல்லாப் பதவிகளும் வெறுக்கத்தக்கனவே. யோசித்துப் பார்க்குமிடத்து எல்லாவற்றிலும் துன்பமே மிகுந்திருக்கின்றது என்பது இதுகாறும் கூறப்பட்டது. அங்ஙனமாயின், மனிதர் அவற்றினிடத்து வெறுப்புக்கொள்ளாமல் மேலும் மேலும் அவற்றை யடையவேண்டுமென்று விருப்பங்கொள்ளுவதற்குக் காரணம் யாது? எனின்:—கூறுகின்றார். போக்கியப் பொருள்களினிடத்துள்ள இன்பதுன்பங்களின் பாகுபாடுகளை நன்குவிசாரித்தறியவேண்டும். இன்றேல் புலப்படாது. அது புலப்படாவிடத்து அவற்றினிடத்து உவர்ப்புத் தோன்றாது. ஆகையால் இரண்டாஞ்சாதனமாகிய இகமுத்திரார்த்த பல போக விராகம் உண்டாவதற்கு அவற்றை நன்கு ஆராய்ந்தறிதல் அத்தியாவசியமாகலின், அவற்றை விவரிக்கிறார்.

அத்திப்பழமானது மேற்பார்வைக்கு வெகு அழகுள்ளதாகவும் தின்ன வேண்டுமென்னும் ஆசையைத் தரத்தக்கதாகவு மிருக்கிறது. ஒருவன் அதைப் பிட்டு உள்பாகத்தைப் பாராமல் வாயிலிட்டுத் தின்பானானால் அது அவனுக்கு நன்றாக இருப்பதாகவே தோன்றும். அப்படிச்செய்யாமல் பிட்டு அதனுள்

பாகத்தைப் பார்ப்பானானால் அதனுள் புழுக்கள் நிறைந்திருப்பதைக் காண்பான். பிறகு அவன் அதைக் கையாலும் தொடச் சகியான். அதுபோல, எல்லா அனுபவிக்கப்படும் பதார்த்தங்களும் விசாரித்துப் பார்க்காதவர்களுக்கு ரம்மியமானவைகளாகக் காணப்படும். உண்மையை ஆராய்ந்தறியும் ஞானிகளுக்கு ஸ்திரீகளினிடத்திலும் மற்றப் பதார்த்தங்களினிடத்திலும் இவை யோக்கியமானவையென்னும் பாவ முண்டாவதில்லை.

(இவ்வாறு பொதுப்படக்கூறி, மேல் சில முக்கிய பதார்த்தங்களின் அசுகத்தன்மையை விவரிக்கத் தொடங்கி, முதலில் கிருகாபிமானத்தின் தன்மையைக் கூறுகிறார்.)

நண்டானது ஓர் பிலத்தினிடத்தில் நீரில் வாசஞ் செய்துகொண்டிருக்கின்றது. அந்தக் கிணற்றிலுள்ள தண்ணீர் முழுவதும் உலர்ந்துபோனாலும், அக்கிணற்றின்மேல் கொண்டிருக்கும் அபிமானத்தால் அதைவிட்டு வெளியேற முடியாமல் அங்கே தானே மரணமடைகின்றது. அதுபோலவே, மனிதன் பிராந்தியினால் கிருகஸ்த சுகத்தினிடத்து ஆசக்தியுடையவனாய் அதினின்றும் மீளமுடியாமல் அதனிடத்தேதானே யிருந்து வீணாக நாசத்தையடைகின்றான்.

(கிருகஸ்தனுக்குப் பட்டுப்பூச்சி உவமை)

பட்டுப்பூச்சியானது தான் ஒருவர் கண்ணிலும் தென்படாமல் மறைந்துகொண்டால் சுகமாக இருக்கலாம் என்று நினைத்துத் தன் சரீரத்தினின்றுமுண்டாகும் ஓர் வகை நூலினால் தன் உடலைப் பலமுறை சுற்றிக்கொண்டு பின்பு அதினின்றும் வெளியேறச் சக்தியற்று அதனுள் அகப்பட்டுக்கொண்டு மரணமடைகின்றது. அதுபோல, கிருகஸ்தாச்சிரமத்திலிருப்பவனும் புத்திரரிடத்திலும், மனைவியிடத்திலும், நண்பரிடத்திலுமுள்ள நட்பு அல்லது ஆசை அல்லது பிரேமை அல்லது பாசம் என்று சொல்லப்படுகின்ற பந்தத்தினால்-கயிற்றினால்-கட்டப்பட்டவனாய், எப்பொழுதும் அந்தப் பிரேமை என்னும் பாசத்தை நீக்கிக்கொண்டு கிருகத்திலிருந்து வெளிப்படுவதற்குச் சக்தியில்லாதவனாய் வீணாக மரணமடைகின்றான்.

(கிருகம் காராக்கிருகத்தைப் போன்றது என்று சிறைச்சாலையை அதற்கு ஒப்பிடுகிறார்.) இந்தக் கிருகத்தினிடத்தும் புருஷனுக்கு ஸ்திரீ சுகத்திற்காக ஏற்பட்ட கர்மபந்தங்களினால் விடுதலை யுண்டாவதில்லையாகலின், நன்கு விசாரிக்குமிடத்து காராக்கிருகத்திற்கும் இந்தக் கிருகத்திற்கும் என்னபேதம் காணப்படுகின்றது? (ஒருபேதமுமில்லை. இன்னும் ஒருவகையில் பார்க்குமிடத்துச் சிறையே விசேஷமானது.) இந்த கிருகமாகிய சிறைச்சாலையில், கிருகத்தினிடத்திற் கொண்டுள்ள அபிமானமே காலில் கட்டப்பட்ட சங்கிலியாகும். மனைவி மக்களிடத்துக்கொண்டுள்ள ஆசையே உறுதியான கழுத்துக் கயிறாகும். தனத்தின்மேலுள்ள மிகுந்த ஆசையே தலையில் விழுகின்ற பேரிடியாகும்; பிரத்தியட்சமாய்ப் பிராணனைப் போக்குவதற்குக் காரணமானதா யிருக்கின்றது. அநேகமான ஆசைகளென்னும் சங்கிலிகள் கால்



களில் சுற்றிக்கொண்டு எழுந்திருக்கவொட்டாமற் செய்கின்றன. காமம் குரோதம் மதம் முதலான காவலர் எப்பொழுதும் காவல் காத்துக்கொண்டிருக்கின்றனர். புத்ரவாசை மண்ணாசை பெண்ணாசை யென்னும் மூவாசைகளும் அவனைத் தம் வசமாக்கிக்கொண்டமையால் கிருகஸ்தன் எப்பொழுதும் பராதீனனாய்விடுகிறான். மோகமென்னும் மதில் சூழ்ந்திருக்கின்றது. இவ்வாறு சம்சாரமென்னும் சிறையிற் சிக்குண்டு மனிதன் அதினின்றும் நீங்குவதற்குச் சாமர்த்திய மில்லாதவனா யிருக்கிறான்.

(இனி ஸ்திரீ சொரூபத்தினிழிவைக் கூறுகிறார்.) மனிதன் தான் விரும்பும் ஸ்திரீயின் சொரூபம் எவ்வளவு விகார சொரூபமுடையதாயிருந்தாலும் காமமென்னும் அந்தகாரத்தால் மறைக்கப்பட்ட பார்வையுடையவனாய் மோகமடைகிறான். இது யுக்தந்தான். கண்பார்வை யிழந்தவனாகிய குருடனுக்கு "இது நல்லவஸ்து; இதனால் சுகமுண்டாகும்; இது கெட்டவஸ்து; இதனால் துன்பமுண்டாகும்" என்னும் விசாரணை யில்லை யன்றோ?

சரீரத்தின் தன்மையை ஆராய்ந்தறியாமல் அது அழகா யிருக்கின்றது என்றெண்ணுவது பெரும் பேதைமையாகும். சரீரம், இரதம் இரத்தம் தோல் மாமிசம் சுக்கிலம் எலும்பு மூளை என்னும் எழுதாதுக்களினால் ஆக்கப்பட்டது. மலபாண்டமாகவுள்ளது. எங்கும் துர்க்கந்தம் வீசுவது.

"ஊற்றைச் சரீரத்தை ஆபாசக் கொட்டிலை ஊன்பொதிந்த
பீற்றல் துருத்தியைச் சோறிடுந் தோற்பையைப் பேசரிய
காற்றிற் பொதிந்த நிலையற்ற பாண்டத்தைக் காதல்செய்தே
ஏற்றுத் திரிந்துவிட் டேனித னாலென்ன பேறெனக்கே"

என்று பெரியோர்களால் இகழப்படுவது.

சரீரத்தின் இழிவைப் பட்டினத்தடிகள் தாயுமானவர் போன்ற பெரிய மகான்கள் பலர் தம் பாடல்களின் மூலமாக நன்குவிளக்கி யிருக்கின்றனர். எனினும் ஓர் சிறு கதையின் வாயிலாக அதை நிரூபிப்பாம்:

ஒருவன் ஒரு சற்குருவைத் தேடியடைந்து தனக்குத் தத்துவோபதேசம் செய்யுமாறு வேண்டிக்கொண்டான். அப்பொழுது அக்குருவானவர் அவனைப் பார்த்து "அப்பா! குருவினிடம் உபதேசம்பெறச் செல்பவன் வெறுங் கையோடு செல்லலாகாது. குரு தக்ஷிணையாக ஏதேனுமொன்றைக் கொண்டு போகவேண்டும். ஆகையால் நீயும் அப்படிச்செய்" என்றனர். என்னலும், அவன் "சுவாமி! எனது உடல் பொருள் ஆவி என்னும் மூன்றையும் உமக்குச் சமர்ப்பிக்கின்றேன்" என, குரு "அவை எனக்கு வேண்டாம். நான் கேட்கும் பொருளை எனக்குக் கொண்டுவந்து தந்தால் போதும். அது என்னவென்றால், இவ்வுலகத்தில் எல்லாப் பொருள்களினும் இழிவாகவுள்ள பொருள் எதுவோ அதை யறிந்துகொண்டுவா" என்று கூறினார். அவனும் அதற்குச் சம்மதித்துச் சென்று பலவிடங்களிலும் தேடியும் கிடையாமல் வருந்திக் கடைசியாக மலமே எல்லாவற்றினும் இழிவானதெனக்கருதி அதை யெடுத்

துச் செல்கையில், அம்மலமானது அவனைப்பார்த்து "ஐயா! என்னை எங்கே கொண்டுபோகிறாய்?" என்ன, அவன் "என் குருவின் கட்டளைப்படி எல்லாவற்றினும் இழிவாகிய உன்னைக் கொண்டுபோகிறேன்" என்றான்.

அப்பொழுது அது அவனைப்பார்த்துக் கலகலவெனச் சிரித்து "ஐயா! உமக்குப் பைத்தியம் பிடித்திருக்கின்றதோ! நானா இழிந்தபொருள்? என்னை இன்னதென் றறிந்தீரா? சொல்கிறேன், கேளும். நேற்றையதினம் நான் எவ்வளவோ மேலாக யாவராலும் விரும்பப்படும் நிலைமையில் போளி, பூந்தி, அல்வா, பாயசம் முதலிய அருமையான பொருள்களாக விருந்தேன். என்னை ஒருவன் தன் வாயிலிட்டு வயிற்றிற்குள் தள்ளினான். ஓ ரிரவு முழுதும் அவன் வயிற்றிலிருந்தேன். அப்பாழான மனிதனுடைய சேர்க்கையால் எனக்கு இக்கதி வாய்த்தது. இப்பொழுது நான் இழிந்தவனா! அந்த மனிதன் இழிந்தவனா? என்பதை நீரே யோசித்துக்கொள்ளும்" என்றது. உடனே அச்சீடன் தன் உடலின் இழிவை நினைத்து அவ்வுடலையே குருவிற்குச் சமர்ப்பித்தான் என ஓர் கதை சொல்லப்படுவதுண்டு. ஆகையால் உடல் மிக்க வெறுக்கத் தக்கதாகும். மூக்கு சளியைப் பெருகச்செய்யும். கண்களில் தண்ணீரும் பீளையும் பெருகும். காதிற் குறும்பி. உடலில் வியர்வை. இவ்வாறு அது மலத்தால் நிறைந்ததும் எல்லாவற்றிலும் கெட்ட நாற்றத்தால் தோஷ யுக்தமானதுமாகும். இவற்றையன்றி மற்றை யங்கங்கள் சொல்வதற்கு மாத்திரமல்ல, மனத்தால் நினைப்பதற்கும் யோக்கியமற்றவையாகும். இப்படிப்பட்டதான பெண்ணின் உருவம் ஞானிகள் கண்ணிற்கு எப்படி விஷயமாகும்.

விட்டிற் பறவையானது தூரத்திலிருந்து தீப வொளியைக்கண்டு ரமணீயமா யிருக்கின்றதென்றெண்ணி அதில் விழுந்து எரிந்து போவது போலவே, பார்வையில்லாத இந்த மனிதனும் சூக்ஷ்மமான மோக்ஷமார்க்கத்தைப் பார்க்கமுடியாதவனாய், மாமிசம், எலும்பு, மஜ்ஜை, மலம், மூத்திரம் இவைகளுக் கிருப்பிடமான ஸ்திரீவடிவை, ரமணீயமா யிருக்கிறதென்னும் எண்ணத்தோடே பார்க்கிறான். காமத்தால் ஸ்திரீயை விரும்பி விட்டிலைப் போல நசிக்கிறான்.

(வீட்டை எமலோகத்திற்கு ஒப்பானதென்கின்றார்.)

மோட்சத்தை விரும்பும் விவேகிகளுக்குக் காமமே பிரத்தியக்ஷ எமனாயிருக்கின்றது. மனைவியே வைதாணியென்னும் நதியாம். வீடே எமலோகமாகும். மனிதனுக்கு எமலோகத்திலாகிலும் கிருகத்திலாகிலும் தாபத்திரயத்தாலுண்டாகும் கஷ்டங்கள் நீக்கப்படுவதில்லை. (வீட்டிலும் தாபத்திரயங்களுண்டு. எமலோகத்திலும் தாபத்திரயங்களுண்டு.) ஆனால், மூடசனங்கள் வீட்டில் அத்தாபத்திரயங்கள், சில சமயங்களில் சிறிது அத்தாபத்திரய துக்கமில்லாதிருத்தலைக்கண்டு அவற்றைச் சுகரூபமாகக் கருதுகின்றனர். மேலும், விசாரித்தால் உலகத்தில் காமனுக்கும் எமனுக்கும் மிக்க ஏற்றத் தாழ்வுகளுண்டு. எமன் சத்துருவாகவிருந்து இம் மனிதனுக்குப் பிரியத்தைச் செய்கிறான். காமனோ பிரியனாயிருந்து அப்பிரியத்தைச் செய்கிறான். எமன்



துஷ்டருக்கே துக்கத்தை யுண்டாக்குகின்றான். சத்புருஷருக்கோ இதமானவனாய்ச் சௌக்கியத்தைச் செய்கிறான். காமன் சத்புருஷருக்கே மோக்ஷமார்க்கத்தை நிரோதிக்கின்றவனாய் அனிஷ்டத்தைச் செய்கிறான் என்றால் துஷ்டர்களைப்பற்றி என்ன சொல்வது?

பூ. ஸ்ரீநிவாசன், தமிழ்ப்பண்டிதர், சித்தூர்.

# தெய்வவணக்கப் பகுதி.

## கடவுள் வழிபாடு.

'கடவுள் வழிபாடு' என்பது ஒவ்வொருவருந் தத்தமக்குரிய கடவுளரை வழிபடுதலாம். அத்தகையை வழிபாடு நடைபெற வேண்டுமெனில் தெய்வ நம்பிக்கை இன்றியமையாததாகும். தெய்வநம்பிக்கை யின்றேல் யாரை எவ்வாறு வழிபடுவது என்னும் கடா நிகழுமாகலின், எத்தகைய வழிபாடும் நிகழாதென்பது உய்த்துணர்க. எல்லா உலகங்களையும் படைத்தளித்தழிக்க வல்லானொருவனுளனாதல் வேண்டுமென்றும் அத்தகையோற்கு உருவு முதலியன இலவேனும் அவனை யொருவாற்றா னுருவுடையனாக வெண்ணி வழிபடுதலே இம்மானிடச் சட்டை எடுத்ததனாலாம் பயனென்றும் உணர்வார்க்கே இனி யாம் கூறுவன பயன்படுமாகலின், அன்னோரே இதன்கண் அழுந்துவாராக. 'அரிதரிது மானிடராதலரிது' என்றும், 'எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதான் யாதினுமரிதரிது' என்றும், 'மக்களுடம்பு பெறற்கரிது' என்றும் பிறவாற்றானும் நன்னூலுணர்ந்த தொன்னூற் புலவரானும் மெய்ஞ்ஞானச் செல்வம்பெற்ற ஆன்றோரானும் மானிடப் பிறப்பின் அருமை நன்கெடுத்துக் கூறப்பட்டமையால் அறிவுடையோர் இப்பிறவிக்கண்ணே அறத்தின் வழி நின்று கடைத்தேறுவர். அவ்வாறு கடைத்தேறுவதற்கு முதன்முதல் கடவுள் வழிபாடே சிறந்ததாகையால் அவ்வழிபாட்டின்கண்ணே கருத்தை நிறுத்தி மேலோரான் வரையறுக்கப்பட்ட கட்டளையை மேற்கொண்டு ஒழுகுதல் வேண்டும்.

உலகிலே எக்காரியத்தை முடிக்கவேண்டுமெனினும் அதன்கண் கருத்து நிற்கவேண்டுமென்பது யாவரும் உணர்ந்ததொன்றே. கருத்தை வேறுபடுத்துச் செய்யப்படுகின்ற எதுவும் செய்வோன் நினைத்தவாறே பயனை முழுதுங் கொடாது என்பது திண்ணம். அதுபோன்றே கடவுள் வழிபாட்டின்கண்ணும் கருத்துப் பிறழாதிருந்தாலன்றி நினைத்தபயன் உண்டாகாது. அன்றியும், கடவுள் வழிபாடு ஆற்றும்போழ்து மனம் கெட்ட விடயங்களிற் செல்லுமாயின் அஃது பெரும் பாபத்தையும் பயப்பதாகும். கருத்தின்றி எத்துணைப் பொருள் செலவுசெய்து கண்டார் வியக்குமாறு பல்வித கிரியைகளைப் புரியினும் பெரும்பயன் விளையாது. சிலர், பிறர் புனைந்துரையாடல் வேண்டுமென்ற கருத்தோடு பலர் முன்னிலையில் கடவுட்பூசை செய்து மகிழ்கின்ற

ணர். அம்மகிழ்ச்சி அவர்க்கு எத்துணைப் பயனைக் கொடுக்குமோ யாம் அறியகில்லேம். எத்தகைய கிரியைகளையுஞ் செய்யாதிருப்பினும் மனம் இறைவனையே நாடி இருக்குமெனில் அதுவே சிறந்த கடவுள் வழிபாடாம். அவ்வாறு வழிபடுவார்க்குப் பூக்கொய்தல் முதலிய திருப்பணிகளும் வேண்டுவனவல்ல. இறைவற்கு அர்ப்பணஞ் செய்யத்தகுந்தது அன்பு ஒன்றுமே. அவ்வன்புதான் கருத்தின்றிக் கூடாதாகலின், கருத்து மாறுபடலாகாது என்று கூறினோம். அன்பின்றி அர்ப்பிக்கப்படும் எத்தகைய இனியபொருளும் கடவுட்குரியதன்று. அன்போடு அளிக்கப்படும் எத்தகைய இழிந்த பொருளும் இறைவற்கு அமுதன்னதாம். இதற்குத் தெய்வக் கண்ணப்பரே சான்றாவர். இறைவன் அன்புக்குரியவனே யன்றிப் பொருளுக் குரியவனல்லன். ஆதலின், அரிய பொருட்களையெல்லாம் வீண்முயற்சி யெடுத்துக் கூட்டி இறைவன் முன்னிலையிற் படைப்பதனால் யாதொரு பயனுமின்று. கடவுள் வழிபாடு என்பது பொழுதுபோக்கை யுன்னியோ புகழை நினைத்தோ தத்தமக்கேற்றவாறும் நெறியின்றியுஞ் செய்யப்படுவதன்று. இதை வலியுறுத்தற்கு,

> "கையொன்று செய்ய விழியொன்று நாடக் கருத்தொன்றெண்ணப்
> பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால்கமழு
> மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்புமியான்
> செய்கின்ற பூசையெவ் வாறுகொள் வாய்வினை தீர்த்தவனே"

எனப் பட்டினத்தடிகளும் அருளிப்போந்தனர். அருள்வாய்த்த செல்வரெல்லாரும் இவ்வாறே வலியுறுத்துவாராயினர். இறைவற்கு அன்பின்றிச் செய்யப்படும் பூசை வீண் பகட்டாய் முடிவதன்றிச் செய்வோனது அறியாமையையுங் காட்டுவதாம். மக்கள் தம்முள் ஒருவர் ஒருவரை விரும்பும்பொருட்டு உள்ளன்பின்றிச் செய்யப்படும் உபசாரமுறைகளையும் இறைவன்மாட்டுச் செலுத்தின், அதை இறைவன் உணருந் திறத்தன் அல்லனோ? ஆகலின், அஃது அடாது என்க.

கடவுள் வழிபாடு ஆற்றும்போழ்து முக்கரணங்களும் தூய்மை அடைந்திருத்தல்வேண்டும். இம்மூன்றும் எப்போழ்துமே தூய்மை அடைந்திருத்தல் மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாததேயாயினும் அஃது இல்லறத்தார்க்குப் பலவாற்றானுங் கூடாமையின் கடவுள் வழிபாட்டின்கண்ணேனும் அவை தூய்மை அடைந்திருத்தல்வேண்டும். மெய்யும் மொழியுந் தூய்மை அடையாவிடின் வழிபாடுந் தூய்மையடையாதுபோம். மனந்தூய்மை பெறாவிடின் அஃது கடவுள் வழிபாடுமன்றாம். ஆகவே, மனம், மொழி, மெய் என்னும் மூன்றும் தூய்மை அடைதல் வேண்டுமென்பது பெறப்பட்டது. ஆயினும், வெளிப்படையாயின்றி மனத்தகத்தே வழிபாடு ஆற்றும் ஆற்றலுடையார்தமக்கு மனமொன்றுமே தூய்மை அடைதல் அமையும். அவ்வாறு வழிபடுவது மானதபூசை யெனப்படும். அதுவே உயர்ந்த வழிபாட்டு முறைமையாம். இவ்வழிபாடாற்றுதல் எளிதே யெனினும் பலர் தமது வாணாளை வீணாய்ப் போக்குகின்றார்களே யன்றிச் சிறிதும் அதன்கண் முயல்கின்



றார்களில்லை. பகற்போது பல முயற்சிகளிலும் அழுந்துவார் தாம் படுக்கைக்குச் செல்லும் போழ்தேனும் அதனை மேற்கொள்ளலாமன்றோ? மானதபூசை எவ்வாறாற்றல் வேண்டுமென்பது கூறாதே அறியத்தக்கதொன்றே. அறியாதார் பிறர்வாய்க் கேட்டேனும் நன்னூல்களைப் பயின்றேனும் உணர்க. சுருங்கக் கூறுமிடத்து, மனத்தின் கண் வழிபடு கடவுளை நிறுத்தி வழிபடுவதே மானதபூசையாம். இஃது மனவமைதி யேற்படும் போழ்து செய்தல் நன்று.

(தொடரும்) இராமசுப்பிரமணிய நாவலர்.

உ

சிவமயம்.

# சைவப்பகுதி.

(260-ம் பக்கத் தொடர்ச்சி.)

## 11. சைவக்கிரியைகள் ஞானசாதனமாதல்

இவ்வாறமைந்த தலம், மூர்த்தி, தீர்த்தங்களில் நடக்கும் உத்ஸவங்களால், தான் செய்யும் கிருத்தியங்களை, இறைவன் நமக்கு விளக்கி ஞானத்தைப் பாலிக்கு முறைமையை ஆராய்வோம்:

உத்ஸவம் என்பது மகா யாகமெனப் பொருள்படும். உத்=மகா, ஸவம்=யாகம்; உத்ஸவமானது நித்யோத்ஸவம், வாரோத்ஸவம், பக்ஷோத்ஸவம், மாதோத்ஸவம், அயனோத்ஸவம், வருடோத்ஸவம், மகோத்ஸவம் எனப் பலதிறப்படும்.

நித்யோத்ஸவமாவது—ஞாயிறுமுதல் சனியீறாகவுள்ள கிழமைகள்தோறும் ஆலயத்தில் செய்யப்படும் பூசை. இது நித்ய பஞ்சகிருத்யத்தைக் குறிக்கும்.

நித்யோத்ஸவத்தில் ஐந்தொழில் நிற்கு முறைமையாவது:—அபிஷேகம்—சிருஷ்டி, கௌதுகபந்தனம்—திதி, தூபம்—சங்காரம், கற்பூரதீபம்—திரோபவம், கற்பூரக்கிளைத்தீபம்—அனுக்கிரகமாகும்.

வாரோத்ஸவமாவது—சுக்கிரவாரந்தோறும் உமாதேவியாரை எழுந்தருளுவித்தல்.

பக்ஷோத்ஸவமாவது—பிரதோஷம், அமாவாசை, பௌர்ணமி முதலிய உத்ஸவங்கள்.

மாதோத்ஸவம்—மாசப்பிரவேசத்தன்று கொண்டாடப்படும் உத்ஸவம்.

அயனோத்ஸவமாவது—உத்தராயணம், தக்ஷிணாயனம், சித்திரை விஷு, ஐப்பசி விஷு முதலிய உத்ஸவங்கள்.

வருடோத்ஸவமாவது—பிர்மோத்ஸவம், தெப்போத்ஸவம், சைத்ரோத்ஸவம், வசந்தோத்ஸவம் முதலிய உத்ஸவங்கள்.

உத்ஸவகாலங்களில் ஆலயங்களில் நடக்குங் கிரியைகள் பஞ்சகிருத்தியங்களைக் குறிக்கும். அஃதாமாறு:—அங்குரார்ப்பணம், துவஜாரோகணம், திருக்கல்யாணம் ஆகியவை-சிருட்டியை யுணர்த்துவன; வாகனுதி உத்ஸவம், ஓமம், பலியெனு மிவைகள்—திதியை உணர்த்துவன; இரதாரோகணம், சூர்ணோத்ஸவம், கிருஷ்ணகந்தோத்ஸவமாகியவை—சங்காரத்தைக் குறிக்கும்; மௌனோத்ஸவம்—திரோபவமாகும்; சத்தியூடல், தீர்த்தம் எனும் உத்ஸவங்கள்—அநுக்ரகமாகும்.

இனி, பத்துநாள் உத்ஸவங்கள் எவ்வாறு ஞானசாதனமாகின்றன வென்பதை ஆராய்வோம்:—

முதல்நாள் தூலநீக்கத்தையும், இரண்டாம்நாள் தூல சூக்குமநீக்கத்தையும், மூன்றும்நாள் மூவினை, முக்குணம், முக்குற்றங்களின் நீக்கத்தையும், நான்காநாள் அந்தக்கரணம், நால்வகைத்தோற்றங்களின் நீக்கத்தையும், ஐந்தாம்நாள் ஐம்பொறி, ஐந்தவத்தை, ஐம்மலங்களின் நீக்கத்தையும், ஆறும்நாள் காமக் குரோத லோப மோக மத மாற்சரியங்களின் நீக்கத்தையும், ஏழாம்நாள் எழுவகைப் பிறப்புக்களின் நீக்கத்தையும், எட்டாம்நாள் எண்குண விளக்கத்தையும், ஒன்பதாம்நாள் நவபேத விளக்கத்தையும், பத்தாம்நாள் பராநந்தக்கடலிற் படிவதையும் உணர்த்துகின்றன.

இப்பத்துநாள் உத்ஸவங்களையும் நடனமுறையில் பெயரிடுமிடத்து, முதல்நாள்—பிரகிருதி நடனம், 2-ம் நாள் இருவினை நடனம், 3-ம் நாள் முக்குண நடனம், 4-ம் நாள் அந்தக்கரண நடனம், 5-ம் நாள் பஞ்சேந்திரிய நடனம், 6-ம் நாள் அறுவகை (காமாதி) நடனம், 7-ம் நாள் சப்தகோடி மகாமந்திரபத நடனம், 8-ம் நாள் வித்தியாதத்துவ ஆணவநீக்க நடனம், 9-ம் நாள் நவபேத நடனம், 10-ம் நாள் பேரின்பாதீத நடனம், எனப் பெயர்பெறும். பதினோராம்நாள் பதி பசு பாச நடனமாகும்.

உத்ஸவகாலங்களில் இறைவன் வாகனுதிகளில் உலாவருதலின் அறிகுறியாவது:—

முதல்நாள் விருக்ஷத்தடிச் சேவையானது—மாயையெனும் பொருள்; விருக்ஷம் கிளை இலைகளுக்கு வித்து காரணமா யிருப்பதுபோல, சகல லோகங்களுக்கும் காரணபூதமா யிருத்தலை உணர்த்தும். இது சிருஷ்டியாகும்.

இரண்டாம்நாள் சூரியப்பிரபை சந்திரப்பிரபையி லெழுந்தருளித் தரிசனந் தந்தருளுவது—காண்பானுகிய ஆன்மாவுக்குக் காட்டுவான் தான்என்பதை உணர்த்த, காணுங் கண்ணனுக்குக் கதிரொளியாய் நின்றதை உணர்த்தும். இது திதியாகும்.

மூன்றும்நாள் பூதவாகனம்—ஆன்மாக்களுக்குக் கன்மானுகுணமாக மரணவஸ்தையை விதிக்கின்றேமெனக் குறிக்கின்றது; இது சங்காரம்; அன்றியும் பஞ்ச பூதங்களிலும் விளங்குவோன் தானேயென விளக்குகின்றது.



நான்காம்நாள் கைலாசவாகனம்—ஆன்மாக்களின் மலத்தைப்போக்கி அவைகளுக்கு நிரதிசயானந்தஜோதிர்மய பரமாகாசமாகிய பரசிவலோகமெனப்படும் கைலாயத்தைக் கொடுத்தருளும் பரமபதி தானேயென்பதைக் காட்டுகின்றது.

ஐந்தாம்நாள் இடபவாகனமானது — பசுபதிதானென்பதையும், தர்மதேவதையை இடமாகக்கொண்டவனென்பதையும், உணர்த்துகின்றது. இடபத்தின் நான்கு கால்களும் அந்தக்கரணத்தையும், இடபம் ஆன்மாவையும் விளக்குவன; இடபத்தின்மீதுள்ள இறைவன் தோற்றம் அவற்றின்மேல் ஈஸ்வரன் விளங்குகின்றதை உணர்த்துகின்றது. இது அநுக்கிரகம்.

ஆறும்நாள் யானைவாகனம்—தும்பிக்கை போன்ற சுழுமுனுநாடியின் வழியாய்த் தன்னைத் தரிசிக்கவேண்டுமென்பதைக் காட்டுகின்றது. அன்றியும் பிரணவதாரகன் தான் என்பதை உணர்த்துகின்றது.

ஏழாம்நாள் நந்திவாகனம்—ஆசாரியனை அதிட்டித்து நின்று ஆன்மாக்களைப் பரிபக்குவப்படுத்துவாரென்பதைக் காட்டுகின்றது.

எட்டாம்நாள் குதிரைவாகனம்—குதிரைக்கு வாசியென்ற பெயரிருத்தலால் இடை பிங்கலை சுழும்நா நாடிகளில் இயங்குகின்ற வாசியாகிய பிராணவாயுவில் சவாரிசெய்தலைக் குறிக்கும்.

ஒன்பதாம்நாள் இரதம்—இதன் அமைவு அண்ட பிண்டத்துக்குச் சமானம். அஃதாமாறு:—விஸ்வ விராட்சொரூபமே எட்டடுக்குத் தத்துவம்; உச்சிக்கலசம் சோடசாந்தம்; அதற்கடுத்த கீழடுக்குத் துவாதசாந்தம்; அதற்கடுத்தது மஸ்தக ஆதிஸ்தானம்; அதற்கடுத்தது மஸ்தக மத்தியஸ்தானம்; அதற்கடுத்தது மஸ்தக அந்தஸ்தானம்; அதற்கடுத்தது புருவமத்தியஸ்தானம்; நடுவிற்றுங்குங் குத்துக்கால்கள் தத்துவக்கால்கள்; முன்மூன்று துறைகள் மூன்று கண்கள், பின்னவை சிகை; இடம் வலம் காதுகள்; ஈஸ்வரனெழுந்தருளியிருக்குங் கேடயபீடம் மூ[illegible]ழ்; சூரியசந்திரகலைகளே வாசிகள்; சாரதி அக்கினிகலை; (இவை நாசி); எட்டாமடுக்குக் கண்ட ஸ்தானம். அதையடுத்தது இருதயம்; அதையடுத்தது நாபி; அதை யடுத்தது குண்டலி ஸ்தானம்; தசசக்கரங்கள் தசவாயு எனக் காண்பதால், இறைவன், இதற்குக் கர்த்தா தானொருவனேயென்றுணர்த்தி, இவ்வாறமைந்த பிண்டதத்துவ சரீரமாகிய ரதத்தில், தசவாயுக்களாகிய சக்கரங்களை நிறுத்தி, அசைவற்ற மனமாகிய அச்சுப் பட்டடையை உந்தி குண்டலியிலிருந்து கீழ்ப்பட்டடை நாபிக்கு ஏற்றி லயப்படுத்தி, அங்கிருந்து மேல்பட்டடையாகிய இருதயத்துக்கு ஏற்றிலயப்படுத்தி, அங்கிருந்து அதற்கடுத்த பட்டடையாகிய கண்டஸ்தானத்துக் கேற்றி லயப்படுத்தி, பின் அடுத்த பட்டடையாகிய வாய்க்கு ஏற்றிலயப்படுத்திப் பின்முறையே இரதக்குதிரையாம் நாசிக்கும், அங்கிருந்து கண்வழியாகவும் நடுவழியாகவும் மேல்நோக்கி ஆறும் அடுக்காகிய புருவமத்திக்கு மேற்றி, நெற்றிமுதல் துவாதசாந்தம்வரை ஏற்றி இலயப்பட்டுச் சும்மா இருந்தபடியிருக்கும் நித்தியசுகியா யிருந்திடல்வேண்டுமென்று இலயக்கிரமத்தைக் காட்டுகின்றது.

அன்றியும் ஆணவம், மாயை, கன்மமென்னும் மூன்று மலங்களையும் அழித்த வீரத்தைக் குறிக்கின்றது.

10-ம் நாள் பிக்ஷாடனமூர்த்தி—ஆவாரணம் ஏழையும் ஒழித்துவிடும்படி காட்டுகின்ற திருக்கோலம். இது திரோபவம்.

11-ம் நாள் நடராஜகோலம் ஆன்மாக்களை ஆனந்தத்தில் அழுத்தல். இது அநுக்கிரகமாகும்.

(தொடரும்) வாலையாநந்தம்.

# வைத்தியப் பகுதி.

## ஜனனம்.

(179-ம் பக்கத் தொடர்ச்சி.)

சந்திரநாடி:—உதடுகளுக்கு அகத்தில் சவ்வு மடிந்து நீண்டிருக்கும்; அதற்குச் சந்திரநாடி என்று பெயர்.

யோனிலிங்கம்:—கடிதடத்துக்கடியில் கூர்மையா யிருக்கிற உறுப்புக்கு யோனிலிங்கம் என்று பெயர்; அதை ஆண் குறிக்கு ஒப்பிட்டுச் சொல்லலாம்.

யோனிவாசல்:—யோனிலிங்கத்துக்கு ஒரு அங்குலம் பின்னிட்டு அண்டாகாரமாயிருக்கிற துவாரத்துக்கு யோனிவாசல் என்று பெயர். யோனிவாசலுக்குமேலும் லிங்கத்துக்குக் கீழுமாகவிருக்கிற பள்ளத்தில் மூத்திரதாரையின் துவாரம் காணப்படுகிறது. டாக்டர். மே. மாசிலாமணி முதலியார்.

(தொடரும்)

## பித்த விரிவிற்கு மருந்து.

(276-ம் பக்கத் தொடர்ச்சி.)

பித்த விரிவுள்ள இடத்தில் மண்ணெண்ணெயை ஆறுமணிக்கொரு முறையாக இருமுறைதடவி (சுத்தம்செய்து) மறுநாள், நல்லெண்ணெய் படி வீசத்தை ஆமணக்கெண்ணெய் படி அரைவீசத்துடன் கலந்து ஓர் பித்தளை அல்லது கல் விளக்கில் ஊற்றித் திரியிட்டு இரண்டுநாட்கள் விளக்கேற்றி (பாதி எண்ணெய் மீதமிருக்கும்படி எரித்து) 3-ம் நாள் எரிந்த மீதி எண்ணெயை எடுத்து வைத்துக்கொண்டு நாலுமணிக்கொருதரம் அந்தப் பித்தவிரிவுள்ளவிடத்தில் தடவி வரவும். ஓரோநாளில் குணம் தெரியும். இது அனுபவத்திலறிந்த மருந்து. (மருந்து உபயோகிக்கையில் நடவாம லிருத்தல் நலம்.) சி. தே. சுந்தரராஜய்யங்கார், தேவகோட்டை.

## தேனில் தேகாரோக்கியம்.

தேனானது, இனிப்பான சத்து சுயமாகவே அமைந்ததாய், தேன்கூட்டிலிருந்து எடுத்தபடியே பருகுவதற்கு யோக்கியமானதாய் இருக்கிறது. வேறு எந்தவிதமான அசுத்தசத்தின் கலப்பும் அதில் இல்லையாதலால், அதை யாதொரு சுத்தியும் செய்யவேண்டிய அவசியமேயில்லை. புதிதாகப் பழுத்த பழங்களைச் சாப்பிடுவதால் அவை எப்படி ஜீரணசக்திக்கு நன்மையை உண்டாக்குகின்றனவோ அப்படியே தேனை உட்கொள்வதால், அது, அத்தகைய நன்மையைத் தருகிறது. அது தன்னிடமிருக்கும் ஆகார சத்தைத் தேகத்தினுட் செலுத்தி, சரீரத்தோடு பொருந்தச் செய்துவிடுகிறது.



தேனில் சரீரத்திற்கு அவசியமான இரும்புச்சத்து, எலுமிச்சைாசச் சத்து ஆகியவைகள் கொஞ்சமாய் அடங்கியிருக்கின்றன. ஆதலால் இது ஜீரணசக்தியை உண்டாக்கும் விஷயத்தில் கரும்புச் சர்க்கரையைக்காட்டிலும் மேலானதா யிருக்கிறது. இன்னும் எறும்பின் சத்து மிகக் கொஞ்சமாய் இதில் இருக்கிறது. அந்த எறும்பின்சத்து விஷக்காற்றின் சம்பந்தத்தால் ஏற்படக்கூடிய எவ்விதக் கெடுதியும் தேனில் சேராதபடி செய்கிறது.

தேன் பசியை அதிகரிக்கச் செய்கிறது. பந்தனமில்லாமல் மலம் சரிவர வெளிப்படச் செய்கிறது. சாதாரணமான கரும்புச்சர்க்கரையைக்காட்டிலும் இது சுத்தமானதா யிருக்கிறது. ஆதலால் இது, சிறுவர்களின் ஆகாரத்திற்கு மிக உபயோகமாகும். எனினும் ஏன் சிறுவர்களின் ஆகாரத்தில் இது முக்கியமான தொன்றாகச் சேர்க்கப்படவில்லையோ தெரியவில்லை. மற்ற யாவற்றைக்காட்டிலும், தேனோடு சம்பந்தப்பட்ட ரொட்டி வாய்க்கு ஆரோக்கியமாயிருக்கும். சர்க்கரைக்குப் பதிலாகத் தேனைக்கொண்டு செய்யும் பலகாரங்கள் நீடித்தகாலம் கெட்டுப்போகாமல் வாய்க்குமிருதுவாயும் புதியன வாய்ச் செய்யப்பட்டவைபோலவு மிருக்கும்.

இங்ஙனம்:
N. A.

# பெண்மக்கள் பகுதி.

## மாதரும் குடும்பமும்.

(279-ம் பக்கத் தொடர்ச்சி).

கணவனும் மனைவியும் மனவொற்றுமையுடன் கலந்து வாழும் குடும்பங்களைக் காண்பது வெகு அருமை. பெரும்பான்மையான குடும்பங்களில் எலியும் பூனையும்போலத் தம்பதிகளுள் எப்பொழுதும் சண்டையும் சச்சரவுமே மிகுதியாய்க் காணப்படும். "ஐயோ அறியாமையால் ஏதோ சுகமிருக்கின்றதென் றெண்ணியல்லவோ நாம் கலியாணம் செய்துகொண்டோம். இக்குடும்பச் சனியனைவிட்டு எப்பொழுது தொலைவோமோ" என்று பலர் வருந்துகின்றனர். இவர்களுடைய வாழ்க்கை சாகுமளவும் சஞ்சலமே. 'தாலி கட்டையிலே தொடுத்து நடுக்கட்டையிலே கிடத்துமட்டும் கவலைதான்'.

ஆனால், இதற்குக் காரணமென்ன? காரணம், மனவொற்றுமை யில்லாமையே. கணவன் ஒன்றைச் சொன்னால் மனைவி அதற்கு நேர் விரோதமாகப் பேசுகிறாள். அது அவனுக்குப் பிடிக்கவில்லை. அவள் அபிப்பிராயம் வேறு விதமா யிருக்கிறது. அது அவனுக்குப் பிடிப்பதில்லை. கணவனோ வாசிப்புடையவனாயும் உலக அனுபவமுள்ளவனாயு மிருக்கலாம். மனைவி அதற்கு மாறாகக் கல்வியில்லாதவளாயும் உலகானுபவமில்லாதவளாயு மிருக்கலாம். நம்

மாதர் கல்வியைப்பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. உலகானுபவமோ கதைவிட அதிகம். இந்த நிலைமையில் அவள் கருத்துக்களும், எண்ணங்களும், அபிப்பிராயங்களும் மாறுபாடுடையனவாயிருப்பது சாதாரணந்தானே; இல்லை, மனைவியும் வாசித்தவளென்றே வைத்துக்கொள்வோம். என்ன வாசிப்பு? நான்காவது ஐந்தாவது வாசிப்புவரை வாசித்திருப்பாள். அதற்கு மேல் வாசித்திருந்தால் தப்புந் தவறுமாய்க் கொஞ்சம் பேசவும் எழுதவும் தகுந்தபடி இங்கிலீஷ் பாஷையை மூன்றாவது பாரம் நான்காவது பாரம் வரையில் படித்துக் கற்றுக்கொண்டிருப்பாள். அதற்கும் மிஞ்சினால் ஆறாவது பாரம் என்னும் பத்தாம் வகுப்பு வரையில் வாசித்திருக்கலாம். அதற்குமேல் போவது அருமையினு மருமை. இவர்களோ, முன் சொன்னபடி கால் படிப்பு, அரைக்கால் படிப்பு படித்துவிட்டவுடனே ஆங்காங்கு ஆங்கில மாதர் போல் நடிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். தங்களுக்கு எல்லாம் தெரிந்துவிட்டன என்றும் தங்களுக்குத் தெரியாதது ஒன்றும் இல்லையென்றும் நினைத்துவிடுகிறார்கள். ஆங்கில மாதர்களைப்போலவே உடுக்கவும் உண்ணவும் நாற்காலிகளி லமர்ந்து புருஷனையே வேலைவாங்கவுமா யிருந்தால் நன்றாயிருக்குமெனக் கருதுகின்றனர். தங்கள் எண்ணம் கைகூடுமானால் சந்தோஷமே. இல்லாவிட்டால் கணவன்மேல் வெறுப்புத்தான். கணவன் வார்த்தைக்கெல்லாம் குறுக்குப்பேசுவதே இவர்கள் வேலையாய்விடுகிறது. இத்தகைய தம்பதிகளின் வாழ்க்கை எவ்வாறிருக்கும்? அம் மனைவிகளின் பேச்செல்லாம் அதிகார தோரணையாயும் சிடு சிடுப்பாயும் வெடு வெடுப்பாயுமே இருக்கும். அவர்களுடைய நடக்கை கணவருக்குப் பிடிக்காம லிருக்கலாம். இவ்வித நிலைமையிலும் சதிபதிகளுக்கு மனவொற்றுமை யுண்டாவதில்லை. கணவன் காக்கை கறுப்பு என்றால் அவள் வெள்ளையே யெனச் சாதிப்பாள். இது வேண்டாமென்றால் அவள் அவசியம் செய்தே தீரவேண்டும் எனப் பிடிவாதம் செய்வாள். இதுதான் கலகத்திற்கும் சண்டை சச்சரவுகளுக்கும் காரணம்.

இனி அதை நீக்கும் மார்க்கம் யாதெனில், கணவன் வார்த்தைக்கு மனைவி இணங்கி எதிர்த்துப் பேசாதிருத்தலேயாம். ஏன்? மனைவியின் பேச்சின்படி கணவன் நடக்கலாகாதோ? எனின், கூடாதெனச் சொல்வோர் யாருமில்லை. ஆனால் புருஷன் மனைவி இவ்விருவரில் புருஷன் அரசனது ஸ்தானத்திலும் மனைவி மந்திரியின் ஸ்தானத்திலும் இருப்பவராவர். அரசனுக்கு மந்திரி காரிய நிர்வாகத்தின்பொருட்டுச் சமயோசிதமாக ஆலோசனைகளைக் கூறவேண்டியவனேயல்லாமல், கட்டாயம் நான் சொன்னபடிதான் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தக்கூடியவனல்லன். அதுபோல மனைவியும் புருஷனிடம் தன் அபிப்பிராயத்தை நயமாகக் கூறலாம். அவனை நிர்ப்பந்திக்கலாகாது. அந்த யோசனையும் யுக்தமானதாயிருந்தால் கணவன் அதை ஏற்றுக் கொள்ளலே நியாயம். இதுபற்றியே ஆன்றோரும்,

"அன்னை தயையும் அடியாள் பணியுமலர்ப்
பொன்னி னழகும் புவிப்பொறையும்— ......
விறன் மந்திரி மதியும் ........
பேசி லிவையுடையாள் பெண்"

என்றனர்.

(தொடரும்.) பூ. ஸ்ரீநிவாசன், தமிழ்ப்பண்டிதர், சித்தூர்.

---

## மஞ்சளின் குணம்.

"நமது தேசத்துப் பெண்மக்களில் மாங்கல்லியம் தரித்த பெண்கள் தங்கள் சரீரத்தில் மஞ்சள் பூசுவது லட்சுமீகரமென்று அதைப் பூசிவருவது வழக்கம். ஆனால் தற்காலம் மஞ்சள் பூசுவதைவிட்டு மேல்நாட்டு வெள்ளைப் பவுடர்களைப் பூசிப் பெண்மக்கள் தங்கள் முகத்தை வெளுக்கச்செய்து பாழ்படுத்துவதுடன் மேல்நாட்டு நாகரீகத்தை நம்நாட்டில் நுழைத்துவிட்டார்கள்" என்று சில நாள்களுக்குமுன் ஒரு வியாசம், "சுவராச்சியா" தினசரியில் வெளியிடப்பட்டிருந்தது. அவ்வியாசம் கண்டதுமுதல் அதைப்பற்றி வியாசமொன்றெழுத எனக்கு விருப்பமுண்டாயிற்று. எனினும் எனது சரீரம் நலியா யிருந்தமையால் இவ்வியாசம் எழுத இத்தனைநாள் தடைப்பட்டது. மேற்படி தினசரியில் கூறியது வாஸ்தவமேயானாலும் நமது முன்னோர்கள மஞ்சள் பூசுவதால் லட்சுமீகாம் உண்டாகும் என்னும் அபிப்பிராயம் ஒன்றையேகொண்டு பெண்கள் மஞ்சள் பூசவேண்டும் என்று சொல்லவில்லை என்பது என் துணிபு. சற்று யூகித்து விசாரிப்போமானால் மஞ்சளின் விசேஷ நன்மைகளை நன்றாயுணர்ந்தே நமது முன்னோர்கள் மஞ்சள் பூசும் விதியை விதித்தனர் என்பது ஏற்படும். எப்படியெனின் மஞ்சள் பூசுவதால் சில கெடுதிகளிருப்பினும் பல நன்மைகளிருப்பதாய்த் தெரிகின்றது. கெடுதியாவது:—பெண்கள் மஞ்சள் பூசுவதால் சரீரத்தில் உஷ்ணம் அதிகரித்தல், சரீரத்திலுள்ள தோல்களைச் சிலகாலத்தில் சுருங்கச்செய்தல் ஆகிய துர்க்குணங்கள் உண்டு. ஆனால் நல்ல குணங்களோ அபாரமானவை. நமது சரீரத்தில் விஷக்கிருமிகள் எங்கும் நிறைந்திருக்கின்றன. ஸ்திரீ புருஷர் ஆலிங்கன காலத்தில் வெளிப்படும் வியர்வையால் உண்டாகும் விஷக்கிருமிகள் ஒருவரையும் தொடாது நாசமடையச்செய்யும் குணம் மஞ்சளின்பாலுளது; (வியர்வையில் உண்டாகும் கிருமிகள் மஞ்சள் வாசனை பட்டமாத்திரத்தில் மரணமடையும்). வேண்டுமானால் இதை மைக்ராஸ்கோப் என்னும் இயந்திரத்தைக் கொண்டு பரீட்சித்துப் பார்த்துக்கொள்ளலாம். ஆனால் புருஷர் ஏன் மஞ்சளணியக்கூடாது என்று கேட்கலாம். முன்னமேயே மஞ்சளின் குணம் உஷ்ணம் என்று சொன்னோம். புருஷர்கள் வெய்யிலில் திரிந்து வேலைசெய்பவர்களாதலால் அவர்களுக்கு உஷ்ணம் மேற்கொண்டு வியாதி சம்பவிக்கும் ஆகையால் பெரும்பாலும் நிழலிலேயே வாசம் செய்யக்கூடிய பெண்டுகளே மஞ்சள் பூசுவது உசிதம். தவிரவும் ஆலிங்கனகாலத்தில் இருவர் சரீரமும் ஒன்றுபடுவதால் பெண்கள் சரீரமுழுமையும் மஞ்சள் பூசப்பட்டிருப்பின் எவ்விதத்தேனும் வியர்வையால் உண்டாகும் விஷக்கிருமிகள் உயிர்பெற்றிருக்க இடமிராது. அல்லாமலும் அவற்றாலுண்டாகும் வியாதிகளையும் மஞ்சள் தடுத்துவிடும். அத்தகைய மஞ்சளைப் புருஷனற்ற விதவைகள் பூசிக்கொள்வது யாதொரு நன்மையும் செய்யாது; கெடுதலே தருமாதலின் விதவைகள் மஞ்சள் பூசலாகாது என்றார்கள் பெரியார். மஞ்சளணிந்த பெண்களுடன் கூடிவாழும் புருஷர்களுக்கு விஷக்கிருமிகளாலுண்டாகும் வியாதி வாராது என்பது ஒருதலை. இன்னும் இது விஷயமாய் அதிகம் எழுத நமது போதினி இடந்தாராதாகையால் முக்கியமான சிலவற்றைக் கூறி இவ்வியாசத்தை நிறுத்திக் கொள்வோமாக.

நாம் சாப்பிடும் ஆகாரமாகிய காய்கறி முதலான வஸ்துக்களில் சிற்சில விஷக்கிருமிகள் நம் கண்ணிற்குப் புலப்படாமலே உயிர்பெற்றிருக்கின்றன. அவைகளை நாசம் செய்யவே ஒவ்வொரு பதார்த்தங்களிலும், மஞ்சள் போடுவது நம்மவர்கள் வழக்கம். சிலர் வர்ணத்திற்காகப் போடுவது, உருசிக்காகப் போடுவது என நினைக்கின்றார்கள். மஞ்சளினால் ஒரு ருசியும் கிடையாது;

வர்ணமும் கிடையாது; ஒரு லாபமும் கிடையாது. இன்னும் பூமிகளில் உண்டாகும் சில கிருமிகளை நாசம்செய்யவே அடிக்கடி வீடுகளில் மஞ்சள்சலம் தெளிப்பதும், வாயிற்படிகளில் ததும்ப மஞ்சள் பூசுவதும் வழக்கம். நான் முன்னொரு வியாசத்தில் கூறியதுபோல் மஞ்சள்சலம் சாப்பிட்டால் அதி 'வாந்திபேதி' யென்னும் கொடிய நோயால் உண்டாகும் கிருமிகளைச் சுலபமாய்க் கொல்வதும் தவிர மேற்சொல்லிய வியாதி வந்தவர்களுக்கு ஒரு பெரிய சஞ்சீவியைப்போலிருந்து வியாதியைச் சொஸ்தப்படுத்துகின்றது. இன்னும் ஒரு விஷயம் மஞ்சளால் ஏற்படும் என்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டியவர்களாய் இருக்கின்றோம். அஃது யாதெனில் நமது பாலிய மாங்கல்லிய பெண்கள் நெற்றியில் அணியவேண்டுவது மட்டிக் குங்குமம். மஞ்சளையும் படிக்காரத்தையும் சமமாகச் சேர்த்து, தூள்செய்து, எலுமிச்சம்பழ ரசத்தை விட்டுப் பிசைந்து பூமியில் சிலநாள் புதைத்துவைத்தால் அவை மட்டிக்குங்குமமாய்விடும். இதையே மாதர் அணியும்படியும் இதனால் வியபசார முதலான தோஷங்கள் உண்டாகாவண்ணம் தடுத்துக்கொள்ளச் சாத்தியமாமென்றும் முன்னோர்கள் கூறியுள்ளார்கள்; ஆனால் தற்காலத்திலோ மட்டிக்குங்குமம் எங்கும் கிடைக்கமாட்டாது; அதைச்செய்யும் விதத்தையும் அத்தொழிலாளர் மறந்துவிட்டார்களோ என்னவோ என நினைக்கவேண்டியிருக்கின்றது. தற்காலம் கடைகளில் விற்கும் குங்குமமானது எத்தகையதெனில் மரிக்கன்மாவு என்னும் சோளமாவில் (மஜீண்டா கலர் பவுடர்) சேர்த்துச்செய்யப்படுகின்றது. இந்தக் குங்குமத்தையே பெரிய வியாபாரிகள் மூட்டை மூட்டைகளாகச் சேர்த்துப் பெண்களினிஷ்டப்படி வெவ்வேறு நிறங்களில் விற்கிறார்கள். தற்காலம் குங்குமமிடும் பெண்டுகளோ அதிகமாயில்லை. அப்படி இடும் பெண்டுகளுக்குச் சரியான குங்குமம் கிடைப்பதுமில்லை. இக்குறைகள் ஏற்படுவதற்குக் காரணம் நம்முடைய ஆசாரத்தின் இரகசியப்பொருள்கள் நமக்குத் தெரியாமையேயென நினைக்கின்றேன். நெற்றியில் சரியான குங்குமம் இடுவதால் உண்டாகும் நன்மை அளவற்றது. தற்காலத்தில் சொல்லும் 'இப்னாடிசம், மெஸ்மரிசம்' என்பவைகளைவிட நம் தேசத்திலுள்ள பக்திமான்களுடையவும் யோகிகளுடையவும் மனோசக்தி அதிகரித்திருந்தது; இயற்கையில் அவர்கள் ஞானிகளாயிருந்தாலும் ஓர் அழகிய யௌவன மாதைப் பார்க்கும்போது அவளிடம் காமுறுவர். சிலர் விசாரத்தாலும் பயத்தாலும் மனதைச் சமாதானப்படுத்திவிடுவர். சிலர் பார்த்த அம்மாதைப் புணர இச்சிப்பர். அதுசமயம் அவர்களின் மனோசக்தியின் பலத்தால் அவளை உற்றுநோக்கி வாவென்றழைத்தால் அந்தப் பெண் புத்தி ஸ்வாதீனமற்று அவர்கள் பின்னே சொல்லுவாள். அதை இப்போதும் இப்னாடிசம் செய்பவர்பால் தெரிந்துகொள்ளலாம். மேல்நாட்டாரும் இதை ஒப்புக்கொள்ளுகின்றார்கள். மேல்நாட்டில் இதன்படி தற்காலம் இச்செயல் அநேகமாய் நடந்து வருகின்றதாயும் தெரிகின்றது. ஆனால் இதுவரை மேல்நாட்டார் அத்தகைய பலாத்கார வியபசாரத்தைத் தடுக்கும் பரிகாரத்தைத் தெரிந்துகொண்டார்களில்லை. நம் நாட்டிலோ வெகு காலங்களுக்கு முன்னமேயே இதற்குப் பரிகாரத்தைத் தெரிந்து சகஜமாய் யாவரும் கையாண்டு வந்தார்கள். அஃதாவது மஞ்சளினாலும் படிக்காரத்தினாலும் செய்யப்பட்ட குங்குமத்தைப் பெண்கள் அணிவதே. அவ்வாறு அணிந்துகொண்டிருக்கும் ஒருமாதை எத்தகைய மாந்திரீகவாதியாலும், யோகிகளாலும், மனோசக்தி வாய்ந்தவர்களாலும், இப்னாடிசம் மெஸ்மரிஸம் இவைகளில் அதிகமாகத்தேர்ந்த அமெரிக்காவிலுள்ள பாதர் (Father) ஆப் இப்னாடிசம் என்பவராலும் தம் வசம் திருப்பல் முடியாது. வேண்டுமானால் இப்



போதும் எப்புருஷராவது மேற்சொன்ன குங்குமத்தை யணிந்துகொண்டு மெஸ்மரிஸம் செய்பவர்களிடம் போய்த் தம்மை மெஸ்மரிஸம் செய்யும்படி சொன்னால், அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. எல்க்ட்ரிசிடிபோல எதிரியின் மனோவல்லமையை மேற்சொன்ன குங்குமம் இழுத்துக்கொள்ளும் சக்தியை அதற்கு மஞ்சள் கொடுக்கிறது. இத்தகைய அரும்பெரும் பயன்களைக் கருதியே நம்முடைய ஆசாரங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஒவ்வொன்றையும் கடவுள் பக்திக்குக் காரணமாகும்படி லக்ஷ்மீகரமென்றும் சௌக்கிய ஏதுவென்றும் அறிஞர் கூறியிருக்கிறார்கள். எப்படியாவது ஜீவர்களுக்கு பக்தியுண்டாய் அவர்கள் மோட்சமடையவேண்டும் என்னும் கருணையை முன்னிட்டே நமது ஞானிகளாகிய முன்னோர்கள் ஒவ்வொரு விஷயமும் பத்திக்குக் காரணமாகும்படியே இவ்வாறு அவற்றை ஏற்படுத்தி யுள்ளார்கள். பின்னால் நமது ஆசாரம் என்பது என்ன? அவற்றின் குணங்கள்யாவை? என்பவைகளைப்பற்றிச் சிறிது எழுத உத்தேசம். ஆனால் வைத்தியப் பகுதிக்கும் இவைகளுக்கும் ஆனந்தபோதினி இடந் தந்தாலொழிய சாத்தியமில்லை.

டாக்டர்: மே. மர்சிலாமணி முதலியார்.

---

## அறிஞரின் அமுதமொழிகள்.

(267-ம் பக்கத் தொடர்ச்சி.)

28. One develops the propensities just according to the company one moves in; and again, one seeks the company suiting his propensities *Sri Ramakrishna.*

ஒருவன், தான் பழகும் சகவாசத்திற்குத்தக்க குண விசேஷங்களை யடைகிறான்; இன்னும் ஒருவன் தன்குண விசேஷங்களுக்குத் தக்க சகவாசத்தையே தேடுகிறான். (ஸ்ரீ-இராமகிருஷ்ணர்)

29. The locomotive engine not only moves on and reaches the destination but also takes with it a long train of waggons behind, so are our saviours; they carry multitudes of men heavily laden with sin to the presence of the Almighty *Sri Ramakrishna.*

இருப்புப்பாதையில் நீராவியந்திரவண்டி, தான்மட்டும் செல்வதன்றி அநேக பளுவான சாமான்களையும் தன்பின்னால் இழுத்துச் செல்வதுபோல, அவதார புருடராகிய லோக ரட்சகரும் அதிக பாவம் செய்த மனிதர் கூட்டங்களை ஈசுவரனது சந்நிதானத்திற்கு அழைத்துச் செல்லுகிறார்கள் (அதாவது கடவுளை யடையும் வழியை அவர்களுக்குக் காட்டுகிறார்கள்).

(ஸ்ரீ-இராமகிருஷ்ணர்)

30. Better to have an open enemy than hidden friends *Napoleon.*

உள்ளொன்றும் [illegible] நேசிதரைக்காட்டிலும் வெளிப்படை[illegible] விரோதி [illegible]யமானவன்.

([illegible]ப்போலியன்)

187477.

31. **Misery acquaints a man with strange bed-fellows** *Shakespeare.*
கஷ்டகாலம் ஒருவனை முகமறியாதவரிடத்திலும் சிநேகம் செய்யத் தூண்டுகிறது. (ஷேக்ஸ்பியர்)

32. **The more virtuous a man is the more virtues does he see in others** *Scott.*
உத்தமகுணங்களை யுடையவன் எல்லோரையும் உத்தமராகவே கருதுகிறான். (ஸ்காட்)

33. **Do not yield to misfortunes but meet them with fortitude** *Virgil.*
கஷ்டங்களுக்கு இடங்கொடுக்காமல் அவற்றைத் துணிகரத்தோடு எதிர்த்துத் தள்ளு. (வர்ஜில்)

34. **There is no religion higher than truth** *Shakespeare.*
சத்தியத்தைக் காட்டிலும் மேலானகொள்கை வேறொன்றுமில்லை. (ஷேக்ஸ்பியர்)

35. **Life has no pleasure nobler than that of friendship** *Dr. Johnson.*
மனிதவாழ்க்கைக்குச் சிநேகத்தன்மையைக்காட்டிலும் உயர்வான சந்தோஷம் வேறு கிடையாது. (டாக்டர் ஜான்ஸன்)

36. **Oppose not rage while rage is in its force, but give it way awhile and let it waste** *Shakespeare.*
(ஒருவரிடத்தில்) கோபம் மிகவும் அதிகரித்திருக்கும்போது (நீ) அக்கோபத்தை எதிர்க்காதே; கொஞ்சநேரம் அதுபோகிற வழியே விட்டுவிடு; அது தானே தணியட்டும். (ஷேக்ஸ்பியர்)

37. **Affection is the broadest basis of a good life** *George Eliot.*
நல்ல வாழ்க்கைக்கு அன்பே பெரிய ஆதாரம். (ஜார்ஜ் எலியட்)

38. **A treacherous friend is the most dangerous enemy** *Fielding.*
துரோக சிந்தனையுள்ள சிநேகிதன் மிகவும் பயங்கரமான விரோதி. (பீல்டிங்)

39. **Even tender creepers when united is strong** *Bepin Chandra Pal.*
படரக்கூடிய மிருதுவான கொடிகளும் ஒன்றோடொன்று சேர்ந்தால் வலிமை யடைகின்றன. (அதுபோல வலிமையற்ற மனிதரும் ஒன்றாகச் சேர்ந்தால் வலிமையடைவார்கள்.) (பெபின் சந்திர பால்)

40. **Stand for the right. No good thing is a failure, and no evil thing is a success** *Byron.*
நியாயத்தில் நிலைபெறுவாயாக (அதாவது நியாயத்தை உறுதியாகக் கடைப்பிடி). நன்மையுள்ள எவற்றிற்கும் அபஜெயமே கிடையாது. தீமையுள்ள எவற்றிற்கும் வெற்றியே கிடையாது. (பைரன்)



41. **What female heart can gold despise ?**
**What cat's averse to fish ?** (*Gray*)
மீனை விரும்பாத பூனை எது? பொன்னை விரும்பாத பெண்பிள்ளை எவள்? (மீனை விரும்பாத பூனையும் இல்லை; பொன்னை விரும்பாத பெண்பிள்ளையும் இல்லை). (கிரே)

42. **In idleness there is perpetual despair** *Carlyle.*
சோம்பேறித்தனத்தில் எப்பொழுதும் ஏக்கம் குடிகொண்டிருக்கிறது. (கார்லைல்)

43. **Two heads are better than one** *Heywood.*
ஒருவர் ஆலோசனையைக்காட்டிலும் இருவரின் யோசனை நல்லது. (ஹேவுட்)

44. **Evil news rides post, while good news baits** *Milton.*
கெட்ட விஷயங்கள் காற்றைப்போல் அதிசீக்கிரம் பரவும்; நல்ல விஷயங்கள் தாமதிக்கும். (மில்டன்)

45. **To have a right estimate of a man's character we must see him in misfortune** *Napoleon.*
ஒருவனது நடவடிக்கைகளின் சரியான இயற்கையைத் தெரிந்துகொள்ளவேண்டுமானால், அவனது வறுமையில் தெரிந்துகொள்ளலாம் (நேப்போலியன்)

(தொடரும்.) A. P. இராமன் B. A.

# கைத்தொழிற்பகுதி.

## கைத்தொழில் அபிவிருத்தி.

### சர். வி. பி. மாதவராவ் அவர்களின் அபிப்பிராயம்.

சொற்ப மூலதனத்தை யுடையவர்கள், அதிகப் பணச்செலவில்லாத சிறு கைத்தொழில்களை ஆரம்பித்து, ஆங்காங்கேயுள்ள கைத்தொழில் நிபுணர்களைக்கொண்டு பல சங்கங்களை ஸ்தாபித்து, தொழிலபிவிருத்திக்கான முறைகளை மேற்படி சங்கத்தாரிடம் கேட்டுத்தெளிந்து, நீராவியின் சக்தியால் செல்லக்கூடிய மிகப் பெரிய இயந்திரங்களின் உதவி அவசியமில்லாத குடிசைக் கைத்தொழில்கள் ஒவ்வொரு சிறு இல்லத்திலும் நடைபெறச் செய்ய வேண்டும்.

2. சோப், சாயம், மெழுகுவர்த்தி முதலான கைத்தொழில்களி லூக்கமுடையவர்கள் அவை செய்வதற்கனுகூலமான இயந்திரங்களின் விலையையும், தொழிலுக்கான ரசாயன (Chemical)ப் பண்டங்களை விருத்திசெய்யக்கூடிய முறைகளையும், அவற்றிற்கான செலவின் மதிப்பையும் ஆராய்ந்தறிந்து, வெளியிட்டு இத்தகைய கைத்தொழிற்சாலைகள் அநேகம் நம்நாட்டில் தோன்றுமாறு செய்தலவசியம். ஒரு தொழில்முறையைத் தெரிந்தவர் சுய

நலம் பாராட்டாது தேசமுன்னேற்றத்தைக்கருதி அக் கைத்தொழிலிலுள்ள நுட்பங்களை வெளியிட்டு, அத்துறையிலுள்ள ஆராய்ச்சி வல்லுநர்களின் அபிப்பிராயங்களை ஏற்று, மேன்மேலும் உயர்வான கைத்தொழிற் சாமான்களைப் பாரதநாட்டிற் பரப்புதல் வேண்டும்.

3. அப்பிரகம், இரும்பு, பித்தளை முதலான உலோகங்களைச் சுரங்கங்களினின்றெடுத்து, அவற்றுடன் கலந்திருக்கும் மண்முதலானவற்றை நீக்கிச் சுத்தப்படுத்தி, பின்பு அவற்றைப் பல உருக்கொண்ட சாமான்களாகச் செய்யத்தக்க உலோகத்தொழில் நிபுணர்கள், அவற்றைப் பொறுத்த தொழில்முறையான விஷயங்களை, தலை ஆலோசனை சபைக்கோ, அல்லது கைத்தொழிற் சங்கங்களுக்கோ தெரிவித்து, அச்சபைகளின் அபிப்பிராயங்களை ஆராய்ந்து, மேலும் மேலும் புதியமுறைகளை யுபயோகித்து அத்தகைய கைத்தொழிற்சாலைகளைப் பெருக்கவேண்டும். ஆராய்ச்சியாலேயே கைத்தொழில்களும், அவற்றையுடைய நாடும் சிறப்படைகின்றன. ஆதலால் ஆராய்ச்சியே நாட்டின் பெருமையை வளர்க்குந் தாய்.

4. சணல், நார், நூல் ஆனவற்றிற் காதாரமாகவுடைய பயிர்களை விவசாயம் செய்வதும் ஓர் கைத்தொழிலேயாகும். இவ்விதக் கைத்தொழிலை நடத்துவோர், மேலே குறிப்பிட்ட பயிர்கள் விளைவதற்கான மண், நீர், முதலான விவசாயப் பொறுப்புள்ள விஷயங்களை, உள்நாட்டில் அவ்விதப்பண்டங்கள் எந்தெந்த இடங்களில் இயற்கையாக அபிவிருத்தியாகி வருகின்றனவோ, அப்பிரதேசத்தாரைக் கலந்து ஆலோசித்துணர்ந்து அவ்வித விவசாயத்தை நாட்டில் பல பாகங்களிலும் பெருக்கவேண்டும். ரப்பர், பெருங்காயம், சூடம் முதலியவற்றைச்செய்யும் கைத்தொழில் நாடெங்கும் பெருகவேண்டுவது மிக்க அவசியம்.

5. இந்தியநாட்டுக் கைத்தொழி லபிவிருத்திக்கோர் பெருந்தடையாயிருப்பது 'தொழிற் கல்வி' யைப் போதிக்கும் கலாசாலைகளின்மையேயாம். 'பொதுக்கல்வி' அவசியமாயினும் அதிற்றேர்ந்தவர் பின்பு, உத்தியோகத்தைத் தேடும் நிலையையே அப் பொதுக் கல்வி அடைவிப்பதாலும், பொதுக்கல்வி கற்றோர் அனைவருக்கும்தகுந்த உத்தியோகங்களைத் தரவல்ல காரியாலயங்களில்லாமையாலும், நம் பாரதமக்கள் வறுமையின்றி வாழ ஒவ்வொரு நகரத்திலும் தொழிற் கல்வி போதகாலயங்கள் பல அரசாங்கத்தாரின் உதவியால் ஸ்தாபிக்கப்படவேண்டும். தற்காலப் பொதுக் கல்வியே நம் இந்திய நாட்டின் கைத்தொழி லபிவிருத்திக்குப் பெருந்தடையாயிருக்கின்றதென்பதும் உண்மை.

6. ஒவ்வொரு தேசத்து விளைபொருள்கள், அவைகளிற் கைத்தொழிலபிவிருத்திக்கான விவசாயப் பண்டங்கள், அவற்றின் ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் சௌகர்யங்கள், அவற்றின் நிலவரம் முதலியவைகளைக்கொண்டு விளங்கும் தொழிற்சிறப்புக்கான பல பத்திரிகைகள் நம் பாரதநாட்டில் உலாவவேண்டும். உலகம் ஒவ்வொரு துறையிலும் அபிவிருத்தியாவதற்குப் பத்திரிகைகளே காரணமாய் நிற்கின்றன.

7. மேற்கூறிய பல சாதனங்களைக்கொண்டு சிறிது சிறிதாக சுவதேச கைத்தொழிலாளிகள் உற்பத்தி செய்துவரும் சாமான்களை, பெரும் வியாபாரிகளும் பொது ஜனங்களும் ஆதரிக்கவேண்டுவது இவை யாவற்றினும் முக்கியமான சாதனமாம். ஆரம்பமான பல சிறு கைத்தொழில்களும் ஆதரிப்பாரின்றி அழிந்துபோகின்றன. சிறிது சிறிதாக நாம் சுதேசியத்தை ஆரம்பித்து, நம் நாடு கைத்தொழிலால் அபிவிருத்தியடைவதற்கான முயற்சிகளைச்



செய்துவந்தாற்றான் நம் நாடும் பிறநாடுகளைப்போலச் சிறப்படைய முடியும். இங்கிலாந்து, ஜப்பான், அமெரிக்கா முதலான நாடுகள் கைத்தொழிலபிவிருத்தியில் தமக்குள்ள ஊக்கத்தாலேயே திரளான செல்வத்தைக் குவித்து, புஜபல பராக்கிரமத்திலும் தலை சிறந்து நிற்கின்றன. நம் நாட்டின் தாழ்ந்த நிலைக்கு ஊக்கக் குறைவும், ஆராய்ச்சியின்மையும், கைத்தொழிலாதரவின்மையுமே வலுத்த காரணங்களாய் நிற்கின்றன.

சகோதர சகோதரிகளே! பரோடா, மைசூர், திருவனந்தபுரம் முதலான சமஸ்தானங்களில் திவான் பதவியைப் பல ஆண்டுகள் வகித்துவந்த இப்பெரியார் தமக்கு அரசியல் விஷயங்களிலும், ஆராய்ச்சியிலும், கைத்தொழிலிலும் உள்ள அனுபவங்களை எடுத்துக் கூறியிருந்தலை நாம் ஈண்டு மொழிபெயர்த்துத் தந்தோம். இவ்விதக் குறைகளே நம்நாட்டின் தாழ்ந்த நிலைக்குக் காரணமென்பது மலையுச்சித் தீபம்போன்று நன்கு விளங்குவன. இவற்றையுணர்ந்து இனியாகிலும் இப்பெரியார் கூறியுள்ள வழிகளில் நம் நாட்டின் கைத்தொழிலைப் பெருக்க நாம் முயற்சிப்போமாக. S. V. அரங்கநாதன், உறந்தை.

## சுவாமி சிரத்தானந்தரின் கொலை.

சுவாமி சிரத்தானந்தரின் கொலையைப் பலருமறிவர்; இதைப்பற்றி, மகாத்மாகாந்தி, 'யங்-இந்தியா' என்னும் பத்திரிகையில் எழுதி யிருப்பதின் சாராம்சமாவது:—

" சுவாமி சிரத்தானந்தர்ஜி சுமார் 6 மாதங்களுக்குமுன் சபர்மதி ஆசிரமத்தில் இருக்கும்போது, 'எனக்கு அடிக்கடி பயமுறுத்துதலான கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன' என்று என்னிடம் சொன்னார். அதன்படியே இக்கொலை அவருக்கு நேர்ந்துவிட்டது; நாட்டின் நலத்திற்கு உழைக்கும் பெரியார்க்கு இத்தகைய சம்பவம் நேர்வது இயற்கையே; ஆதலின் இஃதொரு வியப்பன்று.

சுவாமி, நன்மார்க்கங்களைப் பலர்க்கும் எடுத்துரைத்ததோடு தம் நடக்கையிலும் காட்டியவர்; தம்முடைய கொள்கையில் மிக்க நம்பிக்கையுள்ளவர்; அதன் பொருட்டே உயிர்துறந்தார்; இவரிடத்தே மிக்க வீரம் குடிகொண்டிருந்தது. இவர், சுமார் 1 மாதத்திற்குமுன் பிணி கொண்டார். டாக்டர் ஆன்ஸாரி என்பவர் இவருக்கு வைத்தியம் செய்துவந்தார். நான் சில தினங்களுக்கு முன் இவருடைய தேகசுகத்தைத் தெரிவிக்கும்படி இவர் புத்திரர் 'இந்திரா' என்பவருக்குக் கடிதமெழுதி யனுப்பினேன். அவர், சுவாமிக்குச் சிறிது குணமாயிருப்பதாகவும், சுவாமி என்னுடைய அன்பையும், வாழ்த்துதலையும் விரும்புவதாகவும் எனக்குத் தந்தி மூலம் சமாசாரம் தெரிவித்தார். அதற்கு முந்தியே நான் அவற்றைச் சுவாமிகளுக்குச் செலுத்திவிட்டேன்.

அவர், அவ்வாறு நோயில் படுத்திருக்கும்போது, கொலையாளியாகிய அப்துல்ரஷீத் அவரிடம் இஸ்லாத்தின் விஷயமாகச் சில சம்பாஷணைகள் செய்ய வேண்டுமென்று தெரிவித்து அவர் அனுமதிபெற்று உட்புகுந்து, சுவாமியின் தொண்டராகிய, 'தரம்சிங்' என்பவரிடம் தாகசாந்திக்கு ஜலம் கேட்டு, அவர் அதைக்கொண்டுவர வெளியிற்சென்ற சமயம் சுவாமியின் மார்பில் குண்டுகள் பாயும்படி சுட்டு விட்டான். வீரனாயிருப்பவன் தன் உண்மைக் கொள்கைக்காக உயிர்விடுவது மிக மேலானது; ஆதலின் சுவாமியின் இத்தகைய மரணம் சிறந்ததே. இதன் பொருட்டு நாம் துக்கப்பட வேண்டியதில்லை, இவர் இம்மாதிரி இறந்ததற்கு நான் அழமாட்டேன். இவர்

இப்போது மரித்தாலும் இருப்பவராகவே விளங்குகிறார்; இவருடைய குடும்பத்தாரும் குலத்தினரும் இத்தகைய புகழத்தக்க மரணமடைந்த இவரைக் கொண்டாடக் கடமைப்பட்டிருக்கின்றார்கள்.

இவர் மரணம் புகழத்தக்கதெனினும், இவரைக் கொலை செய்த மூஸ்லீம் சகோதரனுடைய கொடுஞ் செய்கைமட்டும் வெறுக்கத்தக்கதா யிருக்கிறது. நான் மூஸ்லீம்களுக்கு நண்பன்; அவர்கள் என் இரத்தக்கலப்புள்ள சகோதரர்கள்; அவர்கள் செய்த குற்றம் என்குற்றமேயாகும்; அவர்களுடைய துக்கமும், சந்தோஷமும் எனக்கும் உரியனவே. ஒரு மூஸ்லீம் இத்தகைய துர்க்கிருத்தியம் செய்ததை, ஒரு ஹிந்து சகோதரன் செய்தது போலவே நினைத்து நான் வருந்துகிறேன்.

இக்கொலை சமூகவொற்றுமையைச் சிதைக்கக்கூடியதா யிருக்கிறது. ஹிந்து மூஸ்லீம் சகோதரத்துவத்தைக் கெடுக்கக்கூடியதா யிருக்கிறது. ஆயினும், இந்துக்கள் அவ்வொற்றுமை யின்மைக்கு இடந்தரலாகாது; உபநிடதத்தில் கூறியிருக்கிறபடி யுதிஷ்டிரரை நிகர்த்துப் பிறர் குற்றத்தைப் பொறுத்தலை மேற்கொண்டு கீர்த்தியைப் பெறவேண்டும்; ஒருவன் செய்த பிழைக்கு ஒரு சமூகத்தை வெறுக்கலாகாது. கொலை செய்தவனைப் பகைவனாக்காமல் நண்பனாகக்கொண்டு நம் நண்பன் தவறுதலால் இப்படி நடந்துகொண்டானென்று நினைக்கவேண்டும். இஸ்லாம் இருக்கவேண்டிய நிலையை-சாந்தத்தை-அவ்வகுப்பாருள் இத்தகைய சிலர் உணராதிருக்கிறார்கள்; அவர்கள் சாந்தத்தை அடையவேண்டுமானால் இத்தகைய விஷயங்களில் அவர்களால் எடுக்கப்படும் ஆயுதம் உறையிற் போடப்படவேண்டும்; அவர்கள் இவ்வெறிச் செயலை இரகசியமாயேனும் ஆதரிப்பது அபாயத்திற் கிடந்தரும்; இது அவர்களுக்கும் உலகத்திற்கும் பெருங் கேட்டை விளைவிக்கத் தக்கது. எல்லோரும் நன்மையையே நாடவேண்டுமாதலின், மூஸ்லீம் சகோதரர்கள் இவ்விஷயத்தில் ஆங்காங்கே கூட்டங்கூடி இக்கொடுஞ் செயலைப் பலமாகக் கண்டிக்கவேண்டும்.

அப்துல்ரஷீத் குற்றவாளியே யெனினும், அவர் இக்குற்றத்தைச் செய்வதற்குக் காரணமாயிருந்தவை சில பத்திரிகைகளே. அவை பொய்யானவும், விரோதப்பான்மையானவுமாயுள்ள விஷயங்களைப் பரப்பியதனாலேயே, அவர் விஷம் போன்ற அவற்றால் வெறிகொண்டு இக்கொடுமை செய்ய முற்பட்டு விட்டார். ஆதலின் இக்குற்றம் அவரையும் அப்பத்திரிகைக் காரர்களையும் சார்ந்திருக்கிறது. சுவாமிஜியின் இரத்தஞ் சிந்தியதானது நமக்குள் ஏற்படும் குற்றத்தை நீக்கி மனசுத்தியை அளித்து, இந்து மூஸ்லீம் சமூகப்பிளவின்றி இருவகுப்பின் ஐக்கியத்தை உண்டுபண்ணக் கூடியதாயிருக்கிறது.”

இந்த உயர்ந்த அபிப்பிராயத்தைத் தழுவி இந்துமூஸ்லீம் சகோதரர் எல்லோரும் ஏகோபித்துக் குற்றத்தைக் கடிந்து குணத்தைக்கொண்டு ஒற்றுமை பெற்றுயர்வுறுவாராக.

## விநோதப் பகுதி.

உலகத்தில் தற்பெருமையைமட்டும் விரும்பும் சில வெள்ளை மதியினர் இருக்கின்றனர். இவர்கள், பணத்திலோ, குணத்திலோ, வயதிலோ, கல்வியிலோ எவ்விதச் சிறப்புமில்லாதவர்களாயிருந்தாலும், தமக்கே பிறர் வணக்கம்



செய்யவேண்டுமென்றும், தாம் பிறர்க்கு (அவர்கள் எவ்வளவு உயர்வுடையவர்களாயிருந்தாலும்) வணக்கங் காட்டக்கூடாதென்றும் ஒரு மூடத்தனமான முடிவுசெய்துகொண்டிருக்கிறார்கள். அதனால் இவர்கள், பழக்கமுடையவர்களோடு சந்திக்கும்போதெல்லாம் (அவர்கள் நீடித்த பழக்கமுள்ளவர்களாயிருந்தாலும்) அவர்கள் முதலில் கைகூப்பித் தங்களுக்கு நமஸ்காரம் செய்தபிறகே தாங்கள் கையெடுக்கவேண்டுமென்று நினைத்துக்கொண்டு பேசாமல் போகிறார்கள். எதிரே வந்தவர்களும், இவர்கள் நமஸ்கரித்தபின்பே தாங்களும் நமஸ்கரிக்கவேண்டுமென்று பேசாமல் போகிறார்கள். ஆகவே இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடியே செத்த பிரேதங்களைப்போல் முகமலர்ச்சி காட்டாமலும், வாய் திறவாமலும், கையெடாமலும் போகின்றார்கள். இக்குணம் தங்களுக்குப் பெரிய கௌரவத்தைத் தருவதாகவும் நினைக்கிறார்கள்; எனினும் இவர்கள், எல்லோராலும் ஒற்றுமையில்லா மிருகங்களென இகழப்படுவார்கள்.

*** *** *** ***

கேவலமான நிலைமையில் இருக்கின்ற ஒரு நாடகக் கம்பெனிக்குப் பெரிய மதிப்பை உண்டாக்கவேண்டுமானால், ஆங்கிலத்தில் பேசத்தெரிந்த ஒரு பெரிய உத்தியோகஸ்தரையோ, பணக்காரரையோ குறிப்பிட்டு ‘இவர்களுக்கு முன்னிலையில் நாடகம் நடத்தப்படும்; இன்று வசூல் முழுமையும் இவர் கையினால் ஒரு தருமத்திற்கு உதவப்படும்’ என்று விளம்பரப்படுத்திவிட்டால், அன்று பாமரக்கூட்டத்தார்வந்து கொட்டகையை நிரப்பிவிடுவார்கள் என்றும், அந்தப் பெருமையுடைய மேதாவிகள்வந்து, ஸோப்பாவில் உட்கார்ந்தவுடன் அவர்கள் கழுத்தில் ரோஜாப்பூ மாலைபோட்டு வசூலில் கொஞ்சம் பணத்தை அவர்கள் கையில் கொடுப்பதுபோல் பாவனைகாட்டிவிட்டால் அவர்கள் நாடகக்கல்வியின் தன்மையைச் சிறிதும் உணராதவர்களாயிருப்பினும் அதைப்புகழ்ந்து அதிகப்பிரசங்கம் புரிந்துவிட்டுப் போய்விடுவாரென்றும், அதன்மேல் அந்நாடகக் கம்பெனிக்குப் பெரிய மதிப்புண்டாகிவிடுமென்றும் சூன்யகலா நாடக சங்கத்தார் ஒரு யுத்தி கண்டுபிடித்து அதை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்களாம்.

*** *** *** ***

கிண்டி குதிரைப்பந்தயத்தில் தம்முடைய மூளை முழுவதையும் இருபது வருஷகாலமாகச் செலவிட்டுக் கணக்குப்போட்டு இன்ன இன்ன நம்பர்க் குதிரைகள்தாம் பிரைஸ் அடிக்கும் என்று சொல்லும் நிபுணர் ஒருவர், பக்கத்திலிருந்தவர்களிடம், ‘ஒரு நம்பருக்கு ஒரு ரூபா எனக்குக் கொடுத்துவிடுங்கள்; நான் பிரைஸ் அடிக்கும் குதிரையின் நம்பரைச் சொல்லுகிறேன்; நீங்கள் அந்த நம்பருக்குப் பணம் கட்டினால் இலாபம் கிடைக்கும்’ என்று சொல்லிக்கொண்டிருந்தார். ஒருவர், அவரை நோக்கி, ‘உங்களுக்குப் பிரைஸ் வருவதுதான் நிச்சயமாகத் தெரியுமே; நீங்களே பணம் கட்டி அந்த இலாபத்தை அடையலாமே’ என்று சொன்னார். பந்தயக் கணக்கர், ‘எனக்குக் கணக்குப் போடுவதுதான் வேலை; பந்தயங் கட்டுவது வேலையில்லை; நான் ஏன் பந்தயம் கட்டுகிறேன்?’ என்று வெகு முறுக்காகச் சொன்னார். மற்றவர், “அதற்குச் சம்மதியில்லாவிட்டால் என்னோடு பங்குசேர்ந்தாவது பந்தயங் கட்டும்” என்றார். குதிரை நம்பர்க் கணக்கர், “பந்தயத்தில் கூட்டுச்சேர்ந்தால் கணக்கைச் சுத்தமாகப் போடும் என் அபார மூளைகெட்டு இதில் திரும்பிவிடும்” என்றார். மற்றவர், “அப்படியானால், நீர் சொல்லும் நம்பருக்கு நான் ஒரு ரூபாய் தருகிறேன்; அந்தக் குதிரை வராவிட்டால் நீர் அந்த ரூபாயைத் திரும்பக் கொடுத்துவிடவேண்டும்” என்றார். குதிரைப் பந்தயக் கணக்கர் “ஓ! அது

முடியாது; சில சமயங்களில் அந்த நமபர்க் குதிரையும் பிந்திவிடும்; அப்படியானால் நான் ரூபாயைத் திருப்பிக் கொடுத்துவிடும் பக்ஷத்தில் கணக்குப்போட்ட என் உழைப்பு வீணாய்ப் போகுமே!'' என்றார். அங்குக் கூடியிருந்தவர்களெல்லோரும், "இவன், குதிரைப்பந்தயப் பைத்தியம் பிடித்தவர்களை ஏமாற்றும் முழுமோசக்காரன்'' என்று கைகொட்டிச் சிரித்தார்கள். அவர், "குதிரைப்பந்தயத்தின் விஷயம் கருநாடகப் பேர்வழிகளாகிய உங்களுக் கென்னதெரியும்'' என்று முணங்கிக்கொண்டே எழுந்துபோய்விட்டார். இத்தகைய கணக்கர்கள் இப்போது குதிரைப்பந்தயத்தில் பலர் இருக்கின்றனர்.

*** *** *** ***

மோட்டார்கள் அதிகமானதால் குதிரைகளுக்கு ஓய்வு கிடைத்தன; அடிக்கொரு வாஷிங்கம்பெனிகள் ஏற்பட்டும் வண்ணார்கள் எங்களை விட்டபாடில்லையே; இந்தத் தலைவிதிக்கு நாங்கள் யாரிடம் முறையிட்டுக் கொள்வோம் என்று கழுதைகளெல்லாம் சிருஷ்டிகர்த்தாவிடம் மனுச்செய்து கொண்டிருக்கின்றனவாம்.

## நாவல் பகுதி.

### அம்பாலிகை அல்லது அதிசய மரணம்

(286-ம் பக்கத் தொடர்ச்சி.)

அறைக்கு வெளியில் ஆட்கள் காலடிச்சத்தமும் பேசும் குரல்களும் ஆனந்தஸிங் செவிகளில் விழுந்தன. இரவு அதிக இருட்டாயிருந்தது. அந்த ஆட்கள் யாரென்று அவனுக்குத் தெரியவில்லை. கறுப்பண்ணனுடைய துப்பாக்கி சத்தம் கேட்டு யாராவது வழிப்போக்கர் உள்ளே ஓடிவந்தார்களோவென்று நினைத்தான்.

ஆனந்தஸிங் பிறகு அறையின் கதவைத்திறந்து வெளியில் ஒரு அடியெடுத்து வைத்தான். உடனே அங்கு நின்ற ஆயுதபாணியாகிய ஒரு மனிதன் சட்டென்று அவன் கன்னத்தில் துப்பாக்கிக் குழாயின் வாயை வைத்துப் பிடித்துக்கொண்டு, "யார் நீ?" என்றான்.

**ஆனந்தஸிங்:**—"நல்லது, நீயார்?'' என்றான்.

அம்மனிதன் உடனே துப்பாக்கியைப்பிடித்த கையைத் தொங்க விட்டுவிட்டுச் சினேகபாவத்தோடு, "ஆனந்தஸிங்! நாங்கள் வந்தது நல்ல சமயத்தில் தானே?'' என்றான்.

**ஆனந்த:**—"நல்ல சமயந்தான். இன்னும் இரண்டொரு நிமிடங்கள் தாமதித்தீர்களானால் காரியம் மிஞ்சிப்போய்விடும். நான்கு திருட்டுப் பயல்களைக் கீழே வீழ்த்திவிட்டிருக்கிறேன். உள்ளே வந்து அவர்கள் நிலைமையைப்பார்'' என்றான்.

ஆனந்தஸிங் அம்பாலிகையைத் தேடிக்கொண்டிருந்த காலம் முழுதிலும் ஐந்தாறு துப்பறிபவர்களிடம் கலந்து பேசிக்கொண்டும் எந்தச் சமயத்தில் வேண்டுமாயினும் அவர்கள் தனக்கு உதவிவரும்படி ஏற்பாடு செய்துகொண்டுமிருந்தான். தனக்கு உதவி வேண்டி யிருக்குமென்று அறிந்திருந்தானாதலால், அமிர்தம்மாள் கறுப்பண்ணனுக்குத் தந்தி யனுப்பியிருக்கிறாள் என்றறிந்ததே கீழ்க்கண்டபடி தானும் ஒரு தந்தி யனுப்பினான்:—



"அப்பாஜி நாவல்புரிக்கு வா. இரண்டு மூன்று நல்ல ஆட்களைக்கூட அழைத்துவா. நாவல் புரிக்கு இரண்டு மைல் தூரத்திலுள்ள தனி வீட்டில் இருப்பேன்—ஆனந்தஸிங்''

## 17-வது அத்தியாயம்.

அப்பாஜி என்ற துப்பறியும் உத்தியோகஸ்தனுக்குக் கறுப்பண்ணன் விவகாரம் யாவும் நன்றாய்த்தெரியுமாதலால் தன் நண்பர்களில் இருவரை யழைத்துக்கொண்டு உடனே புறப்பட்டான்.

ஆனந்தஸிங் நகரத்திற்குச்சென்று கறுப்பண்ணன் புறப்படுகிறானாவென்று பார்த்துக்கொண் டிருந்தபோது அவர்கள் ஆற்றின் மேற்குக்கரையில் படகேறாமல் கிழக்குக்கரையில் ஏறியபடியால் ஆனந்தஸிங் அவர்களைச் சந்திக்கத் தவறி விட்டான்.

ஆனந்தஸிங் நால்வரையும் அடித்து வீழ்த்தியபோதுதான் அப்பாஜி முதலியவர்கள் வீட்டிற்குள் நுழைந்தார்கள். அவர்களில் ஒருவனுக்கும் பிராணாபத்தான காயம் படவில்லை யென்று அவனுக்குத் தெரியுமாதலால் கறுப்பண்ணன் தவிர மற்ற மூவர்க்கும் கைகளில் விலங்கு பூட்டி விட்டான்.

ஆனந்தஸிங்கும் அவன் ஆட்களும் அறைக்குள் பிரவேசித்தபோது கறுப்பண்ணன் ஸ்மரணைவந்து சமாளித்தெழுந்து நாற்காலியில் உட்கார்ந்துகொண் டிருந்தான்.

ஆனந்தஸிங் அவனை நோக்கி "ஏனையா? உமது ஆட்டம் முடிந்து விட்டதா?'' என்றான்.

**கறுப்:**—எல்லாம் ஆனந்தஸிங் புண்ணியமே.

**ஆனந்த:**—உண்மைதான்.

**கறுப்:**—நீ இன்னும் சத்தியவானென்றும் யோக்கியனென்றும் கூறிக்கொள்கிறாயா?

**ஆனந்த:**—சந்தேகமின்றி நான் சத்தியவானே.

**கறுப்:**—நீ என்பட்சத்தில் வேலைசெய்து வருவதாய் ஒப்புக்கொண்டு ஆதிமுதல் அந்தம்வரையில் எனக்கு விரோதமாக வேலைசெய்து வருகிறாய்.

**ஆனந்த:**—இப்போது நான் கூறுவதைக் கவனமாய்க்கேள். நான் உன்னிடம் வேலைக் கமரவில்லை. உன்னிடம் நான் வேலைக்கு ஒப்பந்தம் செய்துகொண்டால் ஏன் உன்முன் பணத்தை வாங்கிக் கொள்ளவில்லை?

**கறுப்:**—ஏன் வாங்கிக்கொள்ளவில்லை?

**ஆனந்த:**—ஏனெனில் நீ அசாத்திய திருட்டுப்பயலென்று என் புத்தியிற் பட்டது. பிறகு உன் வீட்டிற்குவந்த ஒருமணி நேரத்திற்குள் நான் எண்ணியது உண்மையென்று என் மனதில் பூரணதிருப்தியாய்ப் புலப்பட்டுவிட்டது. ஆகையால் அதுமுதல் நான் உனக்கு எதிரியாய் வேலைசெய்யத் தொடங்கினேன்.

**கறுப்:**—அம்பாலிகை யிப்போது உன் அடைக்கலத்தி லிருக்கிறாளல்லவா?

ஆனந்தஸிங்குக்கு அதை யொப்புக்கொள்ளப் பிரியமில்லை. ஆகையால் அவன், "அம்பாலிகை, அவளைப்பாதுகாக்கச் சுதந்திரமுள்ள ஒரே மனிதனுடைய பாதுகாப்பில் கூடிய சீக்கிரத்தில் வைக்கப்படுவாள்'' என்றான்.

(தொடரும்) **ஆரணி-குப்புசாமி முதலியார்.**

## ஓர் அறிவிப்பு.

மதுரை "பாண்டியநேசன்" என்னும் வாரப் பத்திரிகையின் அக்ஷய ௵ மார்கழி ௴ 17௳ பிரசுரத்தில், நம் ஆனந்தபோதினியில் வெளிவந்த 1. அறிஞரின் அமுதமொழிகள், 2. மாணவர் பகுதி - அறனை மறவேல், 3. பெண் மக்கள் பகுதி, 4. ஆசிரியர்களை அடிக்கடி மாற்றுவதில் உண்டாகும்கெடுதி, 5. இந்தியரின் ஆயுள் விருத்தியும் உபவாசமும் என்னும் ஐந்து வியாசங்களும் ஏககாலத்தில் எடுத்துப் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றினடியில், ஆனந்தபோதினியி லிருந்தெடுக்கப்பட்டன என்னும் விவரமாவது, கட்டுரை யெழுதியவர்களின் பெயர்களாவது குறிக்கப்படவில்லை. பத்திரிகைக்காரர்கள் இதரபத்திரிகைகளிலுள்ள நற்கட்டுரைகளை யெடுத்தாளுதல் வழக்கமே; அது நல்ல முறையே; எனினும் அவை இன்ன பத்திரிகைகளிலிருந்து எடுக்கப்பட்டன என்னும் விவரம் குறிக்காமல் எடுப்பது பத்திரிகைச்சட்ட விரோதமாகும். இப்பத்திராதிபர் இவ்வாறு விவரங் காட்டாமல் எடுத்ததோடு ஒரே பத்திரிகையில் ஐந்து கட்டுரைகளை எடுத்து நிரப்பிக் கொண்டதைப்பற்றி விசனிக்கிறோம். விவரங்காட்டாமல் வெளிவந்த இவற்றைப் பார்த்தோர் என்ன நினைப்பார்? எல்லாம் இப்பத்திராதிபராலோ இவர் வேண்டுகோளுக்கிணங்கிய பிறராலோ இந்தப் பாண்டிய நேசனுக்கே எழுதப்பட்டன என்றல்லவா கருதுவார்கள். இவ்வாறு உண்மை மறையத்தப்பபிப்பிராயம் உண்டாகுமாறு இந் நண்பர் செய்தது பத்திராதிபர்கட் குரியதன்று. இனி இத்தகைய வியாசங்களை நண்பர் எடுத்தால் இன்னதிலிருந்து எடுக்கப்பட்டவை என்னும் குறிப்புடன் வெளியிடுமாறு இவருக்கு நட்பு முறையில் தெரிவிக்கிறோம்.

பத்திராதிபர்,
ஆனந்தபோதினி.

---

## நடுவெழுத்து வினா.

அடியிற்கண்ட நடுவெழுத்து வினாவிற்குச் சரியான விடை 1927 ௵ மார்ச்சு ௴ 5௳க்குள் நமக்குவந்து சேரும்படி எழுதுவோரின் பெயர்களை எழுதி லாட்டரிபோட்டு அதில் முதலில் எடுபடும் பெயருள்ளவர்க்கு ஒரு வருஷத்துக்கு நமது ஆனந்தபோதினிப் பத்திரிகை இலவசமாக அனுப்பிவருமாறு மதுரைஜில்லா, சொக்கநகரம் A. R. M. உடையப்ப செட்டியார் என்பவர் ஒருவருடம் சந்தாத்தொகையை நமக்கு மணியார்டர்செய்து ஷ வினாவையும், அதற்குரிய விடையையும் விளக்கமாக எழுதி யனுப்பியிருக்கிறார். ஆதலின், மேற்கூறிய விவரப்படி சரியான விடை எழுதுவோரில், லாட்டரியில் முதலில்வரும் பெயருள்ளவர்க்குப் பத்திரிகை அனுப்பப்படும். அறிவின் மிக்காராகிய அன்பர் விடை யெழுதுவாராக.

பங்குனி ௴ பத்திரிகையில் பிரைஸ் வந்தவரின் பெயர் தெரிவிக்கப்படும்; 5—3—27 க்குமேல் வரும் விடைகள் கவனிக்கப்படமாட்டா. இத்தேதிக்குள் விடை லெட்டர்கள் நமக்கு வந்து சேரும்படி அனுப்பப்படவேண்டும். வினாக் கொடுத்தவர் தெரிவித்திருக்கும் விடைக்குச் சரியாய்வரும் விடைகளே லாட்டரிக்குச் சேர்த்துக்கொள்ளப்படும்.



வினா:

1. நீர்வாழ் ஜந்துக்களில் ஒன்றின் பெயர்
2. நாளின் பெயர்
3. பக்ஷிகளி லொன்றின் பெயர்
4. நக்ஷத்திரங்களி லொன்றின் பெயர்
5. உலோகங்களி லொன்றின் பெயர்
6. இராசிகளி லொன்றின் பெயர்

இந்த ஆறுபெயர்களும் மூன்றெழுத்துப் பெயர்களாகவே யிருக்கவேண்டும். அவற்றின் நடுவெழுத்துக்களை யெடுத்து முறையேகூட்ட அக்கினிதேவனின் பெயர்களில் ஒன்று அமையவேண்டும். அது, வினாக்காரர் குறிப்பிட்ட பெயராகவே யிருக்கவேண்டும்.

பத்திராதிபர்,
ஆனந்தபோதினி.

## வர்த்தமானக் குறிப்பு.

**ஓரதிசயக் காக்கை:**—கோயமுத்தூரில், வெள்ளையும் கருப்பும் கலந்த பொரிநிறமும், வெள்ளைநிறமுள்ள மூக்கும் உடைய ஒரு காக்கையைத் தாமும் பலரும் கண்டதாக ஷ யூரிலிருக்கும் நம் 5037 நெ-ர். சந்தாதாரராகிய கிருஷ்ணசாமி பண்டிதர் தெரிவிக்கிறார்.

**இங்கிலாந்துக்கும் இந்தியாவிற்கும் ஆகாய விமானம்:**—1927-ம் ௵ ஜனவரி ௴ முதற்கொண்டு இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு ஆகாய விமானப் போக்குவரவு ஸ்தாபிக்கப்படுமென்று நாம் அறிகிறோம்: முதன் முதல் ஆகாயவிமானக் காரியதரிசி ஸர் ஸாம்யுவல் ஹோர் என்பவர் மாட் ஹோர் சீமாட்டியோடு விமானவழியாய் இந்தியாவிற்கு வருவர். மூன்று விமானங்கள் ஒரே தடவையில் புறப்படும். ஆகாயவிமானச் சேனைத்தலைவரின் பிரதிநிதியான ஸர் ஸெப்டன் ப்ராங்கரும் அப்பொழுது அதில் வருவார். முதலில் மூன்று விமானங்கள் ஜனவரிமாதத்திற்குள் முடிந்து வெளிவரும். பிறகு ஐந்து புறப்படும். இவ்வேற்பாடாக, நிர்மானுஷ்யமான-கஷ்டமான இடங்களில்கூட தங்குவதற்கு வசதியான இடமும், ஆகாரத்திற்குத் தகுதியான சத்திரங்களும் அமைக்கப்பட் டிருக்கின்றன.

**அமெரிக்காவின் கோடீஸ்வரர்கள்:**—அமெரிக்க கஜானாவின் முக்கிய காரியதரிசியான மிஸ்டர் மாக்காய், அமெரிக்காவின் கோடீஸ்வரர்களின் தொகை குறைந்து வருவதாகவும், போகப்போக இன்னும் குறையுமென்றும் இங்கிலீஷ்மன் பத்திரிகைக்குத் தெரிவித்திருக்கிறார். வருமான வரும்படியைக் கொண்டு கணக்கிட்டதில் 11,000 கோடீஸ்வரர்கள் இப்பொழுது அத்தேசத்தில் இருப்பதாகத் தெரிவிக்கிறார்.

**நோபில் பிரைஸ்:**—1925-ம் ௵த்திற்குரிய நோபில்பிரைஸ் ஸர் ஆஸ்டன் சாம்பர்லென் என்பவருக்கும் ஜெனரல் சார்லஸ் டாஸ் என்பவருக்கும் கொடுக்கப்பட்டது.

## மர்மங்கள் வெளியாய்விட்டன !

## எதன் மர்மங்கள்?

# மணவாழ்க்கையின் மர்மங்கள்

ஏழைகளிடம் பணம் பறிக்கும் பொருட்டுப் பற்பலவிதமாய் ஏமாற்றி எழுதப்படும் பழிப்புக்கிடமான நூல்போலன்று இது. தகுந்த ஆங்கில, ஆயுர் வேத, யூனனி மேற்கோள்களைக்கொண்டு, பார்க்கப் பார்க்கக் கண்ணைப்பறிக்கும் பற்பல அழகிய உருவப்படங்களுடன் மேலோரின் குடும்பவாழ்க்கையின் சாஸ்திரோக்தம்போல் எழுதப்பட்டிருக்கும் குடும்ப ரகஸ்ய இன்ப நூலாகும். இதைக் கண்ணால் காண்பதே பாக்கியம்; கையி லெடுப்பதே போக்கியம் மிக அழுத்தமான காகிதத்தில் அதிக அழகாக அச்சிட்டுப் பளபளப்புடன் நேர்த்தியாக பைண்டு செய்யப்பட்டிருக்கும் கனதியான கிரந்தமாகும். இது வரை முதற்பதிப்பும் இரண்டாம் பதிப்பின் ஏராளமான பிரதிகளும் விலையாய்விட்டன. எஞ்சி நிற்பவை கொஞ்சமே! கையிலெடுத்தவர் ஒருபோதும் கீழே வைக்க மனந்துணியார். இன்றே எழுதுங்கள்! பிந்தினவருக்குப் பிரதி கிடைப்பது அரிதாய்விடும். முதன்முதல் எம்மால் வெளியிடப்பட்ட "கோகோகக்கோலம்" என்னும் நூலின் திருத்திய விரிநூலாகிய இம் "மணவாழ்க்கையின் மர்மங்கள்" விலை ரூபா 2—4—0 தான். வி. பி. சார்ஜ் வேறு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கர்ப்ப சாஸ்திரம் | 1 | 8 | 0 | சரீர மர்மசாஸ்திரம் | 1 | 0 | 0 |
| சதிபதிகளின் மர்மம் | 1 | 0 | 0 | மதனாதி ரஹஸ்யம் | 1 | 0 | 0 |
| ஸ்திரீபுருஷ ரகசியம் | 1 | 8 | 0 | ரதிமதனசிருங்காரரஹஸ்யம் | 1 | 0 | 0 |

### வடுவூர். கே. துரைசாமி ஐயங்கார் எழுதியவை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பூர்ண சந்திரோதயம் 1,2,3,4 | ரூ7 | 8 | சௌந்தர கோகிலம் 2பாகம் | ரூ. 3 | 12 |
| மாயாவிநோதபரதேசி 1, 2 | 5 | 0 | வஸந்த மல்லிகா | 1 | 8 |
| மதனகல்யாணி 1,2,3 | 4 | 8 | வித்யாஸாகரர் | 1 | 4 |
| கும்பகோணம் வக்கீல் 1,2 | 3 | 0 | வசந்தகோகிலம் | 1 | 0 |
| மேனகா 1,2 | 3 | 0 | திவான் லொடபடசிங் பகதூர் | 0 | 12 |
| விலாஸவதி 1,2 | 3 | 0 | திலோத்தமா | 0 | 12 |
| கனகாம்புஜம் 1, 2 பாகம் | 2 | 12 | மங்கையர்பகட்டு | 0 | 12 |
| பாலாமணி | 2 | 8 | மாணிக்கவாசகர் | 0 | 8 |

### தி. ம. பொன்னுசாமிப்பிள்ளை எழுதியவை.

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| கமலாக்ஷி | 1 | 12 | ஞானசம்பந்தம் | 1 | 4 |
| ஞானபிரகாசம் | 1 | 8 | சிவஞானம் | 1 | 4 |
| ஞானாம்பிகை | 1 | 8 | விஜயசுந்தரம் | 2 | 0 |

### ஜெ. ஆர். ரங்கராஜு எழுதியவை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விஜயராகவன் | ரூ. 1 | 0 | மோஹனசுந்தரம் | ரூ. 0 | 12 |
| இராஜேந்திரன் | 1 | 0 | ஆநந்தகிருஷ்ணன் | 0 | 12 |
| இராஜாம்பாள் | 0 | 12 | வரதராஜன் 2-பாகம் | 2 | 0 |
| சந்திரகாந்தா | 0 | 12 | ஜெயரங்கன் அச்சில் | | |

விலாசம்:—ஆரியன் புத்தகசாலை, 19, தாண்டவராய முதலி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

# பெருங்காயம்.

அநேகர் உணவை, இனிமையும்படுத்தி ஜீரணிக்கவும் செய்யும் நல்ல பெருங்காயம் கிடைப்பது அரிதா யிருக்கின்றதென்றும், அதில் உயர்ந்ததை தயாரித்துப் பலருக்கும் உபயோகமாகும்படி வியாபாரஞ் செய்யவேண்டுமென்றும் எங்களைக் கேட்டுக்கொண்டபடியால், இப்போது மேலான பெருங்காயம் விற்பனைக்குச் சித்தப்படுத்தி வைத்திருக்கிறோம். இந்தப் பெருங்காயம் உயர்ந்ததாயும், வியாதிகளைக் கண்டிக்கக்கூடியதாயும், விலை சரசமாயும் நம்மிடத்தில் கிடைக்கும்.

வேண்டுவோர்கள் தெரிவித்து வரவழைத்துக்கொள்ளலாம்.

1-இராத்தல் அல்லது 1-பவுண்ட் ரூ. 2.
½-இராத்தல் ரூபா 1-1-0.
} தபாற்கூலி வேறு.

# புத்திர சந்தான எண்ணெய்.



ஆண்மலடு சொன்னாலும் சொல்ல லாகும்
அப்பனே பெண்மலடு யாரு மில்லை
என்மலடாய்ப் போவதென்று கேட்பா யாகில்
இயம்புவேன் கருக்குழியில் சோரி சேர்ந்தால்
ஊன்மிகுந்தால் புழுதரித்தால் உதிரங் கெட்டால்
ஓங்கார பிரணவத்தில் வாயு சேர்ந்தால்
தான்மதத்து விபரீதச் சேர்க்கைசெய்தால்
தலையாட்டுப் பேய்பிணியால் தரியாதென்னே.

ஸ்திரீகளின் கருக்குழியினிடத்தில் புழுக்கள் உண்டாகி அவ்வப்போது வித்தைப் புசித்து விடுவதினாலும், விபரீதச் சேர்க்கையாலும், கருக்குழியினிடத்தில் சதைவளர்ந்து சொறிபற்றி இரத்தங் கட்டியிருப்பதாலும், கருக்குழி மதத்துக் கொழுத்திருப்பதாலும், மூலச்சுழியில் வாயு பித்தம் தங்கி யிருப்பதனாலும் கரு, தரிக்காது.

இந்த எண்ணெயைக் காலை மாலை இருவேளையும் 1-அல்லது 2-காசு அளவு உள்ளங்கையில் விட்டுச் சாப்பிடவேண்டியது. இப்படி 15-நாள் சாப்பிட்டால் இது கருக்குழியிலிருக்கும் மேற்படி குற்றங்களை நீக்கி, கருக்குழியைச் சுத்தப்படுத்தி, மறுமாதத்திலேயே கரு, தரிக்கும்படி செய்யும். இது அனுபவமான எண்ணெய். இதற்குக் கடுமையான பத்தியம் கிடையாது.

சிலருக்குக் கரு, தரித்து 2, 3, 4-மாதங்கள் வரையில் தங்கியிருந்து திடீரென்று உடைந்துபோவதுண்டு. இவ்வகைத் தோஷமும் இந்த எண்ணெயால் நிவர்த்தியாகித் தீர்க்காயுளான கரு, தரிக்கும். இதன் விலை ரூபா 2.

# பிளாக் பர்ட் பௌண்டன் பேனா.

விலை  3—8—0

இது பெயர்பெற்ற ஸ்வான் பேனா செய்யும் மேபிடான் கம்பெனியாரால் செய்யப்பட்ட நம்பிக்கையுள்ள உயர்ந்த மாதிரி பிளாக் பர்ட் பேனா.

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## [illegible] எழுத்துப்பெட்டி.




இந்த ரப்பர் எழுத்துப் பெட்டி ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டியது. ஏனெனில் அச்சடிக்க முடியாத சில்லறை வேலைகளை இதனால் முடிக்கலாம். அதுவுமல்லாமல் கார்டுகளிலும், கவர்களின்பேரிலும், கடிதங்களின்பேரிலும் அச்சடிக்கவும், இன்னும் அநேக சிறிய வேலைகளுக்கும் இது வெகு அநுகூலமானது. 1-வது A. B. C. D. முதலிய எழுத்துக்கள் ஒவ்வொன்றிலும் 3-எழுத்துக்களும், 1-செட் எண்களும் கூடிய 120 - எழுத்துக்கள் அடங்கிய பெட்டி 1-க்கு விலை ரூபா 1.

2-வது A. B. C. D. முதலிய ஒவ்வொரு எழுத்திலும் 6 - எழுத்துக்களும் எண்களும் கூடிய 250 - எழுத்துக்கள் அடங்கிய பெட்டி 1-க்கு விலை ரூபா 2—4—0

3-வது ஷை 300-எழுத்துக்கள் அடங்கியது விலை ரூபா 2—12—0

இவ்வெழுத்துப்பெட்டியுடன் பேட், சிராவணம், எழுத்துக்களை அடிக்கிக்கொள்ளக் கம்போஸ் ஸ்டிக் ஆகிய 3 சாமான்கள் அனுப்பப்படும்.

## ஷேவிங் செட் என்னும் க்ஷவரத்திற்குரிய சாமான்செட்;

### தற்கால நாகரீகத்திற்கு ஏற்றது.



இதில் உயர்ந்த ஆலோ கிரவுண்ட் க்ஷவரக்கத்தி 1, பிரஷ் 1, ஷேவிங் சோப் 1, முகம் பார்க்கும் கண்ணாடி 1, தோல் பட்டை 1, தீட்டுக் கல் 1, எண்ணெய்ப் புட்டி 1, கத்திரி 1, ஜலம் வைக்கும் கிண்ணம் 1, சென்டுபுட்டி 1, இவைகளைப் பத்திரமாய் வைப்பதற்கு தகரப்பெட்டி 1. இந்த செட் 1-க்கு விலை ரூபா 5 3 0.

விலாசம்:—தனலட்சுமி கம்பெனி தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

---

## மதுரை ஜவுளிகள்

சொந்த நெசவுகளில் தயார் செய்கிறவர்களிடம் வாங்கினால் தரகர்களின் ஏமாற்றமின்றி லாபமடைவீர்கள். உண்மையை அறியுங்கள். உயர்ந்த மல்லில் சாயம்போட்ட சிகப்பு, கருப்பு, பச்சை, புரவுன், ஸ்கவ்ப், முதலியகலர் சேலைகள், தாவணிகள், சித்தாடைகள் கிடைக்கும்:— 2½ முழ அகலம் 18 முழம் நீளம் ரூ. 4-14-0. ஷை 16, 14, 12 முழம் நீளம் ரூ. 4-8-0, 4-2-0, 3-12-0 வரை. ஷை 3 முழம் அகலம் 18 முழம் நீளம் ரூ. 6-8-0, வரை.

2½ முழ அகலம் 18 முழ நீளம் சுண்ணடி சேலைகள் சிகப்பு, கருப்பு, அம்பர்சா 1, 3, 7 புள்ளிகள் போட்டது ரூபா 6-12-0 முதல் ரூபா 8-8-0, வரை. முழுவிபரமடங்கிய காட்லாக் இனாம்.

விலாசம்:—M. R. G. பெருமாளய்யர், ஜவுளிவியாபாரம், (ஆ.) மதுரை.

## [illegible] மானிட ரகசிய சாஸ்திரம்.
(அல்லது)

இதில் வசந்தனுக்கும் சுலோசனைக்கும், வினாவிடை தர்க்கங்களாகவே பெண்களைச் சந்தோஷிக்கச்செய்யும் விதமும், சிசு உற்பத்தி நேர்மையும் செவை கவனிக்கவேண்டிய ஏற்பாடும் உண்மையான ஜாதிபேதங்களும், அவைகளின் லட்சணங்களும், ஆண் பெண் இருவர்களும் இன்புற்றிருக்கும் விதங்களும், இன்னஸ்திரீயை இன்னவர் விவாகம் செய்யக்கூடும் என்றவிதமும், போகம் செய்யவேண்டிய நாளும், நாழிகையும், இன்னவிதமாக சுகிக்க வேண்டிய கிரமமும், ஆண் பெண் மலடு விவரங்களும், ருது காலங்களும், அவைகளின் பலாபலன்களும் மாதர்களுக்கு அமிர்தநிலை எந்த காலங்களில் எவ்விடத்தில் இருக்கும் என்பதையும். அதை எவ்விதமாய் நிலை பெயர்க்க வேண்டுமென்பதையும் பிரகஸ்பதிபகவான் தேவேந்திரனுக்கு அருளிச்செய்த உலோகாயத சம்மதமுமான விஷயங்கள் அமைந்துள்ளன. இன்னும் அகால சேர்க்கையால் வரும் கெடுதியும் இதைப்போன்ற அரியபெரிய மர்மங்கள் இந்நூலில் இனிய செந்தமிழ் நடையில் பிரசுரித்திருக்கின்றன. கண்களைக் கவரும் அழகிய சித்திரபடங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 1 0 0

## ஹிப்னடிஸம் மெஸ்மெரிஸ மெனும் (வாயுவேக) மனோவசிய சாஸ்திரம்.

இதை வாசித்து இதில் சொல்லப்படும் விதிகளை அனுசரிப்பதால், இறந்த காலத்தில் நடந்தவைகளையும், பின்னே நடக்கப்போகின்றவைகளையும் உணரலாம். இறந்த நமது முன்னோர்களுடன் பேசலாம். பிறர் கண்களுக்குத் தோற்றாமல் மறைந்துகொள்ளலாம். பிறருக்கு நித்திரை வருவிக்கலாம். நோய்களை நீக்கலாம். ஞானதிருஷ்டிபெறலாம். விரலைக்காட்டிப் பிறரைத் தூங்கவைத்து அத்தூக்கத்தில் விநோதங்களை உண்டாக்கலாம். கீல்வாயுவுக்குச் சிகிச்சை செய்யலாம். அபினிப் பழக்கத்தை நிறுத்தலாம். பிராணாயாமம் செய்யலாம். நீட்டிய கையை மடக்காமலும் மடக்கிய கையை நீட்டாமலுமிருக்கும்படி செய்யலாம். மிருகங்களை வசியம் செய்யலாம். அனேகரை ஒரேமுறையில் தூங்கவைக்கலாம். தீக்குழி பாயலாம். தூரத்திலிருப்பவர்களை வரவழைக்கலாம். ஆஞ்சநேயர்வசியம் செய்யலாம். பிறர்மன வசியஞ் செய்யலாம். பிறர் துர்க்குணங்களைப் போக்கலாம். பொதுஜனவசியம் செய்யலாம். யோகசித்தி பெறலாம். பலவகை ஜெயம் பெறலாம். இன்னும் இதைப் போன்ற அனேக அதியற்புத காரியங்களை யெல்லாம் செய்யலாம். மானிடர்க்கு இவ்வளவு பயன்தரக்கூடிய புத்தகம் கிடைப்பது அரிதாகும். ரூபா 1-8.

"ஆனந்தபோதினி" ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

---

## பாலகலவா என்னும் கம்பிளி டொப்பி.

இந்த டொப்பி முறுக்கேற்றிய கம்பிளி நூலினால் பனியன் போலப் பின்னப்பட்டது. மழை பனி முதலியவை உள்ள பருவங்களிலும், சீதளம் ஜன்னி, தலைவலி, ஜலதோஷம், முதலியவை உள்ள காலங்களிலும் மனிதர் இதனை உபயோகித்தால் தலையில் அவர்களுக்கு அனலுண்டாகி சுகத்தைக் கொடுப்பதன்றி மேற்கண்ட சீதள சம்பந்தமான வியாதிகளையும் நீக்கிவிடும். இதனை சாதாரண டொப்பிகளைப்போல காதுவரையிலும் உபயோகிக்கலாம். ஒவ்வொருவருடைய தலைக்கும் சரியாயிருக்கும். பெரிய சைஸ் 1-க்கு விலை ரூபா 1—8—0



ஷை நடுத்தரம் சைஸ் ரூபா 1—4—0

சின்ன சைஸ் 1-க்கு விலை ரூபா 1—0—0

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## [illegible]தியான பட்டு அங்கவஸ்திரங்கள்

ஐந்தரை முழ நீளம் இரண்டரை முழ அகலம்.



நாகரீகமும் அழகும் வாய்ந்த இந்த நவீன பட்டுக்குட்டைகள் வேண்டியவர்கள் இச்சமயத்தில் நாளைப் போக்காமல் இன்றைக்கே எழுதுங்கள். ஸ்டாக்கிலிருப்பவை செலவழிந்து விட்டபின் 10 ரூபாய் கொடுத்தாலும் இப்படிப்பட்ட குட்டைகள் கிடைக்கமாட்டாவென்பது உண்மை! உண்மை!! மிகவும் நேர்த்தியான பளபளப்போடு கூடிய பட்டினால் செய்யப்பட்ட இக்குட்டைகளை சிரசில் சுற்றிக்கொள்ளலாம். கமிஸ், சட்டை, கோட் முதலிய சொக்காய்களின் மேல்போடும் துப்பட்டாக்களாகவும், ஸ்திரீகள் தாவணியாகவும், சிறு பெண்பிள்ளைகள் தாவணியாகவும் அங்கவஸ்திரமாகவும் உபயோகிக்கலாம். இவற்றில் பச்சை, வெள்ளை, சிவப்பு வெண் சிவப்பு, ரோஸ், ஊதா, நீலம், மஞ்சள், மேகவர்ணம் முதலிய பல நிறங்கள் பொருந்தியவை உண்டு. வேண்டுவோர் இன்ன குட்டை வேண்டுமென்று கடிதம் எழுதி அனுப்பவும். விலை 1-க்கு ரூ. 2-8-0

## எலக்டிரிக் பாக்கெட் லைட்.



எலக்டிரிக் உதவியால் வெளிச்சத்தைத் தரக்கூடிய சிறந்த கைவிளக்கு இது. இதன் பிரகாசம் அதிகமாய் நீண்ட தூரம்வரை தெரியும். இந்த விளக்கு முழுதும் நிக்கல் பாலிஷ்செய்து சிறந்த பூதக் கண்ணாடி வைக்கப் பட்டுள்ளது. இது, சொக்காய் ஜேபியில் வைத்துக்கொள்ளக்கூடிய அவ்வளவு சிறிய அளவில் தயார் செய்யப்பட் டிருக்கிறது. இதில் வைக்கப்பட்டிருக்கும் பட்டன் குமிழை (படத்தில் காட்டியிருப்பதுபோல்) கீழுக்குவர நகர்த்தினால் விளக்கு,தானாய் எரியும்; மறுபடியும் மேலுக்கு அதை நகர்த்தினால் விளக்கு அணைந்துபோகும். நினைத்தபோது இதை எடுத்து உபயோகப்படுத்திக் கொள்ளலாம். இது ஒவ்வொருவரிடத்திலும் அவசியம் இருக்கவேண்டிய கருவி. இவ்வளவு குறைந்தவிலையில் இவ்வித அருமையான விளக்கு இதுவரையிலும் வெளிவந்ததில்லை. ஒருமுறை இதைவாங்கிப் பார்த்தால் இதன் உபயோகமும் வேலைப்பாடும் நன்றாய்த் தெரியவரும்.

பாட்ரியும் பல்பும் சேர்ந்த விளக்கு 1-க்கு விலை ரூபா 2 8 0.

## சாலேஸ்வர மூக்குக் கண்ணாடி.



கிட்டப் பார்வைக்கும் தூரப் பார்வைக்கும் 75-வயது வரையில் உபயோகப்படத்தக்க நேர்த்தியான கண்ணாடிகள் எம்மிடம் உண்டு. கண்ணாடி வேண்டியவர்கள் சரியானவயதைத் தெரிவிப்பதுடன் கிட்டப்பார்வை தூரப் பார்வை ஆகியவற்றில் இன்ன பார்வைக்கென்பதையும் தெரிவித்தால் அவர்க்குத் தக்க கண்ணாடி அனுப்பப்படும். கண்ணாடி 1-க்குப் பெட்டியுடன் ரூ. 1. இக் கண்ணாடிகளில் வெள்ளை தவிர வேறு வர்ணம் கிடையாது.

விலாசம்:- தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதிராஸ்.

## நோய்க் கிடங்கொடேல்

நீங்கள் என் தலைவலிகளுக்கு, ஜலதோஷம், பாரிசவாயு, கீல்வாயு முதலான பலவித நோய்களுக்கு உடன்பட்டு அவஸ்தைப்பட வேண்டும்? சூரியனைக்கண்ட பனிபோல் நோய் இருக்கிற இடம் தெரியாமல் இலகுவில் சொஸ்தப்படுத்துவது நிகரற்றதான

# Amrutanjan

## அமிருதாஞ்சன்

### ஸர்வ நோய்களுக்கு ஸித்தௌஷதம்




அமிருதாஞ்சனம் அபூர்வமானமூலிகைகளிலிருந்து செய்யப்படுகிறது. தோலைப்பற்றிய சொறி சிரங்குகளுக்கும், வெட்டுக்காயம், இருமல் முதலிய உபத்திரவங்களுக்கும் கைகண்ட மருந்து.

விலை அணா 10

### படைத் தைலம்.

இது எல்லாவிதமான படைகளையும போக்கும். விலை டப்பி 1-க்கு அணா 6.

### மோஹினி தைலம்.

ஸ்த்ரீ புருஷர் உபயோகிப்பதற்கு பிரசித்தமானது. 5 தலாம் எண்ணெய் சீசா 1-க்கு அணா 12.

### தந்த சூரணம்.

பல்துலக்க இது நல்ல தூள். பல் வியாதி, ஈறு வலி முதலிய நோய்கள் நீங்கும். விலை டப்பி ஒன்றுக்கு அணா 2.

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

## அமிருதாஞ்சன் டிப்போ,

நெ. 6, தம்புசெட்டி தெரு, மதராஸ்.

## [illegible] வைத்திய சாஸ்திரம்.
### (தமிழ்ப் பதிப்பு)

இப்புஸ்தகமானது, ஔஷதப் பிரயோக மின்றிப் பிணிகளைத் தீர்க்கும் சக்தியை யளிக்கக் கூடியது. ஒருவனை நித்திரை போன்ற மயக்கமடையச் செய்வதற்கு உரிய வழியையும், வியாதிகளையும், கெட்ட பழக்கங்களையும் தீர்த்துக் கொள்ளக்கூடிய பலவழிகளையும் தெரிவிக்கிறது. நரம்புகளினால் உண்டாகும் குத்துவலிகள், வயிற்றுவலி, மலச்சிக்கல், தலைவலி, நரம்புக்குத்தல், பல்வலி, வாதரோகம் முதலிய பல வியாதிகளையும் காந்த சத்தினால் தீர்க்கும் மார்க்கங்களெல்லாம் இதில் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இதில் பல படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.



இதன் விலை ரூபா 1—0—0

## ஹஸ்தரேகை சாஸ்திரம்.

இது, யாவரும் தெரிந்துகொள்ளும்படியான செந்தமிழ் வசன நடையில் எழுதி சுமார் 200 படங்களுடன் அச்சிட்டு வெளிப் படுத்தப்பட்டிருக்கிறது. இதை வாசிக்கும் அனைவரும் தங்களுடைய விவாஹம், ஆயுள், இல்லறச்சுகம், சந்தானம், ஐசுவரியம், தேகசௌக்கியம், தனநஷ்டம், மரணம் முதலிய பல விஷயங்களையும் சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம். விலை ரூபா 2—0—0



இதே புஸ்தகம் இங்கிலீஷிலும் கிடைக்கும். விலை ரூபா 1—8—0

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167,
மதராஸ்.

---

## MAHABARATA—*As. 12 per copy.*
## G. W. M. REYNOLDS'
### BOLD TYPE EDITIONS.

| No. | Title | Vols. | Rs. | A. |
|---|---|---|---|---|
| 1. | Mysteries of the Court of London | 17 vols. | 17 | 0 |
| 2. | Joseph Wilmot | 8 „ | 5 | 0 |
| 3. | Ellen Percy | 8 „ | 5 | 0 |
| 4. | Mary Price | 8 „ | 5 | 0 |
| 5. | Rye House Plot | 4 „ | 3 | 0 |
| 6. | Young Duchess | 4 „ | 3 | 0 |
| 7. | Rosa Lambert | 4 „ | 3 | 0 |
| 8. | Loves of the Harem | 4 „ | 3 | 0 |
| 9. | Margaret | 4 „ | 3 | 0 |
| 10. | Massacre of Glencoe | 4 „ | 3 | 0 |
| 11. | Virgin's Kiss | 4 „ | 3 | 0 |
| 12. | Canonbury House | 3 „ | 2 | 4 |
| 13. | Mysteries of Old London | 3 „ | 2 | 4 |
| 14. | Pope Joan | 3 „ | 1 | 12 |
| 15. | Soldier's Wife | 2 „ | 1 | 8 |
| 16. | May Middleton | 2 vols. | 1 | 8 |
| 17. | Faust | 2 „ | 1 | 8 |
| 18. | Leila | 2 „ | 1 | 8 |
| 19. | Robert Macaire | 2 „ | 1 | 4 |
| 20. | Mary Stuart | 2 „ | 1 | 4 |
| 21. | Seamstress | | 1 | 0 |
| 22. | Alfred | | 1 | 0 |
| 23. | Grace Darling | | 0 | 12 |
| 24. | Young Fisherman | | 0 | 10 |
| 25. | Agnes | 9 „ | 6 | 0 |
| 26. | Kenneth | 4 „ | 3 | 0 |
| 27. | Omar | 4 „ | 3 | 0 |
| 28. | Coral Island | 4 „ | 3 | 0 |
| 29. | Wagner | 3 „ | 1 | 12 |
| 30. | Master Timothy's Book Case | 3 „ | 1 | 12 |
| 31. | Parricide | | 1 | 12 |
| 32. | Stories Told by a Gendarme | | 0 | 12 |
| 33. | Mysteries of Paris by *EUGENE SUE* | | 1 | 0 |

SUPERIOR WATCH & Co., P. B. No. 167, MADRAS.



# இந்த லேகிய செந்தூரங்களால்

## நிவர்த்தியாகும் முக்கிய வியாதிகளாவன:

தற்காலத்தில் மனிதரின் பால்ய சேஷ்டையாலும், இரத்தப் போக்காலும் அவர்க்கு உண்டான 20 வகை மேகரோகங்கள், சூலைரோகம், குன்மரோகம், பித்தபாண்டு, கைகால் முடக்கு, ஒடுவாய்வு, பித்த எப்பம், நெஞ்சு தொண்டை எரிச்சல், வயிற்றுப்பிசம், அஜீரணம், பசியில்லாமை, தாதுஹீனம், தேக உளைச்சல், கண்ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரையில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும்போது பொறுக்கமுடியாத பாதையைத்தரும் தந்திமேகம் முதலியவைகள் ஆச்சரியப்படத்தக்கவிதமாய் நீங்கிவிடும். பயங்கரமான மேக சம்பந்த வியாதிகளைப் பத்தே வேளையில் போக்கி சப்த நாம்புகளுக்கும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்தவிருத்தியைப் பெருக்கிப் பலத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின இலேகிய பஸ்பம் வேறெங்குமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் தேகத்தைப் புஷ்டியாக்கித் தேகத் தடிப்பு, கைக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதிகளைக் கண்டித்து, தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரங்களே முதன்மையானவை யென்பதை யாம் எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க, இந்த லேகிய செந்தூரங்கள், மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்திக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கி யுண்டால் இவற்றின் அபார குணம் தெரியவரும். தவிர யாங்கள் இம்மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரங்களை எவ்வளவு சிறப்பித்துக் கூறியபோதிலும் அது தகும். மேலும் இவற்றை நோய் உள்ளவரேதாம் சாப்பிடவேண்டும் என்ற அவசியமில்லை; யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் இந்த லேகிய செந்தூரங்களை யாதும் பத்தியமின்றிச் சாப்பிட அவர்க்கு நல்ல பலம் ஏற்படும். இது தவறாது. இவற்றைத் தருவித்து நண்பர் எண்ணிக்கையாகச் சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் இல்லாவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் இவற்றிற்கு வாங்கிய பணம் வாப்ஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய்கள் உடையோர் 48-நாட்கள் சாப்பிடுவார்களேயானால் அவை முழுதும் நீங்கிவிடும். அப்படி நீங்கிக் குணம் ஏற்படாவிடில் நாங்கள் அதற்கு உத்திரவாதிகளாவோம். யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரங்களை எவ்வளவோ சிரத்தையுடன் கஷ்டப்பட்டு முடித்துப் பரோபகார்த்தமாக வெளியிட்டோம். இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களுக்குப் பொன் மெடல், வெள்ளிமெடல், பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதா பத்திரங்களும் பெற்றிருக்கின்றோம். ஆதலின் நமது லேகிய செந்தூரங்கள் யாம் சொன்னபடி குணத்தைக் கொடுக்கும் என்றதைப்பற்றி ஜவாப்தாரியாயிருக்கக் காத்துக்கொண்டிருக்கிறோம்; இது உண்மை. இவற்றை ஒரேதரம் தருவித்துப் பாருங்கள்; எமது உண்மை விளங்கும்.

வாதாதிக்க தோஷத்தினாலாவது, தாப்பியாசத்தினாலாவது, அதிக மனக்கவலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, மற்றெந்தக் காரணத்தினாலாவது பலமிழந்தவர்கள் எண்ணிக்கையாக ஷை லேகிய செந்தூரங்களைப் புசிப்பார்களானால் இவை தேகாரோக்கியம், வலிமை, அழகு முதலியவற்றை அவர்க்குக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்யுமென்பதில் தடையில்லை. வெளியூர்க் கனவான்கள் இந்த லேகிய செந்தூரங்களில் முழு நம்பிக்கைவைத்து ஒரே ஒருதரம் இவற்றைப் பரீக்ஷிப்பார்களானால், அவர்கள் அவசியம் ஆனந்தமடைவார்கள்.

இந்த லேகிய செந்தூரங்களுக்குப் பத்தியமே கிடையாது. எந்தப் பண்டங்களையும் நீக்குதலின்றி மருந்து சாப்பிடும் காலத்தில் வயிற்றிற்குத் துரோகம் செய்யாமல் சாப்பிடலாம். இவற்றைச் சாப்பிடும்போது பசி அதிகமாய் எடுக்கும். ஆதலால் பச்சைப்பயற்றுக் குழம்பு, தயிர், பால், கறி, மாரக்கண்டு, உப்பு, நெய் இவைகளை அதிகமாகப் பசியைத் தணிக்கக்கூடிய விதமாகத் தாமதம் செய்யாமல் சாப்பிட்டுவரவேண்டியது. இவற்றைப் புசிக்கும்போதெல்லாம் பலகாராதிகள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள் எவைகளாயிருந்தாலும் சந்தேகமின்றிச் சாப்பிட்டுவரலாம்.

இவ்வருமைவாய்ந்த லேகிய செந்தூரங்களை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48 நாள் சாப்பிடுவாரே யானால் இவை தேகத்தில் ஊறஊற, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி அவர் தேகமானது வலுத்துப் புதிய ரத்தம் பரவித் தன் வாழ்நாள் பரியந்தம் இளைக்காமலிருக்கும். அவரும் அகக்களிப்போடு ஆஜானுபாஹுவாய் விளங்குவார். இவற்றைப் புருஷன் பெண்ஜாதி இருவரும் ஏககாலத்தில் ஒற்றுமையாய்ச் சாப்பிட்டு வந்தார்களேயானால் அவர்க்கு உதிக்கும் மக்கள் யாதொரு நோயுமில்லாமல் மிகுந்த தேஜஸோடு தோன்றுவார்கள். இது உண்மை. இதைப்பற்றி இன்னும் அதிகம் எழுதுதல் அனாவசியம். இந்தியா, பர்மா, ஸிலோன் ஆகிய உள் நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ. 1-12-0. போஸ்டேஜ் அணா 6. ஒரே தடவை 48-நாள் மருந்து வாங்குவோர்க்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 4.

பினாங்கு, சிங்கப்பூர், நெட்டால் முதலிய அயல்நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய மருந்து விலை ரூபா 1-12-0 தபாற்கூலி ரூபா 1-4-0.

48-நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 5-8-0. சிங்கப்பூர், பினாங், மலாக்கா முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி. ஆர்டர் இருந்தாலும் முன்பணம் அனுப்பாதவர்களுக்கு மருந்து அனுப்பப்படமாட்டாது.

**விலாசம்:—லேகியம் டிபோ,**
**தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.**

---

# சர்வதேள் விஷ சஞ்சீவினி.

(ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்.)

**பட்டவுடனே விஷம் பறக்கும்! அழுதவன் சிரிப்பான்!!**

**இதில் குணமில்லையென்று நிரூபிப்பவர்களுக்கு 100-ரூபாய் இனாம்.**




நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கையிருப்பாய் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆங்கில யூனானி தமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. இதை நாள்பட வைத்திருப்பதால் இதன் குணம் சற்றும் குறையாது. தேள், நட்டுவாய்க்காலி, செய்யான், பாம்பு, எலி முதலியவற்றின் விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் இது அடியோடு நீக்கக்கூடியது. எண்ணிறந்தோர் இதனால்சுகமடைந்திருப்பது பிரத்தியக்ஷ அனுபவமானதால் இதைப் பற்றி நாம் அதிகம் கூறவேண்டியதில்லை. இது இரண்டுவித மருந்துகளடங்கியது. இதை உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும்.

விலை:—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு அணா 8. தபாற்கூலி அணா 4. டஜன் 1-க்கு ரூபா 5. ஏககாலத்தில் 3-பாக்கெட் வாங்குவோருக்குத் தபாற்கூலி இனாம். வியாபாரிகளுக்கு 100-க்கு 25 கமிஷன் கொடுக்கப்படும்.

---

**விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.**

## சீதபேதி (டிசென்டரி) பவுடர்.



இரத்தபேதி, சீதபேதி, சீதமும் இரத்தமுங் கலந்தபேதி, மலத்துடன் இரத்தம் வருதல், மூலக்கடுப்பு அடிவயிற்றுநோய் முதலான வியாதிகள் குழந்தைகள் முதல் பெரியோர்வரையில் யாருக்கிருந்தாலும் 4-வேளையில் இது அவற்றைத் தப்பாமல் கண்டிக்கும்.

ஒரு புட்டியின் விலை அணா 8.



## கர்ண பிந்து.

காதில் சீழ் வடிதல், காது குத்தல், காது கேளா திருத்தல், காதில் நமைச்சல் முதலிய வியாதிகளுக்கு இந்த மருந்தில் 2-துளி காலை மாலைகளில் காதில் விட்டுவர, காதிலுள்ள நோய்களெல்லாம் நீங்கிவிடும்.

புட்டி 1-க்கு அணா 4.

வி. பி. தபாற்கூலி பிரத்தியேகம்.

## சர்வபடை சம்மாரன்.



சரீரத்தின் இடுக்கான இடங்களாகிய தொடையின் இடுக்கு, அக்குள், இடுப்பு முதலிய இடங்களில் சிறிது சிறிதாகப் படர்ந்து இரவில் ஓயாத நமைச்சலைத் தந்து நித்திரையைப் பங்கப்படுத்திச் சரீரத்துக்கு அதிக கஷ்டத்தை உண்டு பண்ணும் படைகள், ஒரே தடவையில் இந்தச் சர்வபடை சம்மாரன் என்னும் தைலத்தை உபயோகித்த மாத்திரத்தில் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். புட்டி 1-க்கு அணா 4.

## ஓட்டோ லீலா.

எப்போதும் நீங்காத மனோல்லாசத்தை உண்டாக்குவதில் இந்த வாசனைத் திரவியம் மிகவும் சிறந்தது. எல்லோருடைய மனதையும் பிரமிக்கச்செய்து பலர்க்கும் ஆனந்தத்தையும் இன்பத்தையும் தந்து




இதற்கு நிகரான சுகந்த மணமுடைய சென்ட் வேறொன்றுமில்லையென்று ஒவ்வொருவரும் எண்ணும்படி செய்யவல்லது. இதில் ஆல்கஹால் சாராயம் முதலியவைகளின் சம்பந்தமே கிடையாது. இந்த நீங்காத வாசனைத் திரவத்தை உங்களுடைய கைக்குட்டையிலாவது சொக்காய்களின் புறங்களிலாவது தடவிக் கொண்டால் சிறந்த பல புஷ்ப ஜாதிகளின் வாசனை கமழும். ஒரு நந்தவனத்தின் மத்தியில் நீங்கள் இருந்தால், அங்கு நின்றும் உண்டாகும் சுகந்த மணத்தை எவ்வாறு அனுபவித்துச் சுகிப்பீர்களோ அதனினும் பதின்மடங்கு சுகந்தத்தை இந்த அத்தரை உபயோகிப்பதனால் அனுபவிப்பீர்களென்பது திண்ணம்.

கிரயம் புட்டி 1-க்கு அணா 10. ஷை பெரிய புட்டி 1-க்கு ரூபா 1.

## மயிர் போக்கும் சூரணம்.

இதில் கொஞ்ச மெடுத்துத் தண்ணீரில் குழைத்து உரோமமுள்ள விடத்தில்பூசி ஐந்து நிமிஷத்திற்குப் பிறகு ஒரு கடுதாசி கார்டினாலாவது, ஓலை நறுக்கினாலாவது வழித்தால் மேற்படி மருந்து தடவிய விடத்திலுள்ள உரோம முழுவதும் இலகுவாய் நீங்கி மழமழப்பாகிவிடும். வேக்காடு எரிச்சல் முதலாகிய உபத்திரவங்கள் உண்டாகா. புட்டி 1-க்கு அணா 8.

விலாசம்:- தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## சோடாவாட்டர் பவுடர்.

வயிற்று நோயிருப்பவர்களுக்கும் ஜீரணசக்தி யில்லாதிருப்பவர்களுக்கும் இது நல்லது. ஒரு ஆழாக்கு ஜலத்தில் 3-சிட்டிகை சோடாவாட்டர் பவுடர் போட்டால் பொசபொசவென்று பொங்கும். அதை உடனே சாப்பிடவும். ஏப்பம் வரும். உடனே வயிற்றுநோவு நின்றுவிடும். புட்டி 1-க்கு அணா 6.




## யூகலிப்டஸ் ஆயில்.

### (சுத்தமான நீலகிரித் தைலம்.)

வைத்தியத்தில் கைதேர்ந்த ஒரு அநுபோக வைத்தியரால் செய்யப்பட்ட இந்தத் தைலம் வாந்திபேதி, பிளேக்வியாதி, தேள் முதலிய விஷ ஜந்துக்களின் கடி, கத்தி வகையறு, வெட்டுக்காயங்கள், நரம்புச் சுளுக்குகள், தீப் புண்கள், வெந்நீர்பட்டு வெந்த புண்கள், பிளவைகள், புரைபோன இரணங்கள், இன்புளுவென்ஸா, மலேரியா முதலிய சகலவித சுரங்கள், இருமல், கக்குவாய் இருமல், வாய்வுபிடிப்பு, குடைச்சல், வாய்வினால் உண்டாகும் கொடூரமான பல்வலி, தலைவலி, ஒற்றைத் தலைவலி, கண் எரிச்சல், கண் கட்டி. முதலிய நோய்களுக்குக் கைகண்ட ஔஷதம்.

1 அவுன்ஸ் புட்டி 1-க்கு அணா 4.
1 ,, 1-டஜன் (12) க்கு ரூ. 2—8—0

## நரைமயிர் கருக்குந் தைலம்.

தற்காலத்தில் பலவிதமாகச் செய்து விற்கப்பட்டு வருகிற சப்புகள் மயிரைச் செம்பட்டையாகவும் பசுமை நிறமாகவும் சாம்பல் வர்ணமாகவும் ஆக்கி



விகாரப்படுத்தி விடுகின்றன. நமது தைலமோ நரைத்த மயிருக்குப் பூசிய 3 நிமிஷத்திற்குள்ளாக நரைப்பதற்குமுன்பு இருந்த கருமை நிறத்தையும் பளபளப்பையும் உண்டுபண்ணும். மேலே கூறியுள்ள விகார குணங்கள் இதில் உண்டாகமாட்டா. இதைப் பூசியபிறகு முக லட்சணமும் வசீகரமு முண்டாகிறபடியால் வயோதிகரும் வாலிபரைப்போல் தோற்றப்படுவார்கள். இது உண்மை. இதைப்போன்றசிறந்த தைலம் வேறெங்கும் கிடையாது. வேறு எந்த விதமான கெட்ட குணங்களும் இதில் இல்லை. இந்த அருமையான தைலத்திற்குக் கிடைத்திருக்கும் கனவான்களுடைய சர்டிபிகேட்டுகளைக் கணக்கிடல் முடியாது. இதை உபயோகிக்கும் விதம் பார்சலோடு தெரிவிக்கப்படும். விலை ரூபா 1.



## கூந்தல் வளரும் துளி.

இதை நல்லெண்ணெய் அல்லது தேங்காயெண்ணெயில் கலந்து பிரதிதினம் மயிருக்குப் பூசிவந்தால் கூந்தலானது ஆலம் விழுது போல் உண்மையாய் வளரும். அதில் பேன் சேராது; சுண்டு உண்டாகாது; மயிர் உதிராது; வழுக்கைவிழுந்த இடத்திலும் மயிர் முளைக்கும்.

புட்டி 1-க்கு விலை அணா 12.

விலாசம்:- தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி, நெ. 167, மதராஸ்.

## கஸ்தூரி மாத்திரை.



சரீரமானது யாதொரு அபாயத்தையும் அடையாதிருக்க விரும்புவோர் பிரதிதினமும் ஆகாரத்திற்குப்பின் தாம்பூலத்துடனாவது தனியாக வாவது இதைச் சாப்பிட்டு வந்தால் இது தந்த நோய்களைத் தடுத்தும், அஜீரணம் பித்தவாய்வு, ஜலதோஷம் இவைகளைக் கண்டித்தும், ஜீரண சக்தியை உண்டாக்கி வாயிலுள்ள அசுத்த நாற்றத்தைப் போக்கி வாய்ப்புண் முதலியவைகளைத் தடுத்தும் சுகமுறச் செய்யும். கர்ப்ப ஸ்திரீகள் இதனை உபயோகித்தால் பிரசவகாலத்தில் உண்டாகும் ஜன்னி முதலிய ரோகங்களினின்றும் தப்பித்துக்கொள்ளுவார்கள்.

குழந்தைகள் முதல் கிழவர்கள் வரையில் எப்பருவத் தோர்க்கும் உண்டாகும் சுளை, இருமல், சுரம், தலைப்பாரம், நெஞ்சில் கொருகொருப்பு, ஜலதோஷம் முதலியவைகளுக்கு வயதுக்குத் தக்கபடி இதில் ஒன்று முதல் 4- மாத்திரைகள் கொடுக்கச் சுகமுண்டாகும். இது சர்வகுடும்பங்களிலும் இருக்கவேண்டிய முக்கிய ஔஷதம். இதன் விலை புட்டி 1-க்கு அணா 12.

## காப் கியூர் என்னும் க்ஷய அரி.



கப இருமல், இரைப்பு, அல்லது மந்தகாசம், க்ஷயம், சளி இருமல், கக்குவாய் இருமல், பெருத்த இருமல், தொண்டை நோய், சுவாசகாசம், கடினமான ஜலதோஷம், அபாயமான சுழை இருமல், தொண்டையெரிச்சல், தொண்டைக் காகரப்பு, இருமலினால் தூக்கம் பிடியாமை, குளிர்ச்சியான வஸ்துவைச் சாப்பிடுகிறதினாலும் பனியில் நனைவதினாலும் உண்டாகும் சாதாரண இருமல் முதலான வியாதிகளை நாலு தினத்தில் இது கண்டித்துக் கோழையை வெளியில் தள்ளி நன்றாய் அவ்வியாதிகொண்டிருந்தவரை தூங்கச்செய்யும். புட்டி 1க்கு விலை ரூபா 1.

ஐந்தரை முழ நீளம் இரண்டரை முழ அகலமுள்ள

## சர்வமேக நிவாரணத் தைலம்.

இந்தப் பிரசித்திபெற்ற இராஜசஞ்சீவி திராவகத்தை, காலை மாலை இரண்டுவேளைகளிலும் 10 நாட்கள்வரை உட்கொண்டால் வெகு நாட்களாகத் தேகத்தில் ஊறிய மேகரோகங்கள், மேகவாய்வு, தனுர்வாதம், 'முழங்கால்வாதம், குதிக்கால்வாதம், சகலமான தடிப்புகள், மேகரோகத்தால் உண்டான வெடிபபு இரணங்கள், குழிப் புண்கள், புரையோடுகிற புண்கள், திமிர் வாய்வு, கைகால் விரல்களில் மேகநீர் தங்கிய நோய்கள், கிரந்தி முதலிய கிரந்திப் புண்கள், துடைவாழை படைகள், நகக்கணு நோய், சகல மூலங்கள் முதலிய ரோகங்கள், நெருப்பிலிட்ட பஞ்சுபோல்போகும். இது அநேக ஜனங்களின் துன்பத்தை நீக்கிச் சௌக்கியத்தை உண்டுபண்ணி அதிக அனுபவத்திற்கு வந்தது. கடின பத்தியமின்றி, பால், நெய், கறி முதலியவைகளுடன் சாப்பிடக்கூடியதும், பேதி, இளைப்பு, ஆயாசம் முதலியவைகளை உண்டாக்காமல் சுகமாக்கி வியாதிகளைக் கண்டித்துச் சுகப்படுத்தக்கூடியதுமாகிய உண்மையான மருந்து. இதன் விலை ரூபா 1-8-0.




விலாசம்:- தன்லட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## நாராயண சஞ்சீவித் தைலம்.

இத்தைலம் முழுவதும் பச்சிலைகளாலும், பசும்பால் முதலிய சிரேஷ்டமான வஸ்துக்களாலும் ஆயுர்வேத முறைப்படி மிகப் பரிசுத்தமாக தயார் செய்யப்பட்டது. இத்தைலத்தில் ஸ்நானம் செய்வதினால் தலைவலி, ஒற்றைத் தலைவலி, மண்டையிடி, மண்டைக்குத்தல், கண் எரிச்சல், கண்களில் நீர் வடிதல், சாலேஸ்வரம், காதுநோய், தலைப்பாரம், அதிக வெய்யிலினால் உண்டாகும் சிரரோகங்கள், சரீரதாபம், மூளை கொதிப்பு முதலியவைகள் ஆச்சரியப்படும் விதமாய்த்தீரும். தொடர்ச்சியாய்ச் செய்து வரும் இதன் ஸ்நானங்களினால் நரைத்தமயிர் கருத்துவிடும். மூளையைக் குளிரப்பண்ணி அறிவையும் திடச் சித்தத்தையும் உற்சாகத்தையும் உண்டுபண்ணுவதில் இது நிகரற்றது. சாராய சத்து முதலிய ஆங்கில வாசனைகள் இதில் சேர்க்கப்படவில்லை. சுத்தமான பச்சிலை கிழங்கு புல் முதலிய இந்தியவாசனைகளே சேர்க்கப்பட்டிருக்கின்றன. தினம், இதனைத் தலையில் தடவிவாரி வருவதினால் மயிர் கருப்புப்பட்டைபோல் பளபளப்பாகக் கறுத்து ஆலம்விழுதுபோல் நீண்டு வளரும். இன்னும் இது, உஷ்ணத்தைத் தணித்து அபாரமான ஞாபக சக்தியை உண்டுபண்ணி முகவசீகரத்தை உண்டாக்கும். அதிக கஷ்டப்பட்டு வேலை செய்தவர்களும் வெகுதூரம் வழி நடந்தவர்களும் படுக்கும்போது இதில் சிறிது தைலத்தை உள்ளங்கை உள்ளங்கால்களில் தேய்த்துக்கொண்டால் கஷ்டங்கள் எல்லாம் நீக்கிக் காலையில் எழுந்திருக்கும்போது திரேகம் வெகு ஆரோக்கியமாய் இருக்கும். 5 பலம் டின் 1-க்கு ரூபா 1. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.



## ஜி. கியூர் வெள்ளை என்னும்

### கள்ள நோயை 3 தினத்தில் குணப்படுத்தும் மருந்து.

ஆடவர், பல மாதரிடத்தும், வேசியரிடத்தும், பிணியாளரோடும் சம்பந்தப் படுவதினாலும், ஓயாத சிற்றின்ப வனுபோகத்தில் பிரவேசிப்பதாலும் மூலத்தில் அக்கினிகொண்டு, தாது கெட்டு, பிரமேகங்கள், நீரடைப்பு, சதையடைப்பு, வெள்ளை, வெட்டை, கிரந்தி, சூலை, அரையாப்பு, பவுத்திர முதலியவைகள் அவர்க்கு உண்டாகின்றன. அவைகளில் முக்கியமாகிய இரத்தப் பிரமியம், நீர்க்கடுப்பு, நீர்த்தாரை யெரிவு, வெள்ளை, வெட்டை இவைகளுக்கு இதுவே மிகவும் அனுபோகமான மருந்து என்பது உண்மை. இதில் பேதி முதலிய கெட்ட குணங்கள் இல்லை. பத்தியமில்லை. இதை உபயோகிக்கும் விபரப் பத்திரிகை மருந்துடன் அனுப்பப்படும். புட்டி 1-க்கு ரூபா 1.

## கண்நோய் மருந்து.

இது கண் நோய், கண்குத்தல், கூசல், நீர் வடிதல், மங்கல், அந்திமாலை, பீளைகட்டல், சதை வளர்ந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை புருவம் இவைகளில் வலி, கண் புகைச்சல் இவைகளைக் குணப்படுத்தும். மாணாக்கர்களுக்கும், ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் இது மிகச் சிறந்த ஔஷதம். இதை உபயோகிப்பவர் கண்ணாடி போட வேண்டியதில்லை. புட்டி 1-க்கு அணா 8.



விலாசம்:- தன்லட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# சிவப்பிரகாச பல் பொடி.



இந்தச் சிவப்பிரகாச பல் பொடி மற்ற இதர பல் பொடிகளைப் போலிராமல், அதிக சுகர்தமாகவும் பல் வலி, பல்லில் சொத்தை ஈறு வளர்ந்திருத்தல், வாய் ரணம், வாய்நாற்றம் பல்லாட்டம் முதலிய வியாதிகளை நீக்குவது மல்லாமல், பல் நன்றாய்த் தூலங்கும்படி செய்யும். வாயில் சதா கமகம வென்னும் மணத்தை உண்டாக்கிக்கொண் டிருக்கும். ஒரு மாதத்திற்கு உபயோகிக்கக் கூடிய பல்பொடி டப்பி 1-க்கு விலை அணு 2.
6-டப்பிகள் விலை அணு 10.

## நாக்குப் பூச்சியை நாசமாக்கும் பில்லை.

இந்த பில்லைகள் ஒரு வருடத்துக் குழந்தைகட்கு அறை பில்லையும், மற்றவர்கட்கு 1 அல்லது 2 பில்லைகளும் கொடுத்தால் வயிற்றிலுள்ள சிறுகிருமிகள் யாவற்றும் பந்து பந்தாய் வந்துவிடும். 8-பில்லைகள் விலை அணு 6.

# அயத்தங்கத் திராவகம்.

மித்திரர்களே! இந்த அபூர்வ மருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாகக் கண்டிக்கக்கூடியது. இதை அநேக ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினாலாவது வேறு எந்தக் காரணத்தினாலாவது இளைத்துப்போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவிர்த்தி தருவதில் இது நிகரற்ற மருந்தாகும். ஆங்கிலேய முறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து. சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருமல் நோய்கண்டு அவஸ்தைப் படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டே வேளையில் ஆச்சரியமான சுகத்தையடைவார்கள். இதனால் உண்டாகக்கூடிய அநேக குணங்களில் முக்யமான சிலவற்றை இங்கே குறிக்கிறோம்.



இது, நரைத்த மயிரைக் கறுப்பாக்கும், உஷ்ணத்தினாலாவது, புழுவெட்டினாலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும்; இதனால் நீர் வியாதிகள் தீரும். கண்ணெரிச்சல், கைகால் காந்தல் இவை தீரும். இன்னும் இது முகவசீகரத்தை உண்டாக்கும். தேக அசதியை யோட்டும். ஜீரண சக்தியையும், நல்ல பசியையும் உண்டாக்கும். மனதை அதிக உற்சாகப்படுத்தும், நரம்புகளுக்கு அதிக வலுவைத் தரும். தேகத்தில் நல்ல இரத்தத்தைச் சுரப்பிக்கும். க்ஷயரோகத்தை க்ஷணத்தில் தீர்க்கும். வாத பித்த சிலேத்துமங்களாலுண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும். சத்த தாதுக்களுக்கும் நல்ல பலத்தைத் தரும். மூலச்சூடு மூலவாய்வு மலச்சிக்கல் ஆகியவை தீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 15 நாள் சாப்பிட்டால் இது இணையில்லாத ஆனந்தத்தைத் தரும். மனிதர் தாம் இழந்துபோன தேக திடத்தைப் பழையபடி யடைவதற்கு இதைவிட வேறு மருந்தே கிடையாது. ஒருவன் 40 நாள் மருந்தை உட்கொள்ளும்பக்ஷத்தில் வியாதி என்பதே அம்மனிதனின் நிழலைக்கூட அணுகாது அவனுடைய தேகம் வஜ்ஜிரமேயாகும். இதற்கு யாதொரு பத்தியமும் கிடையாது. 20-நாள் மருந்து ரூ. 1. 40-நாள் மருந்து ரூபா 1-12-0.

---

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# எமது சொந்தப் பிரசுரங்கள்.

## இரத்தினபுரி இரகசியம் 2 பாகம் 4 0 0

இதில் மிக்க ஆச்சரியமுள்ளனவும், நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதி முதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருட்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்படுகின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் உணரவேண்டிய இலௌகிக ஆசார விஷயங்களைப்பற்றிய நீதிகள் ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கின்றன.

## அமராவதி 2 பாகம் 4 0 0

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமுமுடையவனாயிருந்தால் அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துகளிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்றாய் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அசம்பாவிதமெனத்தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியையளிக்கும்.

## மஞ்சள் அறையின் மர்மம் 1 8 0

இதுகாறும் அனேகம் துப்பறியும் நாவல்களையும், இதர துப்பறியும் நாவல்களையும் வாசித்திருப்போர் இதனைப் படிப்பதால் இத்தகைய மிக்க ஆச்சரியமும் சாமர்த்தியமுமான துப்பறியும்நாவல் இதுகாறும் எழுதப்படவில்லையென்று எளிதில் உணர்வார்கள். இதில் குற்றம் செய்தவனுடைய சாமர்த்தியச் செயல்களும் குற்றத்தைக் கண்டுபிடிப்பவனுடைய சாமர்த்தியச் செயல்களும் ஒன்றுக்கொன்று இணையற்றனவாகவே யிருக்கும். குற்றம்நடந்த இடத்தின் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

## கமலசேகரன் 1 12 0

இது, ஓர் சுத்தவீரனுடைய அதிசயக்கதை. இக்கதாநாயகன் உயர்குலத்தில் பிறந்தவனே யெனினும் தன் சிறிய தந்தையின் மோசச்செயலால் அனாதைபோல் அன்னியரால்வளர்க்கப்படுவதும், பிறகு தன் தந்தையர்களின் ஆவேசங்கள் இவனெதிரிற்றோன்றி இவனுக்கு வேண்டிய சமயங்களிலெல்லாம் உதவிசெய்வதும் இக்கதையில் மிக்க ஆச்சரியமாகவிருக்கும்.

## குணசுந்தரன் 0 12 0

கீழ்மக்கள் சகவாசத்தால் தீமையே உண்டாகுமென்பது இதனால் நிரூபிக்கப்படுகின்றது. இதில் கதாநாயகன் தன் நண்பனுக்குச் செய்யும் உதவிகளுக்குப் பதில் அவன் செய்யும் தந்திரமான தீங்குகள் ஆச்சரியத்தைக்கொடுக்கும்.

## தினகரசுந்தரி 1 0 0

இதில், இக்கதாநாயகி ஆண்வேடந்தரித்துத் தன் கணவனாகிய செல்வச் சீமானுடைய கோரச் செயலைக் கண்டுபிடிப்பது மிக்க வியப்பாயிருக்கும். அதிலும் இவள் மிக்க துஷ்டரான கள்ளரிடம் சிக்கிக்கொண்டு அவர்களைச் சாமர்த்தியமாய் ஏமாற்றிவிட்டுத் தப்பித்துக்கொண்டு வந்துவிடுவது மிக்க வியப்பாயிரு

## நிமித் 0 2 0

---

போதினி ஆபீஸ், த பெட்டி நெ. 167, மதராஸ்.

9

**சுவர்ணாம்பாள்** 0 12 0

இதில், துப்பறிபவன் கதவிற்பட்டிருந்த ஒரு பெருவிரற்குறியின் அடையாளத்தைக்கொண்டு குற்றவாளியைக் கண்டுபிடிப்பதில் அவனுடைய சூக்ஷ்ம அறிவும் சாமர்த்தியமும் நன்கு விளங்கும்.

**பூங்கோதை** 0 10 0

இதில், பூங்கோதையின் கற்புள்ள நடைக்கையும்,பிதாபக்தியும் எல்லாப் பெண்களுக்கும் நற்புத்திபுகட்டும். அக்கிரமஸ்தரைக் கடவுள் எப்படியும் தண்டிக்கிறார் என்பதும், உத்தமர்க்கு ஆச்சரியமான விதமாய் நல்ல க்ஷேமத்தை யளிக்கிறார் என்பதும் இக்கதையால் நன்கு நிரூபிக்கப் படுகின்றன.

**மின்சாரமாயவன்** 1 8 0

இதில், எலக்டிரிக் கண்ணன் பெரியண்ணன், ஸார்ஜெண்ட் கமலநாதன் இவர்களுடையபெருமை, சுந்தரபூபதி பிரபுவின் பணப்பெட்டிகள் களவாடப் படல், எலக்டிரிக்கண்ணன் பிச்சாண்டிபுரம் பிரயாணம்போவது, கமலநாதன் அதிக சாமர்த்தியசாலியாயிருந்தும் எலக்டிரிக் கண்ணனுக்கு ஐக்கியப்படல், ஜெயதேவியும் அவள் அத்தையும் இரத்னபுரியில் உலாவுதல், முதலியன வேடிக்கையான ஆச்சரியமாயிருக்கும்.

**விளையாட்டுச்சாமான் அல்லது விபரீதக்கொலை** 1 6 0

இக் கதையில் மூன்று அதிசயக் கொலைகள் நடக்கின்றன. குற்றத்தைச் செய்த ஆசாமிகள் மிக்க தந்திர சாமர்த்தியத்தோடு தங்கள் குற்றங்களைச் செய்கிறார்கள். அதனால் ஒரு நிரபராதி கைதுசெய்யப்படுகிறான். கடைசியில் துப்பறிபவனுடைய தைரியமும், துணிகரமும், புத்திசாலித்தனமுமான முயற்சிகளால் மிக்க சாமார்த்தியவான்களான குற்றவாளிகள் கண்டு பிடிக்கப் படுவதும், நிரபாரதி விடுவிக்கப்படுவதும் மிக்க அதிசயத்தை விளைவிக்கும்.

**பத்மாவளி** 0 14 0

இதில் கூறப்பட்ட கள்ளர்களுடையை சாமர்த்தியங்களும், ஒரு பெண் பிள்ளை தன் சாமர்த்தியத்தாலும் தைரியத்தாலும் அக்கள்வர் எண்ணங்களை நிறைவேற வொட்டாமல் செய்வதும், அவர்களின் குற்றங்களைக் கண்டுபிடிக்க ருசுவுகள் கண்டுபிடிப்பதும், ஒரு நிரபராதிமேல் வந்த அபாண்டமான குற்றத்தை ருசுப்படுத்தி அவனைச் சிறைமீட்பதும் படிக்கப் படிக்கச் சந்தோஷத்தை விளைவிக்கும்.

**மதனபூஷணம்** 1 0 0

இதில் குற்றவாளி,உயிரோடிருப்பவளை இறந்துவிட்டவளாகவும், இறந்து போனவளை உயிரோடிருப்பவளாகவும், படித்தோர் நம்பும்படிசெய்வது மிக்க வியப்பை யுண்டாக்கும். அத்தகைய கள்ளனுடைய குற்றங்களைக் கண்டு பிடிக்கும் துப்பறிபவன் சாமர்த்தியத்தையும் படித்துப் பார்ப்பது மிக்க அவசியமானது.

**மலையாள பகவதி** 1 0 0

இது, அடங்கா நகப்பை யுண்டாக்கும் ஓர் அற்புத தமிழ்க்கதை. பேய், பிசாசு, பில்லி, சூனியம் முதலியவற்றின் விநோதங்களும், மாந்திரீகம், பேயாட்டு, கோடாங்கிக்கூத்து முதலிய ஜெகஜால மாயா விநோதங்களும், அண்டப்புளுகர், வண்டிப்புளுகர், வாக்கின்புளுகர், முதலிய சண்டப்பிரசண்ட யுக சண்டமாருதக் கோடையிடிப் பெரும்புலித் திகர்ப்புளுகராகிய பூசாரிகளின் மோசக் கூத்துக்களும், அவுட்டுச்[illegible] [illegible]க்க பல அற்புத விநோதங்களும், இதில் விரிவாகக் [illegible]ம்.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், [illegible] பெட்டி நெ. 167, [illegible]ஸ்.